ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் — ரூ. 3—0<br>6-மாத சந்தா ,, — ,, 1—12<br>வெளி நாட்டிற்கு ,, — ,, 5—0 | ஞாயிறுதோறும் வெளிவரும். | வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.<br>கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.<br>நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு கார்த்திகை-மீ 19-உ (4—12—1932) | மலர் 32.






Dr, R. M. Shastry's

## Ayurvedic Golden Tonic.

(Registered by the Government of India)

"பல டாக்டர்களின் நன்மதிப்புப்பெற்றது."

உத்திரவாதமுள்ளது உடனே பரீட்சித்துப்பாருங்கள்.

மேல்கண்ட கோள்டன் டாணிக்கு தன் குறைந்த மதிப்பு (விலை விலையு)டன், உயர்த்தி விற்கப்படும் இதர ஆயுள்வேத ஔஷதங்களைப் பந்தயத்திற்கு அழைக்கிறதென்றால்! இதன் குண சிரேஷ்டத்தைப்பற்றி இன்னும் எவ்வளதூரம் புகழ்ந்தெழுதுவது:—

உண்மையில்—இரத்தசுத்தி, இரத்தவிர்த்தி, தேகபலம், தேகபுஷ்டி, மனோதிடம், தாதுவிர்த்தி, முகவசீகரம் முதலிய பல நன்மைகளை அடைய விரும்பும் ஆண், பெண் எல்லா வயதோரும் இதை கட்டாயம் ஒரு தடவையாகிலும் உபயோகிக்கும்படி சிபார்சு செய்கிறோம்.

இதனால்—பாண்டு, காமாலை, கை கால் எரிதல், வாய்ப்புண், வாய்நாற்றம், குலேநோய், இருதய அதர்ச்சி, கை கால் வலி, அல்
லது சோர்வுண்டாதல், இடுப்புநோய், மூத்திரத்தோடு தாது போதல், மூத்திரம் பலவித நிறங்களாகவும் அடிக்கடிப்போதல், மலபந்
தம், மலத்தோடு சீழ் அல்லது ரத்தம் போதல், பசியின்மை, பலவித சிரங்குகள், உன்மத்தம், சோம்பல், நாள்பட்ட சரம் முதலிய பல ரோ
கங்களை நிவர்த்திப்பதோடும், ஸ்திரிகளுக்கு மாத—ருதுகாலங்களில் உண்டாகும் தலைவலி, கழுத்திழுப்பு, தலை சுற்றல், வயிற்றுவலி மூட்
டுகளின் வீக்கம், அகால மாதருது முதலிய பல கேடுகளை உண்மையில் நிவர்த்திப்பதில் நிரம்பவும் அனுபவப்பட்டது.

மற்றும்—உட்காச்சலாய் (கணச்சூடு) தசைப்பற்றுக்குறைந்து நாளுக்கு நாள் மெலிந்து இளைத்துப்போகும் மாணவர்களுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் தேக புஷ்டியையும், ஆத்ம சக்தியையும், மூளைக்குப் பலத்தையும் கொடுப்பதில் இது சஞ்சீவிக்கு ஒப்பானது.

15-வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் ஒரு புட்டி டாணிக்கும், மேற்பட்டவர்கள் இரண்டு புட்டி டாணிக்கும் சாப்பிடவேண்டும்.

12 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூபா 1—8—0, வி. பி. சிலவு அணா 15, இரண்டு புட்டிக்கு வி. பி. சிலவு ரூ. 1—7—0.

விலாசம்:— Dr. R. M. Shastry

Ayurvedic Golden Tonic Pharmacy.
Post-Rakah Mines
Singhbum Dist. (N. India.)



வந்துவிட்டது! வந்துவிட்டது!!

## இந்தியாவின் குறைபாடுகள்.

### The Crux of the Indian Problem.

டாக்டர் பராஞ்சிபை அவர்கள் எழுதிய ஆங்கில புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. இந்திய சமுதாய வாழ்க்கையின் சீர்கேட்டை தெள்ளிதில் விளக்கும் சிறந்த நூல். ஒவ்வொருவரும் படிக்கவேண்டியது அவசியம். 175 பக்கங்கள் கொண்டது விலை அணா. 8. குடி அரசு சந்தாதாரர்களுக்கு அணா. 6.

## கடவுளும் பிரபஞ்சமும்.

ஒரு ஆராய்ச்சி நிறைந்த அருமையான நூல். கடவுளைப் பற்றி நாம் கொண்டுள்ள அர்த்தமற்ற பயமும், பக்தியும் மறைந்தோடும். இன்றே ஒரு காபி வாங்குங்கள்.

விலை அணா. 4.

மானேஜர் குடி அரசு புத்தகாலயம்,

ஈரோடு.

## "SUPERSTITION OF KHADI"

A Discussion By S. Ramanathan, Pattabhi Sitharamyya, & N. S. Varadachari in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*

Manager "Kudi Arasu" Erode.

உங்கள்

## கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

### பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

### செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works

Beadon St. Calcutta.

## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.

உள் நாடு ரூ. 3—0—0.

வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—

மானேஜர், "தமிழன்"

ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,

கோலார் தங்கவயல்.

## குஷ்டம்

வெண்குஷ்டம் - பத்து..

சமீபத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில் எழுதவும்.

Post Box No- 11413

Calcutta- (k)

## Read. The 'Citizen'

and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher

The Citizen

86, East Andar Street,

Teppakulam, Trichy.

## 'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை ஆசிரியர்- வி. நைனன்.

வருஷ சந்தா—2—8—0

விலாசம்:—சமத்வபோதினி

டிக்கோயா சிலோன்.

## "குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

தஞ்சாவூர்.
மணியம் பிரதர்ஸ்,
ரயில்வே ஸ்டேஷன் ரோடு.

பாபநாசம். அப்துல்ரசாக் சாயபு,
இரும்புவியாபாரம்.

காஞ்சீபுரம். எம். கே. எல்லப்பன்,
திருப்புக்குடல் வீதி,

கோயமுத்தூர்.
வி. ரங்கராஜலு, நியூஸ்
ஏஜண்ட், ராஜவீதி.

சேலம். சித்தய்யா,
தனலட்சுமி விலாஸ் பேங்க்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மதுரையில் குடி அரசு கிடைக்குமிடம்.

எம். முத்துசாமி
ஜெனரல் நியூஸ் ஏஜன்சி
கீழவெளிவீதி மதுரை.

## ரூபா 3-6-0 க்கு 3-கடிகாரங்களும் இதர வெகுமதிகளும்.

சந்தேகமில்லை, ஆச்சரியமில்லை, உண்மை!

ஆட்டோ சுகந்தராஜ் (இலந்து பூத்த புஷ்பங்களின் சத்து) மணம் மிகுந்தது. 3-நாள் உபயோகத்துக்குரிய புட்டி 3-அணா. படைமருந்து 12



மணி நேரத்தில் பரிபூரண குணம் டப்பி 1-க்கு 3அணா. மேற்படி 2-தினுசுகளும் சேர்ந்தாவது தனித்தனியாவது 18-புட்டிகள் ரூபா 3-6-0 க்கு ஆர்டர் செய்தால், கோல்ட் நிப் பௌண்டன் பேனா 1. 500-கஜம் வரை வெளிச்சம்தரும் பாட்டரி லாம்ப் 1, நூதன கைக்கெடியாரம் 1, பர்மா டைம்பீஸ் அல்லது ரயில்வே மெயில்கார்ட் லீவர் பாக்கெட்வாச் 1-ம், இனாமாக அனுப்பப்படும். ஒவ்வொரு கடிகாரமும் 10 வருடம் உத்தரவாதம். சாமான்கள் பிடித்தமில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப்படும். பாக்கிங் தபால் செலவு தனி.

விலாசம்:—Sharma Brothers & Co.,

Post Box No. 2412, Section 9C,

Calcutta.

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற்கண்ட 6—9—31 ம் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

**நாத்திகரென்போர் நல்லறிவுடையார்.**

# ஆத்திக, நாத்திக வாதம்

## எது மனித அனுபவத்திற்குப் பொருந்தியுளது?

(முதல் பாகம்)

[தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

ஆஸ்திகனென்று கூறுவது, எவ்வளவு உயர்வென்று மதிக்கின்றார்களோ, அவ்வளவு உயர்வுடன் நாஸ்திகனையும் மதிக்கவேண்டும். அப்படிக்கில்லாமற் போமாகில், சைவனும், வேதாந்தியும், மகமதியனும், கிறிஸ்துவனும் பிறமதஸ்தனுக்கும் இழிவு பட்டவனாவான். எப்படியெனில் ஒரு மதஸ்தனுக்கு, வேறு மதஸ்தன், நாஸ்திகனானபடியால் தான்.

கோடான கோடி மனிதர், மேல் நாட்டிலும், கீழ் நாட்டிலும், கோயில்களுக்குப் போவதில்லை. சுவாமியைத்தொழுவதில்லை, இவர்களை நாஸ்திகரென்று கூறாமல் வேறு என்னவென்று அழைப்பது? தனது மதக்கடவுளை தரிசியாதவனும், வணங்காதவனும் உலகில் கோடிக்கணக்காக இருக்கின்றனர். இவர்கள் நாஸ்திகரல்லாமல் வேறு என்னே? நம்மவர்களில் உயர்தரக்கல்வி அடைந்தோரில் பலர், நமது கோயில்களுக்குப் போவதும் இல்லை, அர்ச்சனை செய்வதுமில்லை, கைகூப்பி தொழுவதுமில்லை, இவர்களைநாஸ்திகர்களென்று அழைக்காமல் இருக்க முடியுமா?

அத்வைத வேதாந்தத்தைச்சார்ந்த அத்வைதி சாமான்ய மதங்கள்கூறும் கடவுளையோ, விக்ரகங்களையோ, பூசை, நிவேதனங்களையோ, எல்லாம் வித்தை, அதாவது மாயை அதாவது பொய் என்கின்றான். இவனை நாஸ்திகனென்று அழைக்காமல் இருக்க எப்படி முடியும்?

அல்லது தத்துவ ஞானங்களை எடுத்துக்கொள்ளுவோம். ஆறுதர்சனங்களாகிய (Philosophies) மிமாம்சம், சாங்கியம் வேதாந்தம் முதலியவை தத்துவங்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டேவுள. வேதாந்திகள் கூறும் பிரமத்தை, சாங்கியர் ஒத்துக்கொள்வதில்லை. ஆதலின் வேதாந்திகளுக்கு சாங்கியர் நாஸ்திகராவர். அல்லது மேல் நாட்டுத்தத்துவங்களை எடுத்துக்கொண்டாலும் சரி, எகல் (Hegel) ஞானிக்கு ஸ்பென்சர் (Spencer) நாஸ்திகன்ஷோபனயர்Shopenheur என்ற தத்துவஞானி காண்டுக்கு (Kant) நாஸ்திகன். அதுபோலவே இன்னும்பல தத்துவஞானிகள் மற்றொரு தத்துவ ஞானிகளுக்கு நாஸ்திகனே. இவ்வாறு ஒரு மதஸ்தனுக்கு வேறு மதஸ்தன் நாஸ்திகனாக இருக்க "கடவுளை" இல்லை என்போனை நாஸ்திகனென்று அழைத்தால், அவனுக்கு என்ன குறைவு வந்து விடும்?

இவ்வாதம் இவ்வாறு இருக்க பூதம், பேய், பிசாசு இல்லை என்று கூறுவோன் நாஸ்திகனாகானா? இத்தியாதி பேய் கணங்கள் இல்லை என்று கூறுவோர் அநேகர் இருக்கின்றனர். இவர்களை நாஸ்திகர் என்று அழைப்பதால் என்ன குறைவு?

மதக்கோட்பாடுகளை எடுத்துக்கொள்ளுவோம். மறுஜனன கோட்பாட்டை மகமதியரும், கிறிஸ்துவரும் இல்லை என்று கூறுகின்றார்கள். இவர்களை ஏன் நாஸ்திகரென்று அழைக்கலாகாது? இந்துக்கள் "தீர்ப்பு நாளில்" (Doomsday) இறந்த கிறிஸ்துவர்களும் மகமதியரும் உயிர்த்தெழுவார்கள் என்ற சித்தாந்தத்தை ஒத்துக்கொள்வதில்லை. இவர்களை ஏன் நாஸ்திகரென்று அழைக்கலாகாது? மதஸ்தனுடைய "கடவுளை" மறுத்தாலென்ன? மதஸ்தனுடைய கோட்பாடுகளை மறுத்தாலென்ன? இரண்டும் நாஸ்திகமே.

எந்த மதஸ்தனை எடுத்துக்கொண்டாலும் சரி, வேறு மதஸ்தனுடைய கடவுளையோ, மோட்ச நரகங்களையோ, தூபதீப நைவேதனங்களையோ, கோட்பாடுகளையோ, மறுக்காத மதஸ்தனோ, தத்துவ ஞானியோ உலகில் இல்லை. சங்கரர் மகாபாஷ்யத்தைப்பாருங்கள். தனது மதத்தைதவிர ஏனைய மதங்களையும், கொள்கைகளையும், தத்துவங்களையும் உண்மை அல்லவென சங்கர பாஷ்யத்தில் மறுக்கப்படுகிறது. அல்லது சர்வதர்சன சங்கரகத்தை பார்த்தாலும் சரியே. அதன் துவைதக்கொள்கைகளுக்கு மாறுபட்ட ஏனைய மதங்களின் கடவுளையும், சித்தாந்தங்களையும், கோட்பாடுகளையும், மறுக்கின்றதைக் காணலாம். "மகா பாஷ்யத்திற்கு" மற்ற ஆஸ்திகமெல்லாம் நாஸ்திகமே. "சர்வதர்சனத்திற்கு" மகா பாஷ்யத்தில் கூறியுள்ள பிரமாணம் நாஸ்திகமே. மேல் நாட்டு தர்சனங்களாகிய (Philosophies) (Spencerian) ஸ்பென்சிரியன், (Kantian) கான்டியன், (Shopinheuran) ஷோப்னரியன், Hegelian) கெலியன், (Hume) யூம், (Lock) லாக், (Dcscarte) டெகார்ட், (Berkalay) பெர்கலே முதலியோரின் தத்துவங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவே காணப்படும். ஒருவர் சொன்னதை மற்றொருவர் ஒத்துக்கொள்வதில்லை இவர்களில் ஒருவரையொருவர் நாஸ்திகனென்றே சில வேளையில் குறிப்பிடுகின்றார்கள்.

இவர்களில் எவர்களை உண்மையான ஆஸ்திகர்கள் என்று கேட்கிறோம்? உண்மையான ஆஸ்திகனாகாவிடில், அவனை நாஸ்திகனென்று அழைப்பதற்கு என்ன தடை? இந்நியாயத்தால்தான் சைவவைணவர், வேதாந்தியை நாஸ்தீகன் என்று அழைக்கின்றார்கள். வேதாந்தியை நாஸ்திகன் என்றால் வேதாந்தியின் "பிரம்மனை" இல்லை என்போனை நாஸ்திகனென்று அழைப்பதால் என்ன குறைவு என்று கேட்கின்றோம். சிறு பிள்ளைத்தனமாக ஒருவனை நாஸ்திகனென்று இழிவுப்படுத்தலாமேயொழிய விவேகசாலிகளால் நாஸ்திகன் நன்கு மதிக்கப்படுவானென அறிக.

இவ்விரண்டு பேரில் யார் உண்மையில் யோக்கியன் என்று அழைக்கவேண்டுமென்பதை சற்று விசாரிப்பாம். யோக்கிய பொருப்புக்கு வேண்டியதென்னவெனில் நமது நம்பிக்கைக்குக் காரணம், அதாவது அஸ்திவாரம் இருத்தல்வேண்டும். நம்பிக்கைக்கு காரணமில்லாமற்போமாகில் அந்த நம்பிக்கையை கைவிடவேண்டும். எதை நம்பினாலும் சரி, அதற்கு தகுதியான காரணம் இருத்தல் அவசியம். காரணமில்லாமல் நம்புவது ஒழுங்கற்ற தனமாகும். வாழ்வுக்குறிய விஷயங்களில் நம்பவேண்டுவதற்கு முக்கியமாகக் காரணங்கள் வேண்டும். வாழ்வைக் குறித்த விஷயங்களில் காரணமில்லாமல் நம்புவது குற்றமேயாகும்.

இந்த ஞாயப்படி மத விஷயங்களில் நம்பிக்கை வைக்கவேண்டுமானால் தகுந்த காரணத்துடன் தான் நம்பவேண்டும். ஆனால் எந்த மதக்கோட்பாடுகளை நம்புவதற்கு எந்த காரணமுண்டெனக் கேட்கின்றோம்? கடவுள், நரகம், மோட்சம், முதலிய மதக்கோட்பாடுகளுக்கு எவ்வித காரணமாகிலும் உண்டா எனக் கேட்கின்றோம்? இல்லாவிடில் அச்சொற்களை நம்புவது யோக்கியப் பொறுப்பு ஆகா.

"கடவுள்" இருப்பதாகச் சொல்லும் வாதத்திற்கு ஆதாரங்களைக்காட்டுங்கள்" என்ற கேள்விக்கு கடந்த 10,000 வருஷங்களாகக்கொடாமல் வாய்ப்பந்தல்போட்டு உலகை ஏமாற்றி வருகினீர்களே, நீங்கள் யோக்கியர்களா, அல்லது, எந்த மெஞ்ஞான சாஸ்திரத்திலும் (Science) உயிர் சாஸ்திரத்திலாகிலும் (Biology) பூதபௌதிகத்திலாகிலும் (Physics and Chemistry) வான சாஸ்திரத்திலாகிலும் (Astronomy) பூமி நூலிலாகிலும், [Geology] மற்ற வெவ்வேறு மெஞ்ஞான நூல்களிலாவது, கடவுளுக்கு ஆதாரவு எங்குமில்லையே, அத்தகைய பொருள் இருப்பதாக நான் எப்படி நம்புவதென்று கூறும் நாஸ்திகன் யோக்கிய புருஷனா என்று கேட்கின்றோம்?

உலகில் கோடான கோடி மக்கள் [Sufficient Reason] போதுமான காரணமின்றி "கடவுள்" இருக்கின்றார் என்றாலும்சரி, "கடவுளை" பார்த்தேன் என்றாலும் சரி "பிரமத்தோடு" ஐக்கியமானேன் என்றாலும் சரி அது யோக்கியமாகாது. அல்லது போதுமான சாட்சியம், அதாவது Sufficient evidence இல்லாமல், "கடவுள்", பேய், பூதம், பிசாசு, நரகம், மோட்சம் இருப்பதாக நம்புவதும் யோக்கியமாகாது. பெரியோர்கள் சொல்லுகின்றார்கள், பண்டைகால நூல்களில் சொல்லியிருக்கின்றது. ஆதலால் நான் "கடவுள்" இருப்பதாக நம்புகின்றேன் என்பதும் யோக்கியப் பொருப்பு ஆகா. போதுமான சாட்சியமென்றால், சாதாரண வாழ்வுக்கு வேண்டிய காரணங்கள். நாம் அநேக விஷயங்களை நம்பவேண்டி வருகிறது. சில விஷயங்களுக்குக் காரணங்களை கேட்கின்றோம். சிலவற்றிற்கு, காரணங்களைக் கேட்காமலே நம்பி நடக்கின்றோம். ஆனால் நாம் நம்பி நடந்தாலும் சரி நடக்கா விட்டாலும் சரி, காரணங்களைக் கேட்டால், கொடுத்தே தீரவேண்டும். எல்லோருக்கும் சாதாரண காரணங்களால் நம்பி நடப்பது பழக்கமாய் விட்டது. இருந்தாலும், காரணங்களைக் கொண்டுதான் நம்பி நடக்கின்றோம். திருகூடாத்தமர்க நமது வீட்டில் விஷம் வைக்கமாட்டார்கள் என்றே நம்பி நடந்து போகின்றோம். ஆனால் அதற்கும் காரணமில்லாமலில்லை. பல நாளாய் விஷம் வைக்காமையால், நாளைக்கும் வைக்கமாட்டார்களென்ற நம்பிக்கையுண்டாகின்றது. இத்தியாதி விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்களில் எல்லாம், அவைகளின் காரணங்களை அறிந்தே நடக்க வேண்டியிருக்கின்றது. ஆதலின் தகுந்த காரணமின்றி நாம் எதையும் நம்பி நடப்பதில்லையாதலால் மத விஷயங்களில் மாத்திரம் காரணமின்றியே கடவுளையும், பேய் பிசாசுகளையும், மறுபிறப்பு, கடைசி நாள் [Dooms Day] முதலிய கற்பனைகளை நம்புகின்றோம். இது யோக்கியமா. இது விஷயங்களில் நாஸ்திகன் யோக்கியனாகவே நடந்து கொள்ளுகின்றான். "நீங்கள் சொல்லும் சொற்களுக்கு அதாவது கடவுள், பிரமன், சிவன், விஷ்ணு, அல்லா, ஏகோவா, பரிசுத்த ஆவி, நரக மோட்சம் முதலிய சொற்களுக்கு உறிய பொருள்கள் இருப்பதாக் எவ்

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

# அக்ராரத்தில் 'மகாத்மா'

(ஸ்குதுஉலாஸ்)

இந்நாள் மிகவும் கஷ்டப்பட்டேன், அலைந்தேன், திரிந்தேன், மூலைமுடுக்குகளுக்கெல்லாம் சென்றேன். நமது பார்ப்பனத்தோழர்கள் என்னபேசுகிறார்கள் என்று கவனித்தேன். கடைசியில், ஒரு வாறாக இல்லை இல்லை நிச்சயமாகவே, உண்மை தெரிந்து கொண்டேன். இவ்வாறு நான் கஷ்டப்பட்டதேன்? உண்மை தெரிந்துகொள்ள முயன்றதேன்? என்று நீங்கள் கேட்கலாம். எல்லாம் அந்தப் பரிதாபமனிதர் என்றால் யார் என்று விழிக்காதீர்கள்? அவர்தான் "மகாத்மா" என்று அழைக்கப்படுகின்ற தோழர் காந்தியாவார்.

அவர் கோவில்பிரவேச இயக்கத்தைப்பற்றிப்பேச ஆரம்பித்தது முதல் நான் கஷ்டப்பட்டேன்? எதற்காக இதுவரையிலும் அவரை "மகாத்மா" என்று கொண்டாடிவந்த பார்ப்பனர்களின் உள் அந்தரங்கம் என்ன வென்று அறிவதற்காகவே கஷ்டப்பட்டேன்.

வீணே என்னுடைய முயற்சியைப்பற்றி வளர்த்துக்கொண்டு செல்லுவதில் பயனில்லை சீக்கிரம் உண்மையைச்சொல்லி விடுகிறேன். நான் ஒருநாள் கும்பகோணம் பார்ப்பனச் சேரியில் நுழைந்து கவனித்துக்கொண்டு வந்தேன்? பிரபலமான வைதிகர்களின் வீடுகளையும் கவனித்தேன் பிரபலமான அரசியல் வாதிகளின் வீடுகளையும் கவனித்தேன். எல்லா வீடுகளிலும், "தீண்டாமை" "வைதிகம்" "சாஸ்திரம்" "மதம்" "காந்தி," என்ற வார்த்தைகளே ஒலித்தன. இவைகளின் நடுவில் "எலக்ஷன்" என்ற வார்த்தையும் மெதுவாக கேட்டது ஆகவே இப்பேச்சுகளின் உண்மைகளை அறிய வேண்டுமென ஒரு பிரபல ராஜீய வைதிக வாதியின் வீட்டுத்திண்ணையிலேறினேன் பேச்சைக்கவனித்தேன்; நேரம் இரவு 9 மணி. தெருக்கதவு தாளிடப்பட்டிருந்தது. திண்ணையில் வெளிச்சம் இல்லை. ஆகையால் நானிருந்ததை யாரும் கவனிக்க முடியாது. உள்ளே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளும், இரகசியமாக இருந்தன; மெதுவாக வே பேசப்பட்டன. ஆயினும், திண்ணையிலிருந்து கொண்டு உற்றுக்கவனித்தால் எல்லாவற்றையும் கேட்கலாம்;

அப்பொழுது அவ்வீட்டு காரரை நோக்கி, ஒரு பிரபல வைதிகர்கீழ்க்கண்டவாறு பேசினார்:— "மகாபாபி காந்தி; அவன் நமது மதத்தையும் சாஸ்திரங்களையும் நாசமாக்கப்பிறந்திருக்கிறான். அவன் ஒரு பெரியவேஷக்காரன்; "இந்து மதம்" "கடவுள்" "பகவத்கீதை" "சனாதன தர்மம்" என்ற வார்த்தைகளை உச்சரித்துக்கொண்டிருக்கிறான்; இதனால், சாமான்ய ஜனங்கள் அவனிடம் ஏமாந்து போய்விடுகிறார்கள்; அந்தமதத் துரோகியை மகாத்மா என்று நம்புகிறார்கள்; அந்த சாஸ்திர துரோகியை அவதாரபுருஷன் என்று நினைக்கிறார்கள். அவன் எதுசொன்னாலும், அதைப் பாமரமக்கள் வேதவாக்காக நினைக்கிறார்கள்; அவன் சொல்லுகிறபடி யெல்லாம் நடக்கத் தயாராயிருக்கிறார்கள். இந்துமதம் காப்பாற்றப் படவேண்டும் என்றுசொல்லிக் கொள்கிறான்; ஆனால் இந்து மத தர்மத்தையே அடியோடு அழிக்கப் பார்க்கிறான். "கடவுள்" கட்டளைப்படி நடக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளுகிறான்; ஆனால் தான் தோன்றித்தம்பிரானாக இருக்கிறான்; தான் சொல்லுவதை யெல்லாம், "கடவுள்கட்டளை" என்கிறான்; தான் செய்பவைகளை யெல்லாம் "கடவுள் செயல்" என்கிறான். "பகவத்கீதையை நம்புகிறேன் என்கிறான்; பகவத்கீதையின் படிநடக்கிறேன் என்கிறான்; ஆனால் பகவத்கீதையின் உண்மைத்தத்துவம் ஒரு சிறிதும் தெரியாது; பகவத்கீதைக்கு மாறாகவே நடக்கிறான். சனாதனதர்மம் காப்பாற்றப்பட வேண்டும் என்று சொல்லுகிறான்; தன்னை ஒரு "சனாதனதர்ம இந்து" என்று சொல்லிக்கொள்ளுகிறான்: ஆனால் சனாதனதர்மத்தை அழிக்கவே முயற்சிக்கிறான். இக்தக்காந்தியினால் தான் நமது வைதிகமதம் அழியப்போகிறது. தீண்டாமையை ஒழிக்க இந்து மதத்தில் இடமுண்டா? "கடவுள்" சம்மதிப்பாரா? பகவத்கீதையில் ஆதாரம் உண்டா? சனாதனதர்மத்தில் இடமுண்டா? தீண்டாதார்க்குக் கோயில் பிரவேசம் அளிக்க இந்து மதம் இடங்கொடுக்குமா? 'கடவுள்' ஒப்புக்கொள்ளுவாரா? பகவத்கீதை அனுமதிக்குமா? பகவத்கீதைக்குக் கோவிலே இல்லாமலிருக்கும்போது அது இவ்விஷயத்தில் என்ன கட்டளையிட முடியும்? சனாதனதர்மம் ஒப்புக்கொள்ளுமா? ஆகையினால் காந்தியின் செல்வாக்கை ஒழிக்க முயற்சி செய்யவேண்டும். இன்றேல் நமது நாட்டுக்கு நிச்சயமாக நாசகாலமே சம்பவிக்கும்" என்று பேசினார்.

அய்யர் பேசிய ஆத்திரத்தைக்கண்டவுடன் எனக்குப் பல சந்தேகங்கள் உண்டாயின; கருப்புக்குதிரைமேலோ, அல்லது வெள்ளைக்குதிரைமேலோ ஏறிக்கொண்டு பேசுகிறாரா என்று சந்தேகப்பட்டேன். கடைசியில் ஆத்திரமே அவ்வாறு பேசத்தூண்டியிருக்குமென்று தீர்மானித்துக் கொண்டேன். இவர் பேசப்பேச ரகசியம் பறந்துபோய் விட்டது. நன்றாய்ச்சத்தம் கேட்டது.

இப்பேச்சு முடிந்தவுடன் மற்றொரு சாஸ்திரியார் எழுந்தார். முதலில் மெதுவாகப் பேச ஆரம்பித்தார். கடைசியில் முன்போலவே வரவர ஓசை அதிகரித்து விட்டது. அப்பேச்சு கீழ் வருமாறு:—

"அய்யர்வாள், காந்தியின் துஷ்கிருத்தியங்களை எடுத்துச் சொல்லி விட்டார்; அய்யர் பேசியதில் அணுவளவும் தப்பிதமில்லை; எல்லாம் நிஜமான விஷயங்களே, இச்சமயத்தில், நம்மைச் சேர்ந்தவர்களே, காந்தியின் செய்கைகளுக்கு ஆதாரமாயிருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. பிராமணர்களிலேயே சிலர், காந்தி சொல்லுவதை யெல்லாம் ஒப்புக் கொள்ளுகிறார்கள்; பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தையும், சுயமரியாதைக் கக்ஷியையும் ஒழிப்பதற்கு என்று எவ்வளவைத்தான் பொருத்துக்கொண்டிருக்கிறது? தீண்டாமை விலக்குப் பிரசாரம் உண்மையிலேயே பண்ண ஆரம்பித்துவிட்டார்கள்; கோயில் பிரவேசம் வேண்டுமென்கிறார்கள்; இவர்களும், காந்தியுடன் சேர்ந்து கொண்டு தீண்டாமை இல்லை யென்கிறார்கள். இதுவரையிலும், சுயமரியாதைக் காரர்களால் நமக்கு ஒன்றும் அதிக நஷ்டம் வந்து விடவில்லை. அவர்களை நாஸ்திகர்கள் என்றும், தேசத்துரோகிகள் என்றும் சொல்லிக் கொண்டு சும்மா இருந்துவிட்டோம். இப்பொழுது, நம்மோடு சேர்ந்திருந்தஇவர்களால்தான் நமக்குப் பெரிய கஷ்டம் வந்திருக்கிறது. காந்தியுடன் சேர்ந்து கொண்டிருக்கும்பார்ப்பனர்கள்குலத்துரோகிகள்; குலத்தைக்கெடுக்கும் கோடரிக்காம்புகள், அவர்களையெல்லாம்ஜாதிப் பிரஷ்டம் பண்ணுவதைத் தவிர வேறு வழியில்லை. எங்கெந்தப்பார்ப்பனர்கள் தீண்டாமை விலக்குப்பிரசாரம் பண்ணுகிறார்கள்; கோயில் நுழைவுப்பிரசாரம் பண்ணுகிறார்கள்; காந்தியின் கொள்கைகளை ஆதரிக்கிறார்கள்; என்று ஒரு கணக்கு எடுக்க வேண்டும்; அவர்களை யெல்லாம் சமூக பகிஷ்காரம் பண்ணவேண்டும் இதைத் தவிர வேறு வழியில்லை" என்று கூறி முடித்தார்.

உடனே ஒரு ராஜீயப் பார்ப்பனர் எழுந்தார்; அதாவது கோயில் பிரவேசத் தீண்டாமை விலக்குப்பார்ப்பனர் எழுந்தார்; அவர் கீழ் கண்டவாறு பேச ஆரம்பித்தார்:—

"பெரியோர்களே! நீங்கள், வீணாக காந்தியுடன் சேர்ந்திருக்கும் எங்களைக் கோபிக்க வேண்டாம். காந்தியின் மேல், உங்களுக்கு எவ்வளவு ஆத்திரம் உண்டோ அவ்வளவு ஆத்திரம் எங்களுக்கும் உண்டு; நாங்களும் உங்களைப் போல் திடீரென்று ஆத்திரத்தை வெளியிட்டு விடக் கூடாது; ஏன்என்றால்காந்தியைவிட்டுப்பிரிந்து விடக்கூடாது. அவ்வாறு செய்தால் நிலைமை இன்னும்மோசமாகப் போய் விடும்; கொஞ்ச நஞ்சம் நமக்குள்ள செல்வாக்கும் ஒழிந்து போய்விடும். உலக நிலை உங்களுக்குத் தெரியவில்லை; சமய சந்தர்ப்பங்களை நீங்கள் அறிய மாட்டீர்கள்; நமது தென்னாட்டின் நிலை எப்படியிருக்கிற தென்றே உங்களுக்குத் தெரியாத போது, மற்ற நாடுகளின் நிலைமை எப்படி உங்களுக்குத் தெரியும்; தென்னாட்டில் மூலை முடக்குகளில் எல்லாம் சுயமரியாதை இயக்கம் புகுந்து விட்டது; அது, முதலில் மதத்தைச் சீர்திருத்தம் பண்ணவேண்டுமென்று ஆரம்பித்தது. இப்பொழுது மதத்தையே அழிக்க வேண்டுமென்று புறப்பட்டு விட்டது. அதன் கிளர்ச்சியினால் நமக்கும் நமது சாஸ்திரங்களுக்கும் கொஞ்சங்கூட மதிப்பில்லாமல் போய் விட்டது. ஆகையால் தான் நாம் காந்தியின் பெயரை உபயோகப் படுத்த வேண்டியதாகி விட்டது; அவரை நாமே "மகாத்மா" வாக ஆக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவரும், சுயமரியாதை இயக்கத்தை அடக்கவே எண்ணங்கொண்டிருக்கிறார்கள். அவர் சொல்லும், சீர் திருத்தங்களைச் செய்தால் தான் மதத்தை நிலைக்க வைக்க முடியும் என்று நம்புங்கள். அவர் மதத் துரோகியல்ல; சத்திரத் துரோகியல்ல. உண்மையிலேயே அவர் மதத்தை அழிக்க விரும்பினால் நாங்கள் அவருடன் சேர்ந்திருப்போமா? அவர் வர்ணாச்சிரம தர்மத்தையாவது பகவத் கீதையையாவது சனாதன தர்மத்தையாவது குற்றம் சொன்னால் நாங்கள் விட்டுவிடுவோமா? சுயமரியாதைஇயக்கம் ஒழிந்தால் பிறகு இவற்றிற்கு வேறு வியாக்கியானம் சொல்லச் செய்துவிட மாட்டோமா? ஆதலால் சந்தேகப்படாதீர்கள். நாங்கள் அவருடன் சேர்ந்திருப்பதால்தான் எந்த காரியமும் காரியத்தில் நடக்காமல் பார்த்துக் கொள்ளலாம். ஒரேயடியாக அவர் கூறுவதை எல்லோரும் மறுப்போமானால் பிறகு அவரும் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து விட்டால் என்ன செய்கிறது. ஆகையால் அவர் சொல்லுவதற்கெல்லாம் ஆகட்டும் என்று தலையாட்டிக்கொண்டே நம்ம காரியத்தை நாம் சாதித்துக் கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் கூச்சலை நிறுத்த வேண்டாம்; காந்தி சொல்வதெல்லாம், மதத்திற்கு விரோதம்; சாஸ்திரங்களுக்கு விரோதம் என்று சத்தம் போடுங்கள்; நாங்கள் காந்தியின் உண்மைச் சிஷ்யர்கள் போல நடித்து வருகிறோம். பிறகு மதத்துக்கும் சாஸ்திரத்திற்கும் நமது வியாக்கியானத்தை செய்து விடலாம் அதற்கேற்ற சட்டங்களும் அதாவது மதத்தில் சாஸ்த்திரத்தில், பழக்க வழக்கத்தில் யாரும் பிரவேசிக்கக்கூடாது என்று காங்கிரசிலும் வட்ட மேஜை மகாநாட்டிலும் தீர்மானங்கள் செய்தாய் விட்டது, காங்கிரசும் ஒப்புக்கொண்டு விட்டது. நிற்க காந்தி தீண்டாமை

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

# ரஷியாவில் வீடு வினியோக முறை.

சோவியத் [பஞ்சாயத்து] ஆக்ஷி உள்ள ரஷியாவில் அங்குள்ள குடி ஜனங்களுக்கு பஞ்சாயித்து ஆக்ஷிமூலம் வீடுகள் வினியோகிக்கும் முறையானது அதிக கவனிப்பு, புத்திசாலித்தனமும் சமதர்ம நோக்கமும்கொண்டதாகும்.

வீடுகள் வினியோகிப்பதில் முக்கியமாக அவர்கள் கவனிக்கும் விஷயம் என்னவென்றால் பெரிய பட்டணங்களில் வீடுகளின் நெருக்கியை ஒழிப்பதும், வீடுகளின் அமைப்புகளை சுருக்கமானதாகவும் தாராள வசதிகளுக்கு ஏற்றதாகவும், சுகாதாரம் முதலிய மற்ற வாடிக்கை சௌகரியத்திற்கு ஏற்றதாகவும் இருக்கும்படியாகவே கவனித்து வருவதாகும்.

## குடி இருப்பு அளவு.

ஒவ்வொரு தொழிலாளியும் தனக்கு [ஒரு நபருக்கு] 8¾ மீட்டர் அதாவது 9 சதுர கெஜம் விஸ்தீரணமுள்ள இடத்திற்கு நிரந்தர சுவாதீனக்காரனாய் இருந்து அனுபவித்து வர உரிமை உடையவனாயிருக்கிறான். இதுபோலவே அவனுடைய குடும்பத்தில் உள்ள மற்ற அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த விஸ்தீரணம் வீதம் வினியோகிக்கப்படும். இந்த விஸ்த்தீரணமானது குறைந்த அளவு சுகாதார வசதி இருக்கவேண்டியது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

வைத்தியர்கள், ஆசிரியர்கள், ஓவியக்காரர்கள், பொருப்புள்ள உத்தியோகஸ்தர்கள், பொது ஸ்தாபன தலைவர்கள் முதலியவர்கள் தங்கள்வேலைகளின்பெரும்பாகத்தை வீட்டிலேயே செய்து முடிக்கவேண்டியவர்களாய் இருப்பதால் அவர்கள் மேற்குறிப்பிட்ட அளவைவிட அதிக விஸ்தீரணமுள்ள இடமும் அதாவது 10½ சதுர கஜமுள்ள இடமும்மற்றவர்களைவிட அதிகமான அறைகளும் வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். ஆனதால் அந்தபடி வினியோகிக்கப்படும். இவை தவிர ஏதாவது குடும்பத்தில் தனித்திருக்கவேண்டிய காயலாக்காரர்கள் இருக்க நேர்ந்து விட்டால் அவர்களுக்கு என்று தனி அறைகளும் ஒதுக்கி வைக்கப்படும்.

இந்தப்படியான அளவின்பேரில் வினியோகிக்கப்பட்ட பிறகு அதை அந்தப்படி அனுபவித்துக்கொண்டிருப்பவர்களை எந்தக்காரணத்தைக் கொண்டும் காலி செய்யும்படியோ, வேறுஜாகைக்கு மாறும்படியோ கேள்க்க எவருக்கும் உரிமைகிடையாதுஎன்பதாகதெளிவாய் சட்டம்இயற்றப்பட்டிருக்கின்றது. இதுபோலவே மேற்கண்டபடி வினியோகிக்கப்பட்ட இடங்கள், அறைகள் காலியானால் அல்லது ஏதாவது ஒரு பாகம் தேவையில்லையானால் அதைப்பற்றி கவனிக்கவும் அதை மற்றவர்களுக்கு மேற்கண்ட முறைப்படி வினியோகிக்கவும், கண்டிப்பான சட்டதிட்டங்களும் செய்யப்பட்டிருக்கிறது.

அதாவது, ஒரு தனி அறையாவது பல அறைகளாவது காலி இடமாவது ஓர் இடமாவது காலி ஏற்பட்டால் அதை கவனிப்பதற்கு என்று ஒரு தனி கமிட்டி ஏற்பாடு செய்திருக்கிறது. அக்கமிட்டியானது [House Cmmitee] இன்ன இடத்தில் இன்ன மாதிரி அறையோ இடமே, இன்ன காலத்தில் காலி ஆகின்றது என்பதை வீட்டு நிர்வாக ஸ்தாபனத்துக்கு [Housing bureau of the local soviet] தெரிவித்து விடவேண்டும். பிறகு இந்த ஸ்தாபனக்காரர்கள் வேறு தேவை உள்ளவர்களுக்கு அவர்களது முன்பின் தேவை விண்ணப்பட்டி வினியோகிக்கப்பட்டுவிடும். இத்தேவை விண்ணப்பங்களை கவனிப்பதில் தொழில் சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளிகளினுடையவும் ஏற்றுமதி, இறக்குமதி விஷயத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளினுடையவும் பாத்தியதைகளையே முக்கியமாக கவனிக்கப்படும்.

## வாடகை.

புரக்ஷிக்கு பிறகு தனிப்பட்டவர்களாலும், தனிப்பட்ட கம்பெனியார்களாலும் கட்டப்பட்ட கட்டடங்கள் தவிர மற்றபடி கட்டப்பட்டதும், தனியே அனுமதி அளிக்கப்பட்டதுமான எல்லா கட்டடங்களுக்கும் ஒரு வாடகை விகிதம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாடகை விகிதமானது அவ்வீட்டின் உபகருவி, சௌகரியம், குடி இருக்கவேண்டியவர்களின் நிலைமை, அந்தஸ்து முதலியவைகளைப் பொருத்ததாகும்.

இவ்விகித நிர்ணயமானது சோவியத் நகர ஆக்ஷியாரின் சட்டபூர்வமான கொள்கைகளையும், விதிகளையும் அனுசரித்து ஜாக்கிரதையாய் செய்யப்பட்டதாகும். என்பதோடு வீட்டின் தளவாடங்களுக்கு பிடித்த செலவையும் அதை நிர்வகிப்பதற்கும் பழுதுபார்ப்பதற்கும் உபதளவாட வினியோகத்திற்கு ஆக பிடிக்கும் செலவைப் பொருத்துமே திட்டம் போடப்பட்டிருக்கும். சோவியத் ரஷியா முழுவதிலும் ஒரு சதுரக்கஜ தரை இடத்திற்கு 40 கோபக் [Kòpek] மாச வாடகை வீதம் கணக்கிடப்படுகிறது.

ஒரு கோபக் ரஷிய நாணயமான ஒரு ரூபிளின் 100ல் ஒரு பாகம், ஒரு ரூபிள் என்பது இன்றைய இந்தியநாணயத்திற்கு 2 ரூபாய்க்குசமானமானது. ஆனால் ரஷியாவில்தொழிலாளிகளுக்கு அந்த ஒரு ரூபிளுக்கு கிடைக்கும் ரஷிய சாமான்களைப்பார்த்து விலைமதிப்புப் போட்டோமேயானால் சில சாமான் இந்தியாவில் 4 அணாவுக்கு கிடைக்கக்கூடியதாயும் சில சாமான் இந்தியாவில் 8 அணாவுக்கு கிடைக்கக்கூடியதாயும் தான் இருக்கும். ஆனால், 4 அணா மதிப்பு போடுவது தான் பெரும் பான்மை விஷயங்களில் பொருந்தும் என்றாலும் நாம் சராசரி ரூபிள் ஒன்றுக்கு 8 அணா வீதம் கணக்குப்போட்டுக் கொண்டு ஒரு அபிப்பிராயம் கொள்ளலாம்)

இந்தப்படி ஒரு சதுர கஜத்திற்கு 40 கோபக் வாடகை என்பதும் ஒரு திடமான விகிதமல்ல. சௌகர்யத்திற்கு தகுந்தபடி அந்தஅளவும் குறைந்து விடும் எப்படி யெனில் வீட்டுக்கு மின்சார விளக்கு இல்லாவிட்டால் 100க்கு 5 வீதமும், தண்ணீர் குழாய் இல்லாவிட்டால், 100க்கு 10 வீதமும் நீர்போக்கு வசதி (ஜாலதாரை) இல்லாவிட்டால்; 100க்கு 10 வீதமும் மேல்கண்ட 40 கோபக் விகிதத்தில் இருந்து வாடகை குறைக்கப் பட்டுவிடும்.

மேல்கண்ட வாடகை விகிதமானது தொழிலாளருக்கும் மற்றும் அவர்கள் தர்ஜாவில் சேர்க்கப்பட்ட நிலைமையுடையவர்களுக்கும் மாத்திரம்தானே ஒழிய மற்றபடியானஎல்லா ஜனங்களும் ஒரேமாதிரி விகிதமில்லை. அதுவும் எல்லா ஊர்களிலும் அல்ல. உதாரணமாக மாஸ்கோ பட்டணத்தில் வீட்டுவாடகை ஒரு சதுர கஜ விஸ்தீரணத்திற்கு ரூ 1க்கு 44 கோபக் வீதம் திட்டம் போடப் பட்டிருக்கிறது.

தவிர ரூ 1க்கு 125 ரூபிள் முதல் 145 ரூபிள் வரை வரும்படியுள்ளவர்களுக்கும்தான் மேல் கண்ட ரூ 40 கோபக்விகிதமாகும். மேல்கண்ட 145 ரூபிள்களுக்கு மேல்பட்ட ரூ வரும்படி உள்ளவர்களுக்கு, அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு 10ரூபிள் வரும்படிக்கும் ஒருசதுர கஜ விஸ்தீரணத்துக்கு மேல்கண்ட 40கோபக் உடன் 3 1/5 கோபக் வீதம் கூட்டியேவாடகை வசூல் செய்யப்படும். இந்தபடியாக போடப்படும் உயர்த்த வாடகை திட்டமானது ரூ எவ்வளவு வரும்படி உள்ளவர்களாய் இருந்தாலும் மொத்தத்தில் ஒரு சதுர கஜத்துக்கு ரூ 1க்கு 1ரூபிள் 32 கோபக்கிக்கு மேல் போகாது.

ஜனசங்கையில் மீதியுள்ளவர்கள் அதாவது நிர்வாக முறையில் கலந்த சம்பளக்காரர்கள் தின கூலிக்காரர்கள்ஆகியவர்கள் அல்ல; யல்தனிமுறையில்சுதந்திர தொழில் செய்துவாழும் ஆசிரியர், வைத்தியர், கலைஞர்கள்முதலியவர்கள் இடமிருந்து வசூலிக்கவேண்டிய அதிக வாடகை திட்டமானது ஒரு சதுர கஜத்துக்கு ஒரு மாதத்திற்கு 1—98 அதாவது கிட்டதட்ட 2ரூபிள் ஆகும். இந்தப்படியே மற்றும் அவரவர்கள் வீட்டில் இருந்து வேலை செய்து பிழைக்கும் கொல்லன் தச்சன் முதலிய தொழில் காரர்களிடமிருந்தும் ரூ 1க்கு ஒரு சதுர கஜ இடத்திற்கு 1ரூ,திற்கு 92 கோபக் முதல் 1-98 வரை வாடகை வசூலிக்கப்படும்.

மற்றும் சரீரத்தினால் பாடுபட்டு வருந்தி தேடாத தொழிலை உடையவர் (களான வியாபாரிகள் சாமான்கள் உற்பத்தி செய்வோர்கள் சற்று அதிக லாபம் சம்பாதித்து சுகம் அனுபவிப்பவர்ஆகியவர்) களுக்கு ஒருசதுர கஜஇடத்திற்கு ரூ 1க்கு 77 கோபக் முதல் 4ரூபிள் 10கோபக் வரை வாடகை விதிக்கப்படும். இது தவிர அவர்களுக்கு உரிமை உள்ள அளவுக்குமேல் அதிகமான அளவு இடம் தேவை இருந்தால் அதற்கு சாதாரணவிகிதத்துக்கு மூன்று பங்கான விகித வாடகை விதிக்கப்படும்.

## புதிய வாசஸ்தலங்கள்.

கடந்த 5 வருஷ காலத்தில் சோவியத் ஆக்ஷியானது புதிதாய் வீடுகட்டவும் வசதிகள் ஏற்படுத்துவதற்காகவும் (1-5 Billion) ஆயிரத்தி ஐம்பது மில்லியன் ரூபிள் அதாவது 1050000000 நூறுகோடியே ஐம்பதுலக்ஷம் ரூபிள் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

தொழில் சாலைகள் மூலமாக கிடைக்கும் லாபத்தில் ஒரு தனி பாகத்தை அதில் வேலை செய்யும் தொழிலாளிகளின் வீட்டு வசதிக்கு என்றே ஒதுக்கி வைக்கப் படுகிறது. இந்த பண்டுகளை அந்தந்த தொழில் சாலை நிர்வாக மூலமாகவேனும் அல்லது வீட்டுவசதி கூட்டுறவு ஸ்தாபன மூலமாகவேனும் வினியோகம் செய்து வீடுகள் கட்டப்படும்.

கண்ட்ராக்டர்களும்வெளிமுதல்காரராலும் கட்டடங்கள் சீக்கிறத்தில் கட்டி முற்றுப் பெறவும் பெருகவும் தக்கவண்ணம் அதற்கு ஏற்ற விதிவிலக்குகளும் சுதந்தரங்களும் சட்ட மூலம் செய்யப்பட்டிருக்கிறது.

தனியாக கட்டடம் கட்டுவோர்களுக்கும் பலவித பாத்தியதைகளையும் விதிவிலக்குகளையும் கொடுக்கப் பட்டிருக்கிறது.

## கட்டட கூட்டுறவுகள்.

கட்டட கூட்டுறவு சபைகளுக்கு ஏராளமாக உதவிகள் புரிந்து கட்டடங்களை பெருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த வீட்டு கூட்டுறவு சங்கங்கள் வீட்டில் குடியிருப்பவர்கள் இடமிருந்து பிரவேசக் கட்டணமாக 5 முதல் 10 ரூபிள்கள் வரை வசூலிக்கின்றன.

ஒவ்வொரு மெம்பர்களும் தங்களுக்கு வினியோகிக்கப்படும் இட வசதிக்கு தக்கபடி ஷேர்பணம் கொடுக்க வேண்டியவராகிறார்.

புதிய கட்டடங்களின் வாடகை நிர்ணயமானது கட்டட நிர்மாண

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

# பர்மாவில் சுயமரியாதைப் பிரசாரம்.

## தோழர் இந்திராணிபாலசுப்பிரமணியம் சொற்பொழிவு.

இரங்கோன் சாரநிவாச சபை மண்டபத்தில் நவம்பர் மாதம் 17-ந்தேதி வியாழக்கிழமை தோழர் மாணிக்கம் செட்டியார் தலைமையில் தோழர் இந்திராணி—பாலசுப்பிரமணியம் அம்மாள் சுயமரியாதை இயக்கம் என்பதுபற்றி செய்த பிரசங்கம்:—

தோழர்களே! "இந்து சாஸ்திரத்தில்" கண்டபடி "பிர்மலோகத்தின்" தலைநகராகிய இரங்கோனில் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் சுயமரியாதை இயக்கம் யாது "அதன் கொள்கைகள் யாவை" என ஓர் உபன்யாசம் செய்ய ஆணையிட்டதானது எல்லா ஆற்றலுமுடைய "பிர்மலோக"த்தில் உள்ளவர்களுங்கூட பகுத்தறிவு இயக்கம் இன்னதுதான் என்று தெரிந்து கொள்ளவும், அதன்படி மனதிற்கு பிடித்தால் நடக்கவும், இல்லாவிடில் தள்ளவும், ஆவல் உள்ளவர்களென்பதாகக்கருதி மகிழ்ச்சி அடைகிறேன். அதற்கேற்ப ஆணும், பெண்ணும் திரள்திரளாய் இங்குகூடியிருப்பதைக்காண எனக்கு அளவற்ற மகிழ்ச்சியுண்டாகிறது. நீங்கள் கேட்பதற்கு எவ்வளவு ஆவலுடன் குழுமி இருக்கிறீர்களோ அதேமாதிரியாக என் சிற்றறிவுக்குப் புலப்பட்ட சுயமரியாதைக் கொள்கை சாராம்சத்தை உங்களுக்கு விளங்கச் சொல்லவேண்டும் என்கின்ற அவா பதின் மடங்குஅதிகமாகஎனக்குஇருக்கிறது நான் பேசப்போகும் விஷயம் என் மனத்திற்கு உவந்ததாயிருப்பதாலும் மானிட வாழ்க்கை முன்னேற்றத்திற்கு இன்றியமையாத சாதனமாயிருப்பதாலும் நான் சிறிது அளவுகுறித்திருக்கும் காலத்திற்கு மீறி அதிக நேரம் எடுத்துக்கொண்டால் என்னை மன்னிப்பதுமல்லாமல், பொறுமையுடன் இருந்து செவிமடுப்பீர்களென எதிர்பார்க்கின்றேன்.

தோழர்களே! கடைப்பிணங்களாகிய உரிமையற்ற அடிமைவாழ்வு படைத்த "காமக்கருவிகள்" என்று சொல்லும்படியான இந்திய நாட்டிலுள்ள இந்து பெண் சமுகத்தைச் சேர்ந்த எனக்கு 'பேசும் உரிமை' யாவது அளிக்க உங்கள் மனம் இடம் கொடுத்ததற்கு முதலில் நன்றி செலுத்திவிட்டு பிறகு எனக்குக்கொடுத்திருக்கும் விஷயத்தைப்பற்றிப்பேச ஆரம்பிக்கின்றேன்.

தோழர்களே! நான் பேசும்போது ஒருவர் தயவையோ, தாட்சண்ணியத்தையோ, எதிர்பார்க்கின்றேன் என்று நினைக்காதீர்கள். எதிர்ப்புகள் இருந்தால் அதற்குபின்வாங்கிவிடுவேன் என்று கருதிவிடாதீர்கள் அழுக்கேறி பாசம்பிடித்த மனித வாழ்க்கையைப்புனிதப்படுத்தப்பிரயத்தனப்படும்போது பழமை பழமை என்று பேசி பாழாய்ப்போய்க்கொண்டிருக்கும் பாமர மக்கள் சிறிது பதருவார்கள், துடிப்பார்கள், ஏதோ ஆபத்து வந்துவிட்டதாக கனவில் உளருவதுபோல் உளருவார்கள். அது இயற்கையே. அதைப்பற்றி எனக்கு அவசியமில்லை. நான் ஒரு ஜாதியையோ, ஒரு மதத்தையோ, ஒரு சமூகத்தையோ, குறித்துப்பேசுவதாக நினைக்கவேண்டாம் பொதுவாக மக்களிடரைப்பற்றிதான் பேசப் போகிறேன்.

தோழர்களே! அனைத்துயிர் ஒன்றென்று எண்ணி அரும்பசி எவர்க்கு மாற்றி மனத்துளே பேராபேதம் இல்லாது வாழ்ந்து வந்த நமது பழந் தமிழ் மக்களிடையே அன்னியர்கள் குடிபுகவே மனிதராய் வாழ்ந்திருந்த தமிழ் மக்களிடையிலே மதம், ஜாதி, பலபல கடவுள்கள் முதலியன தலைவிரித்துஆடி, மனிதவாழ்க்கையை அலங்கோலப்படுத்தி நாட்டையும். நாட்டின் ஜனங்களையும் அடிமைக்குழியில் ஆழ்த்திவிட்டது. இந்த அடிமைத்தன்மையிலிருந்து மீட்கவே நமது ஆன்றோர்களாகிய புத்தர், கபிலர், சித்தர்கள் முதலியவர்கள் பிரயத்தனப்பட்டார்கள். அதைப்போலவே நமது ஈ. வெ. ராமசாமியும் ஏழு ஆண்டுகளுக்கு முன் சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒன்றைக்கண்டார். அவ்வியக்கம் பரவ ஆரம்பித்தபோது சுயநலமாகவும், வஞ்சகத்தாலோ; பொறுமையாலோ, அறியாமையாலோ அர்த்தமற்ற மூடப்பழக்க வழக்கங்களில் ஆழ்ந்திருப்பதினாலும் அப்பெரியாரையும், அவ்வியக்கத்தையும் குறைகூற ஆரம்பித்தார்கள். பாமர மக்களின் மனதை இன்னும் 'பழமை' என்னும் புத்தில் ஆழ்த்திவைப்பதற்காகசுயமரியாதைக் கொள்கைகளை பலவாராகத் திரித்துக் கூறவும் ஆரம்பித்தார்கள். மதப்



தோழர் இந்திராணிபாலசுப்பிரமணியம்.

பற்றுள்ளவர்கள் மதத்தின் பேரால் மக்களை ஏமாற்றி வாழ்கிறவர்கள் "சுயமரியாதைக் கொள்கைபரவினால் 'மதம்' போச்சுது" என்று மாரடிக்க ஆரம்பித்தார்கள். ஜாதி அகங்காரத்தில் தோய்ந்து உள்ளவர்கள் ஜாதியின் பேரால் சோம்பேரியாய் இருந்து வாழ்பவர்கள் ஜாதி போச்சுது என்று அலர ஆரம்பித்தார்கள். சமயப்பற்றுள்ளவர்கள் சமய பக்தியின் பேரால் வாழ்வை ஏற்படுத்திக்கொண்டவர்கள் சமயம் போச்சுது என்று கூப்பாடு போட்டு ஓலமிட்டார்கள். வைதீகர்கள் மடிசஞ்சி போச்சுது என்று வருந்த ஆரம்பித்தார்கள். புரோகிதர்கள் கடவுள் பெயராலும் மதத்தின் பெயராலும் ஜனங்களை வஞ்சித்து வயிறு வளர்க்கும் 'பிழைப்பு' போய்விடுமே என்று பயப்பட்டார்கள். முதலாளிக் கூட்டங்கள் ஏழைகளை வஞ்சித்து இம்சித்து அவர்கள் உழைப்பால் வரும் பலன்களை கொண்டு அடையும் சுகத்தில் அழுக்குப்படாமல் எல்லா வைபவங்களும் உல்லாசமும் உடைய வாழ்க்கை போய்விடுமே என்று கண்ணீர் வடிக்கின்றார்கள். சுயநலமிகளாகவும், மூர்க்கத்தனமாகவும் உள்ள ஆண்மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட பெண் அடிமை தொலைந்துவிடுமே என்று திணர ஆரம்பித்தார்கள்.

தோழர்களே! மனித வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக பழைய மார்க்கத்தை திருத்தியோ அல்லது அனுகூலமான வேறு கொள்கைகளை உணர்த்தியோபரப்புங்காலத்தில் எல்லா நாடுகளிலும் இதுபோன்ற மாரடிப்பும் கூப்பாடும், ஓலமும், கொண்ட எதிர்ப்புகள் இருந்துதான் வந்தன என்பதை சரித்திர வாயிலாய் அறிகின்றோம் இயேசு கிறிஸ்து மகமத்நபி, மார்டின் லூதர், புத்தர், கபிலர், சித்தர்கள் சாக்ரடீஸ், லெனின், முதலானவர்கள் தத்தம் கொள்கைகளை பரப்பின காலத்தில் அவர்கள் பட்ட இம்சையை நாம் இங்கே சொல்லவும் வேண்டுமோ? அதே மாதிரியாக இராமசாமியையும் அவர்களுடைய இயக்கத்தையும் என்போன்றசகாக்களேயும். நிர்மூலப்படுத்தி விடுவதாகவும், கொன்று விடுவதாகவும்இரத்தம்தோய்த்து எழுதப்பட்ட சிகப்பு கடிதங்கள் பலவந்தன. சுயமரியாதைக்காரர்களாகிய நாங்கள் இந்த மிரட்டுக்கும் பூச்சாண்டிக்கும் அஞ்சமாட்டோம், உயிரையும் விடத் தயார் இதை தூக்கு மேடை மீதிருந்தும் சொல்லுவோம் என்று சொன்னோம். பிறகு நாளாவாக பாமர மக்களுக்கு அறிவும் ஆற்றலும் மேற்பட கல்வி பரவபரவ எதிர்ப்புகள்சிலகுறைந்ததுமில்லாமல் இன்று 15 லட்சம் ஜனங்கள் இயக்கத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்றால் அதன் தீவிரத்தை நோக்குங்கள் என்றுதான் சொல்லுகிறேன். சுயமரியாதைக்கொள்கை இந்திய நாட்டினர்க்கும் பர்மாவில் குடியேறியிருக்கும் இந்தியர்களுக்கும் ஓர் புதுமையாய் தோன்றினாலும் மற்ற பல ஏனைய நாட்டு மக்களுக்கு இந்த கொள்கைகளில் சில முழுவதும் சில பலவற்றையும் பெருவாரியாக வாழ்கையில் அனுசரித்து வருகிறார்கள் என்பதை உணருங்கள். அதனாலேயே தான் அந்த நாடுகள் நாள்தோறும் மேலும் மேலும் விருத்தி அடைந்து வருகின்றது நமது நாட்டிலுங்கூட இந்த இயக்கத்தைப்பகுத்தறிவு இயக்கம் என்று அதாவது ஆங்கிலத்தில் சொல்லவேண்டுமானால் (Rational movement) என்றுகருதி பம்பாய் பாஞ்சாலம் வங்கா

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

# ஈ. வெ. ராமசாமிக்கு ஆதிதிராவிடவாலிபர்கள் வரவேற்பு.

27—12—32 தேதி மாலை 7 மணிக்கு ஈரோடு ஆதிதிராவிட வாலிப சங்கத்தாரால், ஒருவருஷ காலம் ஐரோப்பா, ஆப்பரிக்கா சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு வந்த தோழர் ஈ. வெ. ராமசாமிக்கு ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டத்திற்குசுமார் 500 பேர்கள் வந்திருந்தார்கள்.

மற்றும் தோழர்கள் அ. ராகவன், அன்னபூரணி, ரத்தினசபாபதி, காளியப்பன், சங்கரய்யா, ராமு, டி. கோபால், மருதாசலம், பத்திரையா, மாஜி கவுன்சிலர் எச். பாச்சா, ஜேம்ஸ், துரைசாமி நாயுடு, மரியசூசை, வேலுமுத்து, சண்முகம், அங்கமுத்து, சின்னு, ஆறுமுகம், மைக்கேல், ஜோசப் அறிவானந்தம், ஞான தேசிகன், வையாபுரி, தருமலிங்கம், பொன்னு, செல்வநாயகம், அண்ணாமலை, ராமலிங்கம், சுப்பையா, ஜெபஞானம், சுந்தரம், தங்கமுத்து, அருணாசலம், சுந்தரராஜ், பி. எஸ்- மைதீன் பாஷா, சவரி, ஈ. வி. ஜெயராம், நாகலிங்கம், கரிவரதசாமி, என். பாஷா முதலியவர்களும், அனேக பெண்களும் வந்திருந்தார்கள். ஆதிதிராவிட முனிசிபல் கவுன்சிலர் தோழர் மாரிமுத்து நயினார் தலைமை வகித்து தோழர் ராமசாமியைப்பற்றி புகழ்ந்து பேசி கூட்டத்திற்கு அறிமுகப்படுத்தினார். பிறகு தோழர் ஜோசப் அவர்கள்உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்தார். பிறகு தோழர்கள் அன்னபூரணி, ராகவன், ஆகியவர்கள் பேசினார்கள்.

பின்பு தோழர் ஈ. வெ. ராமசாமி பேசியதின்சாரம்சமாவது:—

தோழர்களே! நீங்கள் இங்கு எனக்கு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டதைப்பற்றியும், தலைவர் புகழ்ந்து பேசியதைப்பற்றியும் நான் சிறிதும் பெருமையாகக்கொள்ளவில்லை. ஏனெனில் நான் பிறந்து வளர்ந்ததும் இந்த ஊர், நீங்கள் பிறந்து வளர்ந்ததும் இந்த ஊர். அன்றியும் சுமார் 10 வருஷத்திற்கு முந்திய வரையில் உங்களுக்கும் எனக்கும் வெகு நெருங்கிய சம்மந்தம் இருந்து வந்திருக்கிறது. ஆதலால் உள்ளூர்க்காரர்கள்நெருங்கிய சம்மந்தமிருந்து வந்தவர்கள் ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொள்ளுவது என்பது பரிகசிக்கத்தக்கதென்றே கருதுகிறேன். உங்கள் பத்திரத்தில்உள்ளூரிலிருக்கிறஉங்களை நான் முன்போல் கவனிக்கவில்லை என்றுகண்டு இருக்கிறீர்கள், முன்போல உங்களுக்குப் பலவித நன்மைகள் செய்யவில்லை என்று சொல்லுகிறீர்கள், இவைகள் வாஸ்தவமாயிருக்கலாம். ஏனெனில் நான் இந்த ஊர் முனிசிபல் சேர்மெனாயிருந்த காலத்தில் உங்கள் தெருவிற்கு என்று அதிக சலுகைகாட்டினது போல் இப்போது நான் ஈடுபட்டிருக்கும்காரியத்தில் தனிசலுகை என்றும், பொருள் சம்மந்தமாயும் நான் எதைச் செய்ய முடியும், என் சொந்தத்திலும் எனக்கு முன்பு இருந்த மாதிரியான பொருள் வருவாய் கிடையாது. பொதுக்காரியங்களில் உண்மையாய் உழைப்பவர்களுக்கு வரும்படியில்லாமல் போவதோடு கைப்பொருளும் சிதைந்து போய்விடும். ஆதலால் பொருள் மூலமாய்ச் செய்யும் நன்மைகள் செய்வது கஷ்டமான காரியம்.

மற்றபடி நீங்கள் குறிப்பிட்டபடியே உங்கள் சமூக விஷயத்தில் பொதுவாக ஒரு புரட்சி போன்ற காரியத்தைச் சுயமரியாதை இயக்கம் செய்திருக்கிறது என்றுசொல்லுவதைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நான் காங்கிரசிலிருக்கும்போதும் தீண்டாதார் விஷயத்தைப்பற்றியே அதிகம் உழைத்திருக்கிறேன். வைக்கம் சத்தியாக்கிரகம் என்பதும் தீண்டாமை விலக்குக்காகத் தான் ஏற்பட்டதே தவிர வேறில்லை. 3 வருடத்திற்கு முன் நடந்த ஈரோடு கோவில் பிரவேசம் என்பதும் அதுசம்மந்தமான வழக்கும் தீண்டாமை விலக்கு சம்மந்தமாக ஏற்பட்டதே தவிர வேறில்லை.

இன்னும் சுயமரியாதை இயக்கத்திலும் தீண்டாமை விலக்குத் தத்துவம் தான் முக்கிய இடம் பெற்றிருக்கிறது. அது விஷயமாய் சமபந்தி போஜனம், கலப்பு மணம் முதலியவைகள் கூட ஜாதி வித்தியாசம் என்பது சிறிதும் பாராமல் அனேக காரியங்கள் நடைபெற்றுவருவதை நீங்கள் உணர்ந்தேயிருக்கிறீர்கள். இங்கு சற்றுமுன்பேசிய தோழர் அன்னபூரணியம்மாள் ஓர் "பறப்பெண்" அவரை மணம் செய்துகொண்ட இங்கிருக்கும் தோழர் ரத்தினசபாபதி ஒரு "திருநெல்வேலி சைவர்" ஒன்றுக்கொன்று எவ்வளவு வித்தியாசம் பாவிக்கப்படுவது மாறி இன்று "சதிபதி"களாய் உங்கள் முன் விளங்குவதைப் பாருங்கள். உங்கள் சமூகத்துக்கு சகல துறைகளிலும், சர்க்கார் உத்தியோகத்திலும் தனிப் பிரதிநிதித்துவம் எப்படி வந்தது? ஓர் காலத்தில் "சுயமரியாதை இயக்க மந்திரிகளாய்" இருந்த டாக்டர் சுப்பராயன், தோழர் முத்தையா முதலியார் ஆகியவர்கள் காலத்தில் தான் இது ஏற்பட்டது. அதுபோலவே சட்டசபை முதலிய ஸ்தாபனங்களிலும்கூட உங்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் எப்படிக் கிடைத்தது. "உலகமே வெறுத்துத்தள்ளிய" சைமன் கமிஷனை சுயமரியாதை இயக்கம்தான் உங்கள் நன்மைக்காக வரவேற்று,உங்கள் குறைபாடுகளைச் சொல்லிக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டதுடன் உங்கள் குறைபாடுகளையும் அது அறியும்படி செய்தது. அதன் பயன்தான் இப்போது எத்தனையோ பேர் தடுத்தும் சூட்சி செய்தும் ஒரு அளவாவது நீங்கள் அவைகளிலும் ஸ்தானம் பெற முடிந்தது. உங்களுக்குத் தனிக்கிணறும், தனிக்கோவிலும் கட்டவேண்டும் என்று சொன்ன தேசியங்களும், மாளவியாக்களும் உங்களுக்குப் பொதுக்கிணற்றில் உரிமையும், பொதுக்கோவில்களில் அனுமதியும் கொடுக்கிறோம் என்று வாயளவிலாவது சொல்லக்கூடிய நிலைமை எப்படி ஏற்பட்டது? சுயமரியாதை இயக்கம் உங்கள் நிலைமையை உத்தேசித்தும், தேசியத்தின் வண்டவாளத்தை வெளிப்படுத்தியும் தீண்டாமை விலக்கின் சூட்சியை வெளியாக்கியும் செய்த பிரசாரமல்லவா என்பதைச்சற்று யோசித்துப் பாருங்கள். இந்தக்காரியங்களுக்காக சுயமரியாதை இயக்கமும், தோழர்களும், பொது ஜனங்களிடத்தில் எவ்வளவு கெட்ட பெயர் வாங்கினார்கள், எவ்வளவு பழிப்புக்கும் தூஷணைக்கும் ஆளானார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா?

இவற்றையெல்லாம் யோசித்துப்பார்த்தால் உங்களுக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டதா இல்லையா என்பது நன்றாய் விளங்கும். இனி மேல் நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டியதில்லை. இனியும் 10 வருஷ காலத்திற்குள்தீண்டாமை இந்திய நாட்டை விட்டுப் பறந்தே ஓடிவிடும். தேசிய சூட்சி குறுக்கிடாமலிருந்தால் இன்னும் உங்களுக்கு எவ்வளவோ நன்மை ஏற்பட மார்க்கமுண்டு. எப்படியெனில் உலகம் ஒரு பெரும் புரட்சிக்குத் தயாராகிக்கொண்டுவருகின்றது. அப்புரட்சி வெற்றிபெற்றாலும் தோல்வியடைந்தாலும் தீண்டாமையும், தாழ்த்தப்பட்ட தன்மையும் சமீபத்தில் அழிந்துதான் தீரும். இந்த நாட்டில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்டு 160 வருஷ காலமாகியும் தீண்டாமை ஒழிக்கப்படாமல் இருப்பது பிரிட்டிஷாருக்கு பெருத்த அவமானகரமான காரியமாகும். அவர்கள் இனி ஆட்சிசெய்யத் தகுதியுடையவர்கள் அல்ல என்பதற்கு இந்த ஒரு காரணமே போதும். பிரிட்டிஷார் இந்தியப்பொதுஜனங்கள் மீது, பார்ப்பனர் மீது, இந்துமதத்தின் மீது பழி போடலாமானாலும் இவர்களுக்கு அறிவும் யோக்கியப்பொருப்பும் எங்குபோயிற்று என்ற கேள்விக்கு இவர்கள் என்ன பதில் சொல்லுவார்கள். ஆகவே இனி யாருடைய தயவும் தேவையில்லாமலேயே காரியங்கள நடந்துவிடும். உலகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுயமரியாதை உதயம் ஆகிவிட்டது. அதன்முன் எந்தமதமும், எந்தக்கடவுளும், எந்த மகாத்மாக்களும் எந்ததேசியமும் எந்தஅரசாங்கமும் இனி தடையாய் நிற்க முடியாது. இவைகள் இத்தனையும் அதன் வேகத்தில் கலந்துகொண்டு உங்களுக்கு நாங்கள் தான் நன்மை செய்தோம் என்று சொல்லி போலி உரிமை கொண்டாடி மக்களை ஏய்க்கவே அலைகள் இப்போது பாடுபடுகின்றன. இந்த ஏய்ப்பில் நீங்கள் சிக்கிவிடாதீர்கள். உங்களுக்குவிடுதலைவேண்டுமானால், சமத்துவம் வேண்டுமானால் எந்த மதத்தையும், எந்த கடவுளையும், எந்த தேசியத்தையும், எந்த மகாத்மாவையும், எந்த அரசாங்கத்தையும் எதிர்பாராதீர்கள். இவைகள் ஒன்றினாலும் உங்களுடைய தீண்டாமையை ஒழித்து சமதர்மம் கொடுக்கமுடியாது. உங்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டும், அவ்வுணர்ச்சி உண்மையாக உங்களுக்கு ஏற்பட்டால் உங்களை அறியாமலே பெரியதொரு புரட்சி ஏற்பட்டுவிடும். அதில் நீங்கள் மாத்திரம் சமத்துவமடைந்து உலக சுக போகங்களில் சமசுதந்திரம்பெறுவதோடுநில்லாமல்உலகிற்கேசமத

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க

# திருச்சியில் மறுமணம்.

## தோழர் விசாலட்சி சுப்பையா தலைமை வகித்தார்

சென்ற 29-11-32ந் தேதி செவ்வாய்க்கிழமை கோவை தோழர் கே. ஜானேஜிராவ் அவர்களுக்கும், தஞ்சாவூர் தோழர் டி. ஆர். மஞ்சுளாபாய் அவர்களுக்கும் தமிழ்நாட்டுப் புரோகிதமறுப்புச்சங்கத்தின் சார்பில் மறுமணம் நடைபெற்றது. (திருமணத்தின் நிகழ்ச்சிமுறை அடுத்த வாரம்வரும்.) மணத்திற்கு தலைமை வகித்த தோழர் விசாலாக்ஷிசுப்பையா அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம் வருமாறு:—

தோழர்களே!

இன்று இங்கு நடைபெற இருக்கும் இத்திருமணத்தின் தம்பதிகள் இருவரும் முன்னர் ஓர் முறை திருமணமாகி தம் தம் துணைவர்களை இழந்து மீண்டும் இதுகாலை மணம் செய்துகொள்பவர்களாகும். இம்மாதிரி மணங்களை "விதவா விவாகம்" என்று வழக்கத்தில் கூறப்படுவதை நீங்கள் அறிவீர்கள். விதவை என்ற சொல் பெண்பாலுக்கு மட்டும் சூட்டப்பட்டு, அந்தப் பெண்ணுக்கு மறுபடி மணஞ்செய்யுங் காலை அம்மணத்தை "விதவா விவாக"மென்று கூறப்படுகிறது. ஆனால் அதே மாதிரி ஒரு ஆண் தம் மனைவியை இழந்து மீண்டும்மணஞ்செய்யுங்காலை அம்மணத்தை விதவா விவாகமென்று யாரும் சொல்லுவதில்லை. மனைவியை இழந்த ஆண்களுக்குவிதவைத் தன்மையால் கடுஞ்சட்டங்கள் எதுமின்றி அவர்க சுயேச்சைபாய் இருப்பதுடன் அவர்களுக்கு சுலபத்தில் மணங்கள் நடந்து கொண்டுமிருப்பதையும் நீங்கள் அறிவீர்கள். அதே மாதிரி "விதவைதன்மை" அடைந்த ஒரு பெண் சுதந்திரமாய் வாழுவதற்கும், சுலபமாக மணங்கள் நடைபெறுவதற்கும் எற்ற சட்டங்களும் வழக்கங்களும் நமதுநாட்டில் இல்லை.

ஒரு கணவனை இழந்த பெண் மீண்டும் ஒரு கணவனை மணஞ்செய்ய விரும்பும் பொழுது அவளுடைய பெற்றோர்கள் 'நமது சாதி வழக்கமல்ல ஆதலால் செய்யக்கூடாது" என்று சொல்லி விடுகிறார்கள். வைதீகர்கள் இது மத சம்பிரதாயத்திற்கு விரோதம் என்று சொல்லி ஓலமிடுகிறார்கள். பந்துக்கள் தங்களுடைய சமூகத்திற்கு மரியாதை தொலைந்து போய்விடுமென எண்ணி உயிர்விடுபவர்கள்போல் நடிக்கிறார்கள். திண்ணை வேதாந்த சோம்பேரிகள் 'காலங்கலிகாலம் இதனால்தான் மழை சரிவரப் பெய்யவில்லை" என்று பிதற்றுகிறார்கள். இவ்வளவு கஷ்டங்களையும் தாண்டினாலும் நாலு பெண்ஜாதியை சாகக்கொடுத்த ஆணும்கூட "நான் விதவையை கட்டிக்கொள்ள மாட்டேன்" என்று சொல்லி விடுகிறான். ஆகவே உண்மையுடன் பகிரங்கமாக முறையாக நல்ல நிலைமையோடு ஒரு கணவனை இழந்த பெண் தன் கஷ்டநிலைமை சகிக்காது மீண்டும் ஒரு கணவனை அடைய விரும்பும் பொழுது இத்தனை தடங்கல்களும், பழிகளும் உண்டாக்கி விடும். இந்நிலையில் உள்ள மக்களையுடைய தேசம் புண்ணிய பூமி என்றும், தர்ம தேசம் என்றும் உலகிற்கு நாகரீகம் படிப்பித்த ஞான தேசம் என்றும் சொல்லுவது "ராமராஜ்ஜியத்தை" நீதிராஜ்யம் என்று சொல்வதையே ஒக்கும்.

நிற்க அதே பெண் விபசாரம் செய்து குளத்தில் ஒரு குழந்தையும், ஆற்றில் மற்றொரு குழந்தையும், கற்றாளைப்புதரில் மீண்டும் ஒரு குழந்தையையும், குப்பைத்தொட்டியில், பின்னொரு குழந்தையும், இப்படி வருஷம் ஒன்றாக வரிசைக் கிரமமாக எறிந்து கொண்டு வருமானால் மற்றும் 3 மாதம், 6 மாதத்திற்கு ஒரு தடவை கர்பமாகி மருந்து சாப்பிட்டு கற்பத்தை சிதைத்து நோய்வாய்ப்பட்டு கஷ்டப்படுமானால் அவர்கள் பெற்றோர்களும், நண்பர்களும் இவ்வளவுக்கும் உதவி அளித்து அவைகளை வெளியார் அறியமுடியாமல் அமுக்கி வைக்க செய்யும் முயற்சிகள் முழுவதும் எனக்குத் தெரியும். ஆகவே இப்படிப்பட்ட காரியங்களும் இதற்காக நேர்ந்த விபசாரங்களும், ஜாதி வழக்கத்திலும் உலக சகஜத்திலும், இயற்கையிலும் சேர்ந்துவிடுகிறது. இதற்காக எந்த ஜாதியும் மதமும் பந்துக்களும் பெற்றோர்களும், சாஸ்திரிகளும் சனாதனதர்ம சமூக வீரர்களும் உயிர்விடுவதில்லை. இதனால் நேரும் மனஸ்தாபம் "மானக்கேடு" ஊரார் "பளிப்பு" ஆகிய வைகளை லக்ஷியம் செய்வதுமில்லை. என் யோக்கியமான முறையில் கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது என்றால்தான் ஜாதி மதம் கெட்டுப்போகிறதாம்.

ஆகவே சனாதன தர்மம் வேண்டும் என்று சொல்லப்படுற இந்திய நாடு, அதிலும் முக்கியமாக வைதீகக்குடுக்கைகள் நிறைந்த தென்னாடு ரகசியமாக, திருட்டுத்தனமாக, அக்கிரமமாக, அயோக்கியத்தனமாக என்ற நடப்பவர்களுக்கு பூரண சுதந்திரம் கொடுத்து மேலும், வேண்டிய உதவிகளை அளிக்கிறதென்பதை நாம் நன்கு அறிகிறோம். இம்மாதிரி முறைகள் தவறு என்றும் அது மக்களுக்குத் தீமை பயக்கிறது என்றும் ஒழுங்கான முறையில் செல்லவேண்டும் என்றும் சொல்லும் சுயமரியாதை இயக்கத்தாரை வைதீகக் கூட்டத்தார் கண்டு வெறுத்து ஓடுவதில் நமக்கு ஆச்சரிய மொன்றுமில்லை.

இயற்கையில் ஒரு ஆடவர் ஒரு மனைவியையும், ஒரு பெண் ஒரு கணவரையும் வாழ்க்கைத்துணையாகக் கொண்டுதான் ஆகவேண்டும். இம்முறை தவிர்த்து விதவைத்தன்மையின் பேரால் "விபசாரத்தை" வளர்க்க காத்துக்கொண்டிருக்கும்முரட்டு வைதீகத்தை உடனே வங்காளக் குடாக்கடலில் தள்ளி விடுவதற்கு யோசனை செய்து முடிக்கவேண்டியதைத்தவிர வேறு வழியில்லை. எனக்கருதுகிறேன். இம்மணத்திற்கு காரணமும் உதவியுமாயிருக்கும் தமிழ்நாட்டுப் புரோகிதமறுப்புச்சங்கத்தை நான் மனமாரப் பாராட்டுகிறேன். மேலும் இச்சங்கத்தின் கிளைச்சங்கங்களை ஜில்லாக்கள்தோறும் ஏற்படுத்தி கணவனைஇழந்துபல இன்னல்களுக்கு ஆளாகி தவிக்கும் எனது அருமைச் சகோதரிகளுக்கு ஆதரவளிக்குமாறு இங்கு கூடியிருக்கும் தோழர்கள் அனைவரையும் 'தொண்டுபுரியுமாறு கெஞ்சிக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்குள்ள மணத்தம்பதிகளான தோழர் மஞ்சுளாபாய், தோழர்ஜானேஜிராவ் ஆகிய இருவர்களை பாராட்டுவதுடன், தங்கள் தங்கள் உறுதிமொழிகளை கூறி மணம் முடித்துக்கொள்ளுமாறு கூறுவதுடன், இங்குள்ள தோழர்கள் யாவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பின் மணமக்கள் மாலைமாற்றிக் கொண்டனர். பின் திருமணத்தைப் பற்றி பலர் பேசினார்கள்.

முடிவுரை.

தோழர்களே!

நான் இறுதியாக உங்கட்கு முக்கியமாக கூறவேண்டியது யாதெனில் இந்த தமிழ் நாட்டுப்புரோகித மறுப்புச்சங்கத்திற்கு சொந்தமாக ஓர் கட்டிடம் கட்டவேண்டியது அவசியமென்று வலியுறுத்துகிறேன். முனிசிபல் சேர்மென் தோழர் பி. இரத்தினவேல் தேவர் அவர்களை முனிசிபல் நிலத்தில் இடங்கொடுத்து இச்சங்கத்தின் காரியாலயம் கட்டுவதற்கு உதவி செய்து என்றும் அழியாப்புகழை அடையுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன். இங்கு கூடியுள்ள தோழர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிஅறிதலை செலுத்துகிறேன்.

---

## திண்டுக்கல் சமூக சீர்திருத்த சங்கீதக் கச்சேரி.

30-11-32ந் தேதி இவ்வூர் பெரிய கடைவீதியிலுள்ள தோழர் அ. க. சிதம்பர நாடார் அவர்கள கட்டிடத்தில் பக்கவாத்தியங்களுடன், திருமங்கலம் தோழர் இரத்தினம் அவர்களால் இரவு 10-30 மணிக்கு வாய்பாட்டு கச்சேரி. இரம்பமாயிற்று. பிரபலஸ்தர்கள் பலர் விஜயஞ்செய்து இருந்தனர். தோழர் இரத்தினம் பாடுகையில் தீண்டாமையின் கொடுமையைப்பற்றியும், விதவைகளின் பரிதாப நிலைமையைப்பற்றியும் கேட்போர் மனம் உருகும்படி வெகுஇனிமையாகப்பாடினார் பின் இரவு ஒரு மணிக்கு முடிவுற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## பள்ளி கொண்டாவில் பொதுக் கூட்டம்.

கடந்த 29—11—32ல் தாலுக்கா போர்டு மெம்பரும் பொதுநல ஊழியருமான தோழர். எம். சி. ரத்தினம் அவர்கள் தலைமையில் கூடியது. அவ்வமயம் சுயமரியாதை தொண்டர் இ. எஸ். மணி அவர்கள் பூனா ஒப்பந்தமும் அதில் செய்ய வேண்டிய சிறு மாறுதலும் என்பதைப் பற்றி ஒரு அரிய சொற்பெருக்காற்றினார். பிறகு பல தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறிற்று என ஒரு நிருபர்எழுதுகிறார்.

---


அதிர்ஷ்டம் மாத்திரமல்ல
அறிவுதானம் செய்த பலனுமுண்டு.
**பச்சையப்பன் கலாசாலை**
**லாட்டரி.**
ரூ. 1,00,000- பிரைஸ்கள் 3059. முதல்பிரைஸ் ரூ. 20,000.
ஒரு டிக்கட் விலை. ரூ. 1
முடியும் தேதி 30-6-33. எடுக்கப்படும் தேதி 31-7-33.
மற்ற விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.
காரியதரிசி,
வி. திருவேங்கிடசாமி எம். ஏ.
பச்சையப்பன் ஹாஸ்டல், சேத்துப்பேட்டை, மதராஸ்.

# மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

(தோழர் பெட்ரண் ரஸ்ஸல் M. A., F. R. S.)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

பெண்ணுலகத்திற்குக் கிறிஸ்துவ மதத்தின் பேரால் ஏற்பட்ட கொடுமைகள் எண்ணற்றன. நேர்மையற்றதும் இயற்கைக்கு விரோதமானதும் அறிவுக்கு பொருந்தாதவைகளுமே அவற்றின் தன்மையாகும். ரோமாபுரியின் ஏகாதிபத்யம் சீர்குலைந்து சிதறுண்ட அக்காலத்தேதான் இந்த அநாகரீகக் கொள்கைகளின் தீமைகள் எல்லாம் அறிஞருலகத்திற்கு நன்கு வெளியாயின. 'பெண்கள் சமூகத்தைப்போற்றவந்தது கிறிஸ்து மதமே' என்பதாகப் பலர் பறைசாற்றித் திரிகின்றனர். இது மத அபிமானம்கொண்ட சரித்திரக்காரர்களால் குருட்டுத் தனமாகக் கட்டிவிடப் பட்ட புரட்டுக் கூற்றேயன்றி வேறல்ல. ஒருசிலரால் வேதவாக்கென வரையறுக்கப் பட்ட—மாற்ற முடியாத சில பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்ட பெண்ணுலகம், இயற்கையுலகில்-பகுத்தறிவுலகில் எல்லாத் துறைகளிலும் நலனுற்று மேன்மையடைவதென்பது எவ்வாறு இயலும்?

பெண்களை "மக்களை மயக்கிச் சாத்தானிடம் சேர்ப்பிக்கும் தூதர்கள்" என்பதாகவும், "காமக் களஞ்சியமே அவர்தம் பிறவிக் குணம்" என்பதாகவுமே, சமயக்குரவர்களாம் கிறிஸ்துமதப் போதகர்கள் (Monks) எக்காலத்தும் பறைசாற்றி வந்திருக்கின்றார்கள். இன்னும், அவர்களைப்பற்றி மதப்பிரசாரக சங்கங்கள் அதாவது சர்ச்சுகள் (Churches) என்ன கூறுகின்றன? என்று பார்ப்போமானால் பெண்களுக்கு கன்னிகா நிலைமையே (Virginity) பிரதானமாம்; அதாவது அவர்கள் என்றும் கணவரில்லாமல் கன்யாமாடஸ்திரியாய் இருக்க வேண்டுமாம். அந்நிலையை அடைய சக்தி அற்றவர்களுக்குத் தான் இல்லற வாழ்வு ஏற்பட்டுளதாம்! "கனலிற் பாய்தலுக்குப் பதிலாகக் கணவனைக்கொள்" (It is better to marry than to burn) என்பதாக St. Paul செண்ட் பால் எனும் கிறிஸ்தவ முனிவர் கூறியிருக்கிறார். இவ்வாக்கிலிருந்து, பெண்ணுலகத்தையும் இல்லறத்தையும் இயற்கை இன்பத்தையும் எவ்வளவு கேவலமாகக் கிறிஸ்துவர்கள் மதத்தின் பேரால் மதிக்கின்றார்களென்பதைப் பாருங்கள்.

மணவாழ்க்கையில் ஒருகாலத்தில் ஒன்றுபடநேர்ந்த இருவர்எக்காரணத்தைக்கொண்டும்எக்காலமும்பிரியவே கூடாதாம். இதுமதக்கோவில்களின் நியதி மற்றும் அவ்வாறு வாழ்க்கை நடாத்தும் ஆண் — பெண் ஆகிய. இருவருக்குமே இல்லற இன்பத்தின் இரகஸ்யங்கள் தெரியாதபடி அந்த மதம் கட்டளையிட்டிருப்பதால், அவ்வித மணத்தால் என்றும் துன்பமே ஓங்குமென்பதில் தடையென்ன? தவிர, முற்கூறிய மதப்பிரசார சங்கங்கள் (Churches) கர்ப்பத்தடை செய்தலை Birth Control மறுப்பதற்கெனக் கூறும் காரணத்திலிருந்தும் அவை பெண்ணுலகை நலியச் செய்யும் சதிமோசம் நன்கு வெளியாவதைக் கவனியுங்கள். ஒரு பெண் வருஷமோர் குழந்தையாகத் தான் சாகும் வரையில் பெற்றுக் கொண்டே வருவாளானல் அவள் இல்வாழ்க்கையில் இன்பம் அடைய இடம் உண்டா? இல்லை. கிரமமாக கர்ப்பத்தடை செய்வாளாயின் அவள் வாழ்நாள் எவ்வளவு இன்பமாகக்கழியும் என்று பாருங்கள். இவ்வித இன்பத்தைத் தடுக்கவேதான் அவர்கள் கர்ப்பத்தடையைக் கடிந்தெதிர்க்கின்றனர்!

கிறிஸ்துமதமும், பாபக்கூற்றும்.

2. கிறிஸ்து மதக்கோட்பாடுகளிலெல்லாம் அதிமுக்கியமாக விளங்கும் **பாபம்** என்பதைப் பற்றிய கொள்கை ஒன்றினால் மாத்திரம் மக்களுக்கு விளைந்திருக்கும் சீரழிவு இவ்வளவவ்வளவு என்று சொல்லத் தரமன்று. இந்தப் பாழும் **பாபத்**தின் மேல் கொண்ட மூடநம்பிக்கையால், மாந்தர் தங்கள் கஷ்டநிஷ்டூரங்களை வாய் விட்டுக் கூறவும் பயந்து சகித்துத் தகிப்பதோடு, அவை தம்தம் பாபகர்மத்தால் விளைந்த விதியெனக்கொண்டும், அவற்றை எதிர்த்தல் தகாதெனஎண்ணியும் சகலத்தையும் சகித்தலே அறிவுடைமையும் வீரத்தன்மையும் ஆகுமென்பதாகக் கருதித் திருடனைத் தேள் கொட்டினாற் போல் அந்தோ! திகைத்து வாடுகின்றனர்!!

இதனை **விளக்க** ஓர் உதாரணம் எடுத்தாள்வோம். (மேனாட்டில்) அநேகமாக எல்லாரையும் மேகபடை (Syphillis) எனும் நோய் வாட்டுகிறது. அதனை அறவே ஒழிக்க வேண்டும் என்பதாக நாம் பரிகாரம் தேடுகிறோம். அநேகமாக முன் ஜாக்கிரதையாகச் சில ஏற்பாடுகளைச் செய்து கொண்டால் எவரும் இந்த நோய் தன்னை அணுகாதபடி பாது காத்து கொள்ளலாம் என்பது சகலரும் அறிந்த விஷயமே; ஆனால் கிருஸ்தவர்கள் என்ன சொல்லுகின்றனர்? இவ்வித முன் ஜாக்கிரதையாகச் செய்து கொள்ள வேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி அன்னவர்களுக்கு வெளியிடுதல் மஹாபாவம் என்பதாகவும், தங்கள் மதக் கொள்கைக்கு மாறானதென்பதாகவும் நம்புகின்றனர்! ஏன்எனில்? பாபம் செய்தவர்கள்தக்கதண்டனையடைய வேண்டுமென்பதும், அதுவே மிக்க சிலாக்யம் என்பதுமேஅவர்தம்மூடக்கூற்று! அவனைமாத்திரம் கஷ்டப்பட விடுவதோடு மட்டுமா அவர்கள் கூற்று நிற்கின்றது? என்று பார்த்தால் அவனுடைய மாதர் மக்களும் கூட அந்தப் பாவிக்காகக் கஷ்டப் பட வேண்டுவதும் ஓர் நன்மையாம்! ஓர் நீதியாம்.

கிருஸ்துவஉலகில் இந்நாளிலே பல்லாயிரம் குழவிகள், பிறந்த அந்நாளிலிருந்தேஇந்தப் பிறவி நோயினால் (Syphilis) அல்லலுறுகின்றனர் எனவே பாபிகள் பாதிக்கப் படுதலே நன்மையென்பதாக மதத்தின் பெயரால் மதிகெட்டுக் கூறி வளா நிற்கும் மூடக் கிறிஸ்தவர்களன்றோ, அந்த அரும் பாலகரின் தீராத கஷ்டங்களுக் கெல்லாம் காரணமாகின்றார்கள். இவ்விதமான ஈவிரக்க மற்ற இராக்ஷஸ நடத்தைகளுக்கு இட்டுச்செல்லும் மத சித்தாந்தங்களால், மக்களின் மேன்மைக்கத்திற்கு எவ்வாறு விமோசனம் ஏற்படும் என்பதுதான் எனது கேள்வி.

3. மாந்தரின் வாழ்க்கை முறையைப்பற்றிய இவ்விதமான மத நோக்கங்கள் ஒரு புற மிருக்க, இல்லற இன்ப இரகசியங்களைப் பிறர்க்குப் போதிக்கும் விஷயத்தில் இந்தக் கிறிஸ்துவர் கொண்டுள்ள மனப்பான்மையைப் பார்ப்போம். இதைப் பற்றிய இவர்கள் நோக்கம் மக்களின் பொது நலத்தைப் பெரும் பாலும் புறக் கணிப்பதாகவேஇருக்கின்றது. காய்தலுவத்தலிலாது இவ்விஷயத்தைப் பற்றிக் கூர்ந்து பரிசீலனை செய்வோருக்கு—மதப்பற்று மிக்குடைய கிறிஸ்துவர்கள், தங்கள் மக்களுக்கு இல்லற இன்ப இரகசியங்கள் வெளி வராதபடி மதத்தின் பெயரால் தடை செய்வதால், விளையும் தீமை நன்கு தெளிவுறும் என்பது திண்ணம். அதனால் அவர்களுடைய மனோ தேக சுகங் குன்றுவதோடு மேற்படி விஷயங்களை உண்மை ஞானமற்ற பிற மனிதர்களிடத்திலிருந்து அரை குறையாகவும் ஒன்றிரண்டு மாறு பாடாகவும் கேட்டு; அதனால் அவர்கள் அல்லற் குழியிலாழ்ந்து அவதிப் படுதல் வெளிப்படை. இதனாலே தான அச்சிறுவர்கள் மனதில், பெண்ணுலகம் கேவலமானது, கெடுதலானது என்ற எண்ணங்கள் வேரூன்றுகிறன. ஞானம். அது எதுவாக இருப்பினும் மக்கள் அனைவருக்கும் அவசியமானதே யென்பதை எவரும் மறுக்க முடியாது. ஆதலின் எக்காலத்தும் எவரும், எந்தஞானத்தையும் தடை செய்தல் தகாது. எல்லா ஞானங்களை விட இந்த இல்லற இன்ப இரகசிய ஞானம் மக்களுக்கு இன்றியமையாததாதலின், இதை எக்காரணத்தாலும் தடை செய்தலே கூடாது. ஒருவன் ஒரு காரியத்தைப் பற்றிய உண்மைகள் ஒன்றும் தெரியாதபோது அவன் செய்யும் தவறுதல்கள், அவன் அவற்றையுணர்ந்த போது அவ்வளவு செய்ய மாட்டான் ஆதலின், உண்மை விளக்கம் எவருக்கும் உத்தம மானதே, இயற்கை உணர்ச்சியால் நிகழும் காரியங்களைப் பற்றிய, அவ்வித ஞானத்தைச் சிறுவர்களுக்கு விளக்கிக் காட்டாமல், பாபம் என்றும் சாத்தான் என்றும் விதியென்றும் கூறிப் பயத்தால் அவற்றை அழிக்க துணிதல் பேதமையேயாம்.

4- ஓர் புகைவண்டித் தொடரைக்காண ஆவல் கொள்ளாத குழந்தையும் உளதா? ஒரு சிறுவனிடம் தம்பி நீ ரயில் வண்டியைப் பற்றி நினைக்காதே, அது மஹா கெடுதலாகும் என்பதாகக் கூறி! அவன் ரயில்வே ஸ்டேஷனில்இருக்கும் போதும் ரயில் வண்டியிலேறிப் பிரயாணம் செய்யும் போதும் அவனது கண்களைக் கட்டி வைத்து; ரயில் என்ற வார்த்தையைக் கூட அவன் கேட்கும் படியாக வேறெவரும் பேச விடாமல் பாது காத்து அவன் எவ்வாறு ஒரு ஊரிலிருந்து மற்றொருருக்குப் போனான் என்பதைக் கூட ஓர் பரம இரகஸ்யமாக அவன் மனதில் தோன்றுமாறு பல மாறு பாடான விஷயங்களால் போதித்து வருவதாக வைத்துக் கொள்வோம். இவ்வாறெல்லாம் செய்வதனால் ரயிலை நேரில் காண வேண்டுமெனும் அவா அவனிடம் குறைவு படுமோ? ஒருக்காலும் குறைவு படாது. ஆனால், முன்னிருந்ததைவிட இப்போது பன் மடங்கு அதிகமாக ரயிலைப் பார்க்க வேண்டும் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவன் மனதில் கிளம்பும். எனவே இவ்விதவாகவே இயற்கையாகத் தன் மனதில் தோன்றும் ஆவலைப் பாபகர்மமானது என்பதாகப்பிறர் கூறும் ஒரு கொள்கையை அவன் எவ்வாறு மதிப்பான்? மிகக்கொடியதும், நியாய விரோதமானதும் இயற்கைக்கும் மாறானதுமாக வன்றோ கொள்வான். இவ்வித செய்கையால் புத்தி சாதுர்யமுடைய குழந்தைகள் கூட மனமுடைந்து கடைசியில் பித்தர்களாவார்களென்பது சரதம். நிற்க, ரயில் வண்டியைப்பற்றி எவ்வித மனப்பான்மை நிகழ்வதாகக் கூறினேமோ அதே மனப்பான்மை தான், இரு பாலரின் இல்வாழ்வைப் பற்றிய இரகஸ்யத்தை மறைப்பதால் நேரும். ரயிலைப்பற்றிய விஷயத்தை விட இந்த விஷயம் இன்றியமையாததாதலின், இதனால் நேரும் தீமை இன்னும் அதிகம். கிறிஸ்துவர்கள் ஆண் பெண் இருபாலரில் நல்லபிராயமடைந்த ஒவ்வொருவரும் தற்காலத்

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

குடி அரசு.

ஈரோடு 1932 டிசம்பர்மீ 4-உ

# ஏன் பயப்படவேண்டும்?

இன்று இந்தியாவில் சிறப்பாக தென்னிந்தியாவில் எங்கு பார்த்தாலும் எந்தப் பத்திரிகையைப்பார்த்தாலும், எந்த ஸ்தாபனங்களைப் பார்த்தாலும் அவற்றின் உள் மர்மம் "நாஸ்திகத்தை"க்கண்டு நடுங்கி "ஆஸ்திக"ப்பிரசாரம் செய்வதையே முக்கிய லட்சியமாகக்கொண்டு இருப்பதாகத்தெரியவருகின்றது.

இதற்கு உண்மையான காரணம் என்னவெனில் இன்றையத்தினம் உலகில் காணப்படும் வறுத்தவன் இளைத்தவன் நிலைமைக்கு அடிக்காரணமாய் இருந்து சோம்பேரிகளுக்கும், பேராசைக்காரர்களுக்கும், மூடர்களுக்கும் ஆதரவாயிருந்து அவர்களது நிலைமையை மேலும் மேலும்பலப்படுத்தி நிலை பெறச்செய்து வந்திருப்பது இந்த ஆஸ்திகமே"யாகும். விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் ஆஸ்திகம் என்பதாக ஒன்று இல்லாதிருந்திருக்குமானால் உலகில் மேல் ஜாதிக்காரனுக்கு இடமேது? குருமார்கள், முல்லாக்கள், பாதிரிமார்கள், அர்ச்சகர்கள், புரோகிதர்கள், பண்டார சன்னதிகள், பட்டக்காரர்கள், மடாதிபதிகள் ஆகியவர்களுக்கு இடமேது? பிரபுக்கள், முதலாளிகள் லேவாதேவிக்காரர்கள், மிராசுதாரர்கள், பண்ணையார்கள், ஜமீன்தாரர்கள், ராஜாக்கள், மகாராஜாக்கள், இளவரசுகள், லட்சுமி புத்திரர்கள் ஆகியவர்களுக்கு இடமேது?

அன்றியும் இந்த ஆஸ்திகம் என்பது இல்லாதிருந்திருக்குமானால் கீழ் சாதிக்காரன், ஏழை, பிச்சைக்காரன், கூலி வேலையாள் முதலிய இழிவு படுத்தப்பட்ட—அடிமைப்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடமேது? என்பனவைகளைக் கூர்ந்து அறிவு கொண்டு நடுநிலை என்னும் கண்ணாடி மூலம் பார்த்தால் யாவருக்கும் இதன் உண்மை நன்கு விளங்கும்.

அன்றியும் இன்றைய ஆஸ்திகப் பிரசாரகர்கள் எல்லாம் எங்கு பார்த்தாலும் சரீரத்தினால் சிறிதும் பாடுபடாமல், நோகாமல் உட்கார்ந்து கொண்டு ஊரார் உழைப்பில் உண்டு உடுத்தித்திரியும் சோம்பேரிகளும் நயவஞ்சகர்களுமாகவே இருக்கின்றார்களே ஒழிய வேறுயாராவது இவ்வளவு இருக்கிறார்களா? என்பதைக் கவனித்தாலும் உண்மை விளங்காமல் போகாது.

மேலும்இந்தஆஸ்திகக்கூட்டம் எல்லாம் நாத்திகத்திற்கு அணுவளவாவது பதில் சொல்ல யோக்கியதை இல்லாமல் இருந்தாலும் நாத்திகம் பரவுவதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடித்து அதை சரிப்படுத்துவதற்கு யோக்கியதையோ, இஷ்டமோ இல்லாமல் இருந்தாலும் அதைப்பற்றிக் கவனிப்பதென்பதில்லாமல் ஒரே அடியாய் "இது ரஷியப்பிரசாரம், போல்ஸ்விக் பிரசாரம், இவை மக்களை மிருகப்பிராயத்திற்குக் கொண்டுவரும் பிரசாரம், என்று சொல்லிப் பாமர மக்களின் மடமையை உபயோகப்படுத்திக்கொண்டு அவர்களை வெறியர்களாக்கி அதனால் ஆத்திகத்தை நிலை நிறுத்திவிடலாம் என்றே கருதுகிறார்கள். பாமர மக்களும், ஏழை மக்களும், தாழ்த்தப்பட்டு இழிவு படுத்தப்பட்ட மக்களும் என்றென்றைக்கும் மூடர்களாகவே இருப்பார்கள் என்று நினைத்துக்கொண்டிருப்பது தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டிருப்பதாகத்தான் முடியுமே அல்லாமல் மற்றபடி அதனால யாதொரு பயனும் ஏற்படப்போவதில்லை என்பது மாத்திரம் உறுதி.

நாத்திகம் "ரஷியாவிலிருந்துபரவுகின்றது" என்று சொல்லிவிடுவதன் மூலமாகவே ஆத்திகர்கள் நாத்திகத்திற்கு ஒரு இழிவு கற்பிக்க முயற்சிக்கின்றார்கள். அதற்கு உதாரணமாக ரஷியாவின் நாத்திக திட்டத்தையும் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

அதாவது "ரஷிய சர்க்கார் தங்கள் நாட்டில் 5-வருஷங்களுக்குள் கடவுள், மதம், கோயில் ஆகியவைகள் இல்லாமல் இருக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த 5-வருஷ நாஸ்திகதிட்டத்தைப் பற்றி லண்டன் பார்லிமெண்டு மெம்பர் தோழர் ஆத்டச்சஸ் என்பவர் பேசிய ஒருவிருந்துப் பேச்சில் குறிப்பிட்டதென்னவென்றால்;—

I. முதல் வருஷத்தில்கோவில்களையும், மார்க்க ஆராதனைகளையும் இடங்களையும் மூடிவிடுவது.

2. இரண்டாவது வருஷத்தில் எந்த வீடுகளிலும் பிரார்த்தனைக்கு இடம்இருக்கக்கூடாதென்பதுடன், சர்க்கார் உத்தியோகத்தில் மத சம்பந்தமான எண்ணமுடையவர்கள் யாரும் இல்லாமல் செய்துவிடுவது. மத சம்பந்தமான புஸ்தகங்கள் ஆதாரங்களெல்லாம் அழிக்கப்பட்டாகவேண்டும். நாத்திகபடம், நாடகம், சினிமா முதலியவை நூற்றுக்கணக்காக நடத்தவேண்டும்.

3. மூன்றாவது வருஷத்தில் எந்த வீடுகளிலும் கடவுள் என்ற உச்சரிப்பே இல்லாதபடி செய்துவிடுவது. இந்த உத்திரவுக்கு கீழ்படியாதவர்களை தேசத்தைவிட்டு வெளியாக்கிவிடுவது.

4. எல்லா கோவில்களையும் பிரார்த்தனை ஸ்தலங்களையும் பொது நன்மைக்கு பயன்படும்படி சினிமா, இளைப்பாறும் மண்டபம், காலப்போக்கு ஸ்தலம் ஆகியவைகளாக மாற்றுவது.

5. ஐந்தாவது வருஷத்தில் அதாவது 1—5—37க்குள் கடவுளுக்கு வீடோ வணங்க இடமோ, நினைக்க உள்ளமோ ரஷிய எல்லைக்குள் இருக்கக் கூடாது."

என்பதாகும். இந்தக் காரியங்களில் ரஷியர் வெற்றிபெற்றுவிடுவார்கள் என்பதற்கு இப்போதே அங்கு பல அறிகுறிகள் காணப்படுகின்றன. அன்றியும் ரஷியா இந்த நிலை எய்திவிட்டால் அங்குள்ள மனித சமூகம் விடுதலையும், சமத்துவமும், சுதந்திரமும் பெற்று கவலையன்றி மேன்மையாய் வாழ்வார்கள் என்பதற்கும், அங்கு அநேக அறிகுறிகள் தோன்றுகின்றன. எப்படியெனில் ரஷியர்கள் கடவுளையும் மதத்தையும்அழிக்கவேண்டுமென்று கருதியது இன்று நேற்றல்ல. வெகுகாலமாகவே கருதிவந்திருக்கிறார்கள்.

என்றைய தினம் கஷ்டப்படுகின்ற மக்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ஏழைமக்களுக்கு, தொழிலாளிகளுக்கு தங்கள் கஷ்டத்தையும் இழிவையும் பசிக்கொடுமையையும், நீக்கிக்கொள்ளவேண்டும் என்கின்ற உண்மையான எண்ணம் உதிக்கின்றதோ அன்றே கடவுளும், மதமும், ஒழிந்தான் தீரவேண்டும், மறைந்துதான் ஆகவேண்டும்.

ஆகவே ரஷிய ஜனங்கள் கொடுங்கோன்மையிலும், முதலாளிகள், பிரபுக்கள் மார் ஆதிக்கத்திலும் அனுபவித்து வந்த துன்பங்களில் இருந்து மீளவேண்டும் என்று கருதிய நிமிடமே கடவுள் பேரிலும், மதத்தின் பேரிலும், பாய்ந்து அவற்றின் பிடித்தத்தை மக்களிடை இருந்துதளர்த்தி விரட்டியடிக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்களது வெற்றி முரசொலி "கடவுளை ஒழிப்பது பணக்காரர்களை ஒழிப்பதாகும்" "மதத்தை ஒழிப்பது உயர்வு தாழ்வை அழிப்பதாகும்" என்பதேயாகும்.

இந்முரசை ரஷியாவெங்கும் அடித்து ரஷியமக்களின் உள்ளத்தில் கல்லின்மேலெழுதிய எழுத்துப்போல் பதியவைத்த பிறகுதான் கொடுங்கோன்மை வேருடன் சாய்ந்தழிந்தது. பணக்காரத்தன்மை அதன் கிளைகளுடனும் சுற்றங்களுடனும் மறைந்தொழிந்தது.

கடவுளும், மதமும் ஒழிந்துவிட்டதால் "மக்களுக்கு" ஆபத்து என்பது ரஷியாவில் ஓரளவுக்கு ருஜுப்படுத்தப்பட்டதை நாமும் நன்றாய் மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால்எந்தமாதிரியான மக்களுக்குஆபத்து ஏற்பட்டது என்பதுதான் இங்கு கவனிக்கவேண்டிய முக்கிய விஷயமாகும். எனவே எப்படிப்பட்ட மக்களுக்கு ஆபத்துவந்துவிட்டது என்றால், இன்றைய தினம் இந்தியாவில் ஆத்திகப்பிரசாரமும், மதப்பிரசாரமும் செய்யும் மக்களைப்போன்ற மக்களுக்குத்தான் ரஷியாவிலும்கடவுளும் மதமும் ஒழிந்ததால் ஆபத்து வந்துவிட்டது. இப்படிபட்ட மக்கள் அங்கு 100க்கு 5 பேர்களோ 7 பேர்களோ தான் அதாவது சக்கிரவர்த்திகளாகவும், அரசர்களாகவும், ஜமீன்தாரர்களாகவும், முதலாளிகளாகவும் பெரியபெரிய உத்தியோகஸ்தர் டாக்டர்கள், வக்கீல்கள் போன்ற பல ஊரான் உழைப்பில் கொள்ளை அடிப்பவர்களாகவும், பாதிரிகளாகவும், முல்லாக்களாகவும், குருமார்களாகவும் மேல் ஜாதிக்காரர்களாகவும் இருந்து வந்த மக்களுக்கே தான் ஆபத்து வந்து விட்டது.

மற்றபடி இவர்கள் தவிர்ந்த மற்ற 100க்கு 90 பேர்களுக்கு மேற்பட்ட ஏழைகள் தொழிலாளிகள் கீழ்மைப்பட்டவர்கள் என்று சொல்லத்தக்க மக்கள் யாவருக்குமே மேன்மை கிடைத்துவிட்டது, அதுவும் தூங்கும்போது கீழ் மகனாய் கூலியாய் அடிமையாயிருந்து விழித்தெழும்போது மேன்மகனாய் விடுதலை பெற்றவனாய் சமவுரிமை அடை

ந்தவனாய் ஆனதுபோல் நிலைமை உயர்ந்து விட்டது.

ஆகவே கடவுளும் மதமும் ஒழிவதின் மூலம் மக்கள் சமூகத்திற்கு எந்த நாட்டிற்கும் இவ்வித "ஆபத்து" நிலைமைதான் ஏற்படக்கூடும். இந்தப்படியான "ஆபத்து" நிலையை தாழ்த்தப்பட்ட அடிமைப்படுத்தப்பட்ட ஏழைத் தொழிலாளி மககள். அதுவும் இந்தியாவில் மாத்திரமல்லாமல் ரஷியா தவிர உலகமெங்கனும் 100க்கு 90 பேர்களாயிருப்பவர்கள் மேளதாளம் வைத்து வருந்தி வருந்தி அழைத்து வரவேற்க வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களை இனி ஹரி பஜனையினாலும்—ஆண்டவன் மகிமையினாலும்—அடியார்கள் தூதர்கள் பெருமையினாலும் ஒருநாளும் மறக்கடித்துவிட முடியாது.

உலகத்தில் எந்த ஆண்டவனை நம்பின சமூகமும் எந்த மதத்தை ஏற்ற சமூகமும், இந்த கதிதான் இருந்து வருகின்றதேயொழிய "ஆண்டவனையும் அவனை அடையும் மார்க்கத்தையும்" ஒழித்த ரஷியாவைப்போல் மனித சமூகம் உயர்வு தாழ்வு இல்லாமல் சமதர்மமாய் இருப்பதாகயாராவது சொல்ல முடியுமா?

பணக்காரர்கள் கோவில்கள், சர்ச்சுகள், மசூதிகள் கட்டியதினாலும், வேதபாடசாலைகள், யுனிவர்சிட்டிகள் மதரசாக்கள் கட்டிவிட்டதினாலேயும், பத்திரிகைக்காரர்கள் வேதத்தின் பெருமையையும், புராணத்தின் மகிமையையும், பக்கம் பக்கமாய் எழுதி "ஆண்டவனையும் மார்க்கத்தையும்" புகழ்ந்து கொண்டு "நாஸ்திகர்"களை வைவதினாலேயும் ஏழை மக்கள், இழிவுபடுத்தப்பட்ட மக்கள், பாடுபட்டுப் பட்டினி கிடக்கும் மக்கள், எழுத்து வாசனை அறிய வகையில்லாமல் தடுத்து தாழ்த்தி வைக்கப்பட்டிருக்கும் மக்கள் கண்களில் மண்ணைப்போட்டுவிட முடியுமா? என்று தான் கேட்கின்றோம்.

இப்படிப்பட்ட மக்கள் எந்த நாட்டில் எந்த மார்க்கத்தில் எந்த ஆண்டவன் படைப்பில் இல்லாமலிருக்கின்றார்கள் என்று பந்தயம்கட்டி கேட்கின்றோம். இந்த குறைகளுக்கு, கொடுமைகளுக்கு ஆண்டவன் செயல்" என்பதல்லாமல் வேறு என்ன பதில் இந்த ஆத்திகர்கள் சொல்லக்கூடும் என்று பணிவாய்க்கேட்கின்றோம். உலகம் தோன்றி பல "லட்சக்கணக்கான" காலங்களாகிவிட்டன. "கடவுள்கள்" தோன்றி வெகுகாலம் ஆகிவிட்டன. மார்க்கங்கள் தோன்றி ஆயிரக்கணக்கான வருஷங்களாகிவிட்டன. இத்தனைகால கடவுள்—மத ஆட்சியிலும் மனித சமூகம் சீர்படவில்லை. கவலையில்லாமல் வயிற்றுக்கு ஆகாரமில்லை. மனிதனுக்கு மனிதன் அடிமைப்பட்டு உழைக்காமல் வாழ முடியவில்லை. என்கின்றதான நிலைகள் இன்னமும் இருக்குமானால் இந்த கடவுள்களும், மார்க்கங்களும் இனி அரை நிமிஷமாவது உலகில் இருக்க அருகதையுண்டா என்றுதான் கேட்கின்றோம்.

100 வருஷ காலம் இந்தியாவை பிரிட்டிஷார் ஏகபோக சர்வாதிகார சக்கிரவர்த்தியாய் ஆண்டும் இந்தியாவில் 100-க்கு 90-தற்குறிகளும் 100-க்கு 97 கீழ் ஜாதியாரும் மற்றும் தீண்டாத ஜாதியும், தெருவில் நடக்காத ஜாதியும் இன்னும் இந்தியாவில் இருப்பதினால் அவர்கள் இந்தியாவை ஆள ஒரு சிறிதும் யோக்கியதை கிடையாது என்று எப்படி சொல்லுகின்றோமோ, அவர்களை விரட்டி அடிக்க எப்படிபாடுபடுகின்றோமோ அதுபோல்தான் ஏன்? இன்னும் அதற்கும் மேலாகத்தான் இந்தக்கடவுள்களையும் மார்க்கங்களையும் விரட்டி அடிக்க கடமைப்பட்டிருக்கின்றோம். எப்படி எந்த மதமும், எந்தமார்க்கமும் மக்களைசமமாகபாவிக்காது சமமாக ஆக்காதுஇதுவரை பார்க்கவும்இல்லை, ஆக்கவும் இல்லை என்று சொல்லுகின்றோமோ, அதுபோலத்தான் இன்று உலகில் வேறு எந்த அரசும், ஆட்சியும் மக்களை சமமாக பாவிக்கவில்லை—நடத்தவில்லை என்று சொல்லி எப்படிப்பட்ட ஆட்சியும் வேண்டியதில்லை சமதர்ம ஆட்சியே வேண்டும் என்கின்றோம். இதனால் யாருக்கு என்ன கஷ்டம் என்பது நமக்கு விளங்கவில்லை. யாராவது "எங்கள் ஆண்டவன்கட்டளை, எங்கள் மார்க்ககொள்கைஎங்கள் அரசியல் முறை இதுதான்" என்று சொல்லவருவார்களானால் குஷாலாய் வரட்டும் மண்டியிட்டுவரவேற்கக்காத்திருக்கிறோம் அவர்களோடு ஒன்று படக்கலா முன்னிர்க்கிறோம். அதில்லாமல் "இது போல்ஷவிக் பிரசாரம்" "இது மனித சமூகத்திற்கு ஆபத்து" "இது தேசியத்திற்கு ஆபத்து" "இது சுயராஜ்ஜியத்திற்கு ஆபத்து" "இது சட்டத்திற்கும் நீதிக்கும், அமைதிக்கும் ஆபத்து என்கின்றதான பூச்சாண்டிகளைக்கொண்டு ஏழைகள்-பட்டினி கிடக்கின்றவர்கள் —கீழ்மைப்படுத்தப்பட்டவர்கள் கண்களில் முளகுப்பொடியைத்தூவ முற்பட்டால் கண்கள்போனாலும் உயிர் போனாலும் எத்தனைகாலமாவதானாலும் எப்பாடுபட்டாகிலும் இதைச்சாதித்துத் தீரவேண்டுமென்று நான்சொல்லுவோம்—அவர்களுக்கு இதைதவிர வேறு மார்க்கம் இல்லை என்றுதான் சொல்லுவோம்.

---

## ஈ. வெ. இராமசாமிக்கு உபசாரப்பத்திரம்

---

### கோவை நகரசபை தீர்மானம்.

28—11—32-ந்தேதி கூடிய கோவை நகர சபை கூட்டத்தில் தோழர். நஞ்சய்யா அவர்களால் கொண்டுவரப்பட்ட "மேல் நாடு சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பிய ஈ. வெ. ராமசாமிக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கவேண்டு"மென்ற தீர்மானம் நிறைவேறியது.

---

## வி. வி. ராமசாமி வெற்றி.

இராமநாதபுரம் ஜில்லா போர்டுக்கு விருதுநகர் முனிசிபல் சேர்மன் தோழர். வி. வி. ராமசாமி அவர்கள் அதிக ஓட்டுகளால் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## மதுரை ஜில்லா சுயமரியாதைத் தொண்டர்களுக்கோர் வேண்டுகோள்.

---

### அறிக்கை நெம்பர் 4.

நாளது 1932 ம் வருஷம் டிசம்பர் மாதம் 17—18-தேதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மதுரை நகரில் மதுரை ஜில்லா முதலாவது சுயமரியாதை மகாநாடு கூடப்போவதால், நம்இயக்கத்தோழர்கள்நாளது டிசம்பர் 15-தேதிக்குள் தங்கள் தங்கள் பெயர் விலாசங்களை அனுப்பி தொண்டர்களாக பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம் என மகாநாட்டு வரவேற்புக்கமிட்டியார் தெரிவிக்கிறார்.

(மதுரை மகாநாடு விஷயமாகவந்திருக்கும் 3 நெம்பர் கட்டுரை அடுத்த வாரம் வெளிவரும்)

---

## நாகப்பட்டணம் சுயமரியாதைச்சங்கம்.

---

27-11-32ந் தேதி மாலை 6-30 மணிக்கு நாகை சுயமரியாதைச் சங்கநிர்வாகக்கூட்டம் சங்கத்தலைவர் ஆர். வி. கோபால் அவர்கள் தலைமையில் கூடியது. தோழர் வி. சாமிநாதன், குஞ்சு, சுயமரியாதை கீதங்கள் பாடினார்கள். தோழர்கள் கே. முருகேசன், எம். எஸ். இராஜகோபால், முருகையா, எம். கோவிந்தராஜ், ஜ. கோவிந்தன், என். சாமிநாதன், என். சிவஞானம் முதலியவர்கள்பலவிஷயங்கள் விரிவாகபேசினார்கள் கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டன.

### தீர்மானம்.

நாகை தாலுகா 2வது சுயமரியாதை மகாநாட்டை ஜனவரி மாதத்தில் நடத்தி விடவேண்டும்மென்றும் நம் தாலூகா பிரமுகர்களை வரவழைத்து அவர்கள் அபிப்பிராயங்களைக்கேட்டு உடனே மகாநாட்டு கமிட்டி, வரவேற்பு கமிட்டி முதலியவைகளை ஏற்படுத்தி கூடிய சீக்கிரம் மகாநாடு சென்றஆண்டைவிட இவ்வாண்டில் அதிவிமரிசையுடன் நடத்திக்கொடுக்கும்படி மகாநாட்டு ஆரம்ப கமிட்டியாரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### வாராந்திரக்கூட்டம்.

பிறகு வாராந்திரக்கூட்டம் தலைவர் தலைமையிற் கூடியது. தோழர் சிவராமசாமி, சாமிநாதன், முருகேசம், ஆதிதிராவிடரும்ஆகியவர்கள் ஆலயப்பிரவேசம் என்பதைப்பற்றிபேசினார்கள்.

---

## கோவில் பட்டி

### தோழர். கே. பி. பாக்கியம் கர்ஜனை.

கோவில்பட்டியிலுள்ள காந்திச் சவுக்கத்தில் சிறையினின்றும் வெளிவந்த காங்கிரஸ் தொண்டர்களால் கூட்டப்பட்ட தீண்டாமை விலக்குக் கூட்டத்தில் காங்கிரசின் தீண்டாமையைப்பற்றி பேசினார்கள்.

கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்த இந்நகர் சுயமரியாமைச் சங்கத் தலைவரும், சமதர்ம சங்கத்து நிர்வாகஸ்தருமான தோழர் கே. பி. பாக்கியம் அவர்களைத் தீண்டாமைவிலக்கு என்பதைப்பற்றி பேசும்படி கேட்கப்பட்டது. அவர் தீண்டாமை ஒழியவேண்டுமானால் அதற்காதாரமான மதம் முதலில் ஒழிய வேண்டும் என்றும், கலப்பு மணம், சமபந்தி போஜனம் முதலியவைகளால்தான் தீண்டாமை அடியுடன் ஒழியுமென்றும் பேசினார்.

கூட்டமுடிவில் தோழர் கே. பி. பாக்கியம் காங்கிரஸ் கூட்டத்தில் சுயமரியாதைச்சொற்பொழிவு செய்தது பற்றி ஜனங்கள் பேசிக்கொண்டு சென்றார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## கோட்டாறு

### சுயமரியாதை வாசிப்புச்சாலை.

மேற்படி வாசிப்புச் சாலையின் மாதாந்தர பொதுக்கூட்டம் வருகிற வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி சங்கக் கட்டிடத்தில் நடைபெறும். அவ்வமயம் நாகர் கோவில் சுயமரியாதை இளைஞர் சங்கத்தின் தலைவரும் எதிர்ப்புக்கஞ்சா வீரரும் இந்நகர் பிரபல சுயமரியாதைத் தொண்டருமான தோழர். ஆர் மாடசுவாமி அவர்கள் "கடவுள்" என்னும் பொருள் பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள் என தெரிகிறது.

ஒரு நிருபர்.

### ஈரோடு முனிசிபாலிட்டியில் ஈ. வெ. ராமசாமிக்கு உபசாரப்பத்திரம்.

மேலநாட்டுச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பிய தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு ஈரோடு முனிசிபாலிட்டியாராலும், மகாஜன ஹைஸ்கூல் கமிட்டியாராலும், ஹைஸ்கூல் உபாத்தியாயர்களாலும், உபசாரப்பத்திரங்கள் வாசித்துக்கொடுப்பதற்கு ஒரு உபசாரக்கூட்டம் 3—12—32-ந்தேதி முனிசிபல் ஆபீஸ் காம்பவுண்டில் போடப்பட்டிருந்த பந்தலில் நடைபெற்றது. அதற்கு முனிசிபல் கௌன்சிலர்களும், வியாபாரிகளும், முஸ்லீம்களும், உத்தியோகஸ்தர்களும், உபாத்தியாயர்களும், மாணவர்களும், உள்ளூர்பிரபலஸ்தர்களும், ஏராளமாய்விஜயம் செய்திருந்தார்கள். மாணவிகளால் கோலாட்டமும், கும்மியும் நடைபெற்றது. முனிசிபல் சபைசார்பாக சேர்மன் அவர்களாலும், மஹாஜன ஹைஸ்கூல் கமிட்டி சார்பாக மேற்படி கமிட்டி காரியதரிசி தோழர் சிக்கையா அவர்களாலும் ஹைஸ்கூல் உபாத்தியாயர்கள் சார்பாக மேற்படி ஸ்கூல் தலைமை ஆசிரியர் தோழர். மீனாட்சிசுந்தரம் அவர்களாலும் உபசாரப்பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பின் தோழர் ராமசாமி அவைகளுக்கு பதில்கூறினார். (பதிலும், மற்ற நிகழ்ச்சிகளும் அடுத்தவாரத்தில் வெளிவரும்) பின்சந்தன தாம்பூலம் கற்கண்டு வழங்கப்பட்டபின் கூட்டம் கலைந்தது. அன்றிரவு தோழர். கே. எ. ஷேக் தாவுது அவர்கள் வீட்டில் விருந்து நடந்தது. 4-12-32-ந்தேதிஞாயிற்றுக்கிழமை மாலை தோழர். ராமசாமி அவர்களுக்கு மஹாஜனஹைஸ்கூல் மாணவர்களால் ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்படுமென தெரிகிறது.

(ஒரு நிருபர்)

### இராயபுரம் கண்ணப்பர் இலவச வாசக சாலை.

10-11-32 மாலை 6 மணிக்கு ஷை வாசகசாலை தலைவர் தோழர். கே. சி. பாலசுந்தம் அவர்க்ள் தலைமையில் ஓர் கூட்டம் கூடி அலி ஜனாப் சவுக்கார் சி. அப்துல் அக்கிம் சாயபு பகதூர் அவர்கள் வட ஆற்காடு ஜில்லா போர்டு தலைவர் ஸ்தானம் வெற்றி பெற்றதைப்பற்றி வாசகசாலையின் சார்பாக நல்வாழ்த்துப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது அவ்வமயம் வாசகசாலை கட்டிடத்திற்கு முன் வாக்களித்த ரூபாய் 500-ம் கொடுத்து விட்டார்.

மேனாடு சென்று நம் தாய்நாடு திரும்பிய தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் சென்னை நகருக்கு 20-11-32ல் விஜயஞ்செய்த தினம் வாசகசாலையின் சார்பாக வரவேற்பு இதழ் அளிக்கப்பட்டது.

செட்டி நாட்டு இளவரசர், தோழர் எம். எ. முத்தைய செட்டியார் அவர்கள் சென்னை நகரசபை தலைவராக நியமனம் செய்ததைப்பற்றியும், தோழர் பொப்லி ராஜா அவர்கள் சென்னை மாகாண முதன்மந்திரியாகவும் வெற்றிபெற்றதையும் பாராட்டுகிறது.

தாழ்த்தப்பட்டாருக்கு ஆலைய நுழைவு உரிமை கொடுக்க வேண்டுமென்று தோழர் டாக்டர். சுப்பராயன் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் சென்னை சட்டசபையில் நிறைவேற்றியதை பாராட்டுகிறது.

தோழர் ஆர். கே. ஷண்முகம் பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ. அவர்கள் அருந்துணைவியாரின் பிரிவாற்றுமைக்கு 22-11-32ல் வாசகசாலையின் சார்பாக அநுதாபத்தைதெரிவித்துக் கொள்கிறது. மற்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது என ஷை வாசகசாலை காரியதரிசி எழுதுகிறார்.


மதுரை ஜில்லா முதலாவது

## சுயமரியாதை மகாநாடு.

அறிக்கை நெ. 2

1932-டிசம்பர் 17, 18 தேதி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில்

தோழர் ம. சிங்காரவேலு B. A., B. L.

அவர்கள் தலைமையில் நடைபெறும்.

சென்னை ஸ்தலஸ்தாபன முதல் மந்திரி தோழர். ராஜா சாகிப், பொப்பிலி அரசர் அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைப்பார்கள்.

| | | |
|---|---|---|
| வரவேற்புக் கட்டணம் ... ... | ரூ. | 3—0—0 |
| பிரதிநிதிகள் கட்டணம் .... | ரூ. | 2—0—0 |
| விசிட்டர் கட்டணம் ... ... | ரூ. | 1—0—0 |

சகோதரிகளுக்குப் பிரதிநிதி சீட்டும், சாப்பாட்டு வசதிகள் இனமாக அளிக்கப்படும். மற்ற பிரதிநிதிகளுக்கும் ஜாகை, சாப்பாடு முதலிய வசதிகள் இனமாக செய்து கொடுக்கப்படும். இயக்க அபிமானிகளும், மற்ற தோழர்களும் விஜயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

A. N. வெங்கிடசாமி,
பொதுக்காரியதரிசி.

A. S. அருணாசலம்,
A. வேணுகோபால்,
M. S. சுப்ரமணியம்,
P. V. விநாயகமூர்த்தி,
T. ஆவடையப்பன்,
உதவிக்காரியதரிசிகள்.

S. தியாகராஜன்,
வரவேற்புகமிட்டி தலைவர்.

S V. P. N. S. தங்கமணி
வரவேற்புக்கமிட்டி உபதலைவர்

A. A. ஆறுமுகம்,
பொக்கிஷதார்.

S. V. இராமலிங்கம்,
தொண்டர்படைத் தலைவர்.

A. S. ஆனந்தம்,
விளம்பர அதிகாரி.



Ready for Sale! Ready for Sale!!

## The Crux of the Indian Problem
## By Dr. Paranjpye M. A., D. Sc.

———)o(———

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are Sincerely interested in social advance and rejuvanation must go through Dr. Paranjpye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of the present degradable Social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God.

Clear cut ideas! Rationalistic views! matured sentiments!!

English Print well gotup and neatly bound about 100 Pages

| | |
|---|---|
| Price per copy ... ... | Rs. 1—0—0 |
| For Subscribers of Kudi Arasu | As. 0—8—0 |

Can be had of:—

Kudi Arasu Book Depot, Erode.


ரோஜா முத்தையா

[9-ம் பக்கத்தொடர்ச்சி]

தில் நரம்புத்தளர்ச்சியால் க்ஷீணித்திருப்பதற்குக் காரணம், அவர்கள் சிறுவயதாயிருக்கும்போது மதத்தின் பெயரால் இல்லற இரகஸ்ய ஞானம் தடைசெய்யப்பட்டதால், அவர்கள் மனம் தெளிவுறாமல் மதிமயங்கி மாறுபட்ட வழிகளில் சென்று சிதைவுண்டதனாலேயே யெனலாம். இளமையில் இவர்களது மனதில் ஊன்றப்படும் பாபம் என்னும் வித்தே பிற்காலத்தில், கொடூர சிந்தை, பயங்கரம், மௌடீகம் முதலிய கிளைகளாகப் பரிணமிக்கின்றது. ஒரு சிறு குழந்தை தான் இயற்கையாக அறிய ஆவல் கொள்ளும் எந்த விஷயத்தையும், பெரியோர் அவர்களிடத்திலிருந்து மறைத்தல் அறிவுடைமையாகாது. இவ்விஷயம் பிரதம பாடசாலைகளில் கையாளப்பட்டு மேலோங்குகிற வரையில் எந்த தேசமும் அறிவுடைய மக்களை யடைதல் இயலாது. ஆனால், கிருஸ்துமத சங்கங்களால்? தேசக்கல்வி ஸ்தாபனங்கள் ஆட்டப்படுகிறவரையில் இக்காரியம்நடைபெறுதல்குதிரைக்கொம்பேயாகும்.

5. நாம் முன்னர் குறித்த கிறிஸ்துவக் கொள்கைகளைப்பற்றிய எதிர்ப்புகள் ஒருபுறமிருக்க; இன்னும் நன்றாக விளக்கிக் கூற வேண்டுமானால் கிருஸ்துவ மதத்தின் முக்கிய தத்துவங்களத்தனையும் கால தேச வர்த்தமானங்களுக் கேற்ப மாற்றப்பட வேண்டியதே; அவ்வாறு மாற்றப்படுகிற வரையில் கிறிஸ்துவ மதத்தை அறிவுடையோர் எவரும் அங்கீகரிக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

6. கடவுள் இப்பூவுலகத்தைச் சிருஷ்டித்தார். அவர் அன்பின் உருவகம், சர்வவியாபி. இந்த உலகத்தைச் சிருஷ்டி செய்வதற்கு முன்னதாகவே இதில் கஷ்டநிஷ்டூரங்கள் பல உற்பவிக்கும் என்பதை அவர் உணர்ந்தவரே; ஆதலின் இதன்கண் நடைபெறும் சமஸ்த காரியாதிகளுக்கும் ஆதிகாரணம் கடவுளே. எனவே கஷ்டங்களெல்லாம் பாபத்தால் விளைந்ததெனக் கூறுவதனைத்தும் நிஷ்பிரயோசனமான வார்த்தைகளேயாகும். ஏனெனில், முதலாவதாக அக்கூற்று முழுப்பொய்யே. தீவினையனைத்தும் பாபத்தின் பலனெனின்—நீண்ட நதிகள் நிறைந்து நிலை தடுமாறுவதும், எங்கேயோ உள்ள எரிமலைகள் எதிர்பாராத விதமாக பூகம்பமாக எதிர்ப்படுவதும் இயற்கையின் இயல்பா? அன்றி பாபத்தின் பயனா? அவ்விதம் அவைகள் பாபத்தின் பிரதி பலனாகவே பரிணமிப்பதாக இருப்பினும், அவ்வகைத்துணிபால் நமக்கேற்படும் நன்மை என்ன? மனிதரைக் கொன்று மகிழ்தலே மாண்பாகக் கருதும் ஓர் மகனானவன், மனமாற முன்னடியே யுணர்ந்து பெறுவனேல், அவனுற்றும் கொலைகளத்தனைக்கும் கர்த்தா நானா அவனா? எனவே கடவுள் மக்களைச் சிருஷ்டிப்பதற்கு முன்னரே, அவர்கள் செய்யும் பாபகரமான அதிக்கிரமங்களை உணர்ந்திருப்பதாகக் கொள்வோமாயின், மக்கள் அவரவர் பாப வினைக்கேற்ப நடாத்தும் துஷ்கிருத்தியங்களின் பலாபலன் அவ்வகை மாந்தரைச் சிருஷ்டித்த கடவுளையன்றோ சென்று சாருவதாகின்றது. ஆனால் கிறிஸ்துவர்கள் தங்களது பாபக் கூற்றுக்கு ஆதாரமாகக் காட்டும் அத்தாக்ஷி யென்னவெனில்---இவ்வுலகத்திலே கஷ்டங்களை அனுபவிப்பதால் தான் ஒருவனுடைய பண்டைய பாப மூட்டை செலவழிந்து தூய்மையுறுகிறானும்; ஆதலின் கஷ்டங்கள் வருவன அனைத்தும் நமது நன்மைக்கே; எனவே கஷ்டங்கள் இவ்வுலகில் இருப்பது நாம் பாபிகள் என்பதற்கேற்ற சான்றாம்!

கடவுள் பக்தியின் பெயரால் ஜீவஹிம்சை செய்வோரது அறிவின் திரிபே போல் இதுவும் ஓர் ஆதாரமற்ற கூற்றேயாம்.

உண்மைக் கிறிஸ்துவன் எவனாயினும் என்னோடு, பால்மணமாறாத பாலர்களிருக்கும் ஓர் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து, அவர்கள் படும் துயரத்தைக்கண் கொண்டு பார்க்கட்டும். அவ்வாறு கஷ்டப்படுவதற்கு அந்தக் குழந்தைகள் செய்த பாவங்கள் இன்னதென அவன் கைவிட்டுக் கூறிவிட்டுப் போகட்டும். அக்குழவிகளும் பாபம் தான் செய்திருக்க வேண்டுமென அவன் துணிந்து கூறுவானேல், அவனை அன்பும் அனுதாபமு உடைய ஓர் மனுஷ்யப் பிறவியாக நீங்கள் கருதுவீர்களா? சுருங்கக் கூறுமிடத்து, பாப துஷ்கிருத்தியங்களைச் செய்யுமாறு சிருஷ்டித்து அனுப்பிவிட்டு அவற்றைப் பதுங்கிப் பார்த்து மகிழும் அந்த நெஞ்சில் ஈரமற்ற கடவுளுக்கும், ஒரு பாவமும் அறியாத சின்னஞ்சிறு பாலகனையும் பாபியென வாய்கூசாது கூறும் இவனுக்கும் என்ன வித்தியாசமிருக்கிறதென்பதை நீங்களே யோசித்துக் கூறுங்கள். இவற்றிலிருந்து அறிஞர் அறியவேண்டிய விஷயம் மூன்றேயாகும். (1) கடவுள் அறிவற்றவராதல் வேண்டும் அல்லது (2) மாந்தர் மதியிழந்தவராதல் வேண்டும். அல்லது (3) இந்தப் பாவக் கூற்று பொய்யாதல் வேண்டும். இம்மூன்றில் அறிவுலகம் எதனை வேண்டுமானாலும் தீர்மானித்துத் தெளிந்து கொள்ளட்டும்.

நிற்க, கஷ்டநிஷ்டூரங்கள்நிறைந்த இந்நிலவுலகின்கண் நிகழ்வன யாவும் நமது நன்மைக்கே யெனும் நம்பிக்கையுடைய எவனும், தன்னுடைய பழக்க வழக்கங்களைச் சமய சந்தர்ப்பங்களுக்கேற்ப மாற்றாமல், ஒரே மாதிரியாக எக்காலத்தும் மேற்கொண்டொழுக முடியவே முடியாது. அவ்வாறு செய்ய முற்படுவானாயின் அவன் தனக்கேற்படும் கஷ்ட நஷ்டங்கள் ஒவ்வொன்றிற்கும் மூலகாரணமாக ஒவ்வொரு பாபத்தைக் கற்பித்து அதற்காகக் கடவுளின் மன்னிப்பை எதிர் பார்த்துப் பார்த்து ஏமாந்து நிற்க வேண்டியதே.

---

## நாகை சுயமரியாதைச் சங்கம்.

20—11—32-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6-30 மணிக்கு சங்க வாராந்திரக்கூட்டம் சங்கத்தலைவர் ஆர். வி. கோபால் தலைமையில் கூடியது. தோழர். குஞ்சு, நாராயணசாமி ஆகியவர்கள் சுயமரியாதைகீதம் பாடினார்கள். தலைவர் முகவுரையாய் நமது கடமை என்பதைப்பற்றி பேசினார். பின்னர் முறையே தோழர். கோவிந்தராஜ்: ஐ. வி. முருகையா, எம். ஆர். பதி, எம். ரங்கசாமி, முதலியோர் பேசினார்கள். தலைவர் அடியில்கண்ட தீர்மானங்களை பிரேரபிக்க அவை ஏகமனதாய் நிறைவேறின. அவையாவன:—

சுயமரியாதை இயக்கத்தோழர்களான ஆர். கே. ஷண்முகம் மனைவியாரும், ஜா. பு. அ. சொக்கிரபாண்டியன் அவர்கள் தந்தையாரும் மரணமடைந்ததற்கு வருந்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டபின் கூட்டம் கலைந்தது.

---

## ஈரோடு

### போர்டு ஹைஸ்கூல் ஸ்டூடண்ட்ஸ் யூனியன் கால் பந்து விளையாட்டு.

ஈரோடு போர்டு உயர்தரப் பாடசாலை மாணவர்களின் சார்பில் 1932 ஞு டிசம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் உதைபந்து (Nines) பந்தய விளையாட்டு ஒன்று லண்டன் மிஷன் மைதானத்தில் நடைபெறும். இதற்கு நமது மாகாணம் முழுவதிலுமுள்ளவர்கள் விளையாடுவதில் பங்கெடுத்துக் கொள்ளலாம். டீம் ஒன்றுக்கு 4 ரூபாய் பிரவேசக்கட்டணம் அனுப்ப வேண்டும். 15—12—32 தேதிக்குள் பணமும் விண்ணப்பமும் அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா. இது சம்பந்தமாக விஷயம் தெரிந்து கொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

A. Venkatachalam,
Tournament Secretary,
Board High School,
Erode.


டாக்டர்

# சிங்காரம் அவர்களின்

## மஹா சந்தனாதித்தைலம்.

(ரிஜிஸ்டர்டு)

குளிர்ச்சியைக் கொடுப்பதில் உலகப்பிரசித்தி பெற்றது

கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்குஇத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தைலத்தால் குணமாகும் நோய்கள்.

| | |
|---|---|
| கண் எரிச்சல் | பீனிசம் |
| கண் சிவப்பு | தலை மயக்கம் |
| கண்ணில் நீர்வடிதல் | தலைப் பொடுகு |
| கண் அரிப்பு | சொரி சிரங்கு |
| கண் பார்வைக்குறைவு | தலைமயிர் உதிர்தல் |
| கண் கூச்சம் | நாள்பட்ட தலை நோய் |
| கண்ணில் பீளை சாருதல் | முதலிய பல வியாதிகளை ஆச்சரியமாய் குணம் செய்யும். சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக் கொடுக்கும். ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். பத்தியமில்லை. |
| மேக நீர், வெள்ளெழுத்து | |
| ஒருத்தலை நோய் | |
| கை கால் எரிச்சல் | |
| மூலச்சூடு | |
| அஸ்திகாங்கை | |
| வெட்டைச்சூட்டால் உண்டாகும் திரேகக் காந்தல் | 24 அவுன்ஸ் டின் ரூ. 4-0-0 |
| காது நோய், காது மந்தம் | 12 ,, ,, ரூ. 2-2-0 |
| மண்டை இடி | |

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

ர்மம் வழங்கக்கூடியவர்களாகிவிடுவீர்கள். ஆனால் நீங்கள் உண்மை சுயமரியாதை வீரர்களாகவேண்டும். மதத்திற்கு ஆளாவதோ, கடவுளுக்கு அடிமையாவதோ, தேசியத்திற்கும், அரசாங்கத்திற்கும், அடிமையாவதோ ஆனகாரியங்களில் எதில் கட்டுப்பட்டுவிட்டாலும் உங்கள் புரட்சி அடங்கிவிடும், வலுவற்றதாகிவிடும் பிறகு பழய கருப்பன்தான் ஆய்விடுவீர்கள்.

நான் ஏன் இப்படிச்சொல்லுகிறேன்? எனக்கு மதமும், கடவுளும் இருந்திருக்கவில்லையா? இந்த ஊர் கோவில்களைப்போய்ப்பாருங்கள், எங்கள் குடும்பப்பெயர் அங்கெல்லாம் இருக்கின்றதா இல்லையா? நாமம் பூசிக்கொண்டோ, சாம்பலடித்துக்கொண்டோ, இந்த ஊருக்கு வந்த "பாகவதர்" "அடியார்" என்பவர்களான சோம்பேரிகளுக்கெல்லாம் சத்திரம்போல் சாப்பாடுபோட்டுவந்ததை நீங்கள் அறியீர்களா? சர்க்காரோடு தோளோடு தோள் போட்டு அதிகாரிகளுடன் உரைந்தது நீங்கள் அறியீர்களா? தேசியத்தில் முன்னணியில் நின்று குடும்பத்துடன் அலைந்ததும் பலதடவை சிறை சென்றதும் நீங்கள் அறியீர்களா? நீங்கள் உள்ளூர்காரர்கள் ஆனதால், சகலமும் நேரில் பார்த்தவர்களானதால் இதை உங்களிடம் சொல்லுகிறேன். அயலூர்காரர்களுக்கு வேண்டுமானால் இது மயக்கத்தைக்கொடுக்கக்கூடியதாக இருக்கலாம். அப்படி இருக்க இப்போது ஏன் இவைகள் அவ்வளவும் புரட்டு என்றும், உங்களுக்கு பயன்படாதது என்றும், பணக்காரர்களுடையவும் சோம்பேரி வயிற்றுப்பிழைப்புக்காரர்களுடையவும் நன்மைக்குஏற்றஆயுதங்கள் என்றும் ஏன் சொல்லுகிறேன் எல்லாவற்றையும் நான் அநுபவித்து பார்த்துவிட்டேன். என்னுடைய 40, 50 வருஷ உலக அநுபவமும் இவைகளை சந்தேகமறவிளக்கிவிட்டது. ஆகவே நீங்கள் துணிவுகொண்ட புரட்சிக்கு தயாராகுங்கள். நீங்கள் ஏன் கீழ்ஜாதி? என்று உங்களையே கேள்வி கேளுங்கள். கடவுள்காரணம் என்றுதோன்றினால் உடனே அந்தக்கடவுளை தூள்தூளாக உடைத்தெரியுங்கள். மதக்கட்டளை என்று தோன்றினால் அம்மதத்தை சின்னாபின்னமாக்குங்கள் அல்லது அரசாட்சி முறை என்று கண்டால் அதை அழித்திடுங்கள். அல்லது மனிதர்களுடைய சூழ்ச்சி, சமயமைப்பித்து என்றுதோன்றினால் தைரியமாய் அவர்களிடம் இனிமேல் இந்தப் புரட்டு நடக்காது என்று சொல்லுங்கள் உங்கள் புரட்டுகளை உணர்ந்துவிட்டோம் நல்ல தனத்தில் யோக்கியமாய் நடக்கிறீர்களா அல்லது இதற்காக எங்கள் உயிரை இழக்கவேண்டியதுதானா என்று கேளுங்கள்.

இதில் ஒன்றும் தப்பிதமில்லை. ஏனெனில் பாடுபட்ட நீங்கள் பட்டினி கிடக்கவும், கீழ்ஜாதியாய் இருக்கவும், சோம்பேரியாய் இருந்தவர் செல்வவானாய் இருக்கவும், மேல்ஜாதியாய் இருக்கவும் ஏற்பட்ட முறைகள் எதுவானாலும்அதை ஒழிப்பது எவ்விதத்திலும் குற்றமாகாது. அவை புரட்டின் பேரிலும் சூழ்ச்சியின் பேரிலும், சுயநலத்தின் பேரிலுமே கட்டப்பட்ட கட்டடமாகும். உங்களுக்கு உண்மையான சுயமரியாதை உணர்ச்சி வந்துவிட்டால் அதுமணலால்கட்டியவீடுசரிந்துவிழுவதுபோல்அது தானேசரிந்து விழுந்துவிடும். ஆதலால் நீங்கள்உங்கள்பங்கை அடையாதன் போராதுப்பின்வாங்காதீர்கள். உங்களுக்கு எந்த கோவிலுக்குள் போய் எந்தக்கடவுளை வணங்க அநுமதிகிடைத்து விட்டாலும் இதனால் எல்லாம் இன்று நீங்கள் படும் அரை பட்டினி அவஸ்தையையும், அரைநிர்வாண அவஸ்த்தையையும், கல்வி இல்லாமல் தற்குறிகளாய், மடையர்களாய் ஆக்கிவைத்திருக்கும் பகுத்தறிவற்ற அவஸ்தையையும் ஒருகாலமும் நீங்கிவிடப்போவதில்லை அதற்கு ஏற்ற முயற்சிகளை செய்யவேண்டும். அதிலே வெற்றி பெறவேண்டும். அதற்காகத்தான் சுயமரியாதை உணர்ச்சி வேண்டுமென்கின்றோம் என்பதுவாகப் பேசி முடித்தார்.

## பட்டுக்கோட்டை பனகாலரசர் வாசகசாலை.

29-11-32ந் தேதி செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு பனகலரசர் வாசகசாலையில் வாராந்திரக்கூட்டம் தோழர் எஸ். அருணாஜலம் அவர்கள் தலைமையில் கூடியது. தலைவர் முகவுரையில் முன்னேற்றம் மென்பதுபற்றி விரிவாகப் பேசினார். பின் கே. எஸ். எஸ். கிருஷ்ணன், எம். வடிவேல், ஆர். ராசு, ஆர். ராமச்சந்திரன், ஆர். மாணிக்கம் முதலியவர்கள் முன்னேற்றம் யென்பது பற்றி பேசியபின் பி. எஸ். லிங்கம் அவர்கள் சங்கத்தில் மெம்பர்கள் பேசுவதற்கு வேண்டிய யேற்பாட்டை செய்ய வேண்டும் யென்று விரிவாகப் பேசி முடித்தார். இறுதியாக 10-30 மணிக்கு கூட்டம் முடிவுபெற்றது என காரியதரிசி எழுதுகிறார்.

## நவசக்தி.

சென்னை நவசக்தி பத்திரிக்கையின் ஆசிரியர் திரு. வி. கல்யாண சுந்திரம் அவர்களால் வெளியிடப்பட்டுவந்த நவசக்தி என்னும் வாரப்பத்திரிக்கையானது அரசாங்க அடக்கு முறை காரணமாக பல இன்னல்களுக்கு ஆளாகி சிறிதுகாலம் வெளிவராது இருந்தது. நேயர்களுக்கு தெரிந்திருக்கும்.

அது இப்போது வாரவெளியீடாக இல்லாமல் மாதவெளியீடாக ராயல் 1-க்கு எட்டு சயிசில் 50பக்கங்களுடன் நல்லகடிதத்தில் புத்தக ரூபமாய் வெளியிடப்பட்டு அதன் முதல் பிரதி புதாவது நவம்பர் மாதத்திய பிரதி வரப்பெற்றோம். அது பெரிதும் "சமய" நிர்மாணத்தையே முக்கிய குறிக்கோளாகக்கொண்டு நடக்கப் போவதாய் காணப்படுகின்றது.

வருட சந்தா ரூ. 3-8-0,
வெளி நாடு ரூ. 4-0-0.

விலாசம்:—

நவசக்தி,
கணபதி முதலி வீதி,
ராயப்பேட்டை, சென்னை.

## முனுசாமி பிள்ளை வருகை.

ராவ்பஹதூர் வி. ஐ. முனுசாமி பிள்ளை எம் எல். சி. அவர்கள் வாலாஜா தாலூகாவில் ஸ்தாபித்திருக்கும் தாழ்ந்தவகுப்பு சங்கத்தை பார்வையிடுவதற்காக. நாளது 10-12-32 அல்லது 11-12-32ல் விஜயம் செய்வதாக தபால் மூலமாக செய்தி தெரியவருகிறது என வாலாஜா தாலூகா ஆதிதிராவிட சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.


## தமிழ் நாட்டு பெற்றோர்களே!

முந்துங்கள்! முந்துங்கள்!!

## மெட்ரிக்குலேஷன்

### அறிவை

தங்கள் பிள்ளைகள் நேரில் படித்துப் பெற சந்தர்ப்பமில்லாவிடின் தொழில் செய்து கொண்டே தபால் மூலம் ஸ்பெஷல் மெட்ரிக்கோர்ஸ்களை வாசித்து முடிக்கலாம் இஸ்டப்படின் சர்க்கார் கே. சீனியர் பாஸாகி காலேஜில் சேரலாம். லோயர், ஹையர் கிரேட் உபாத்திமார்கள், S. S. L. C. தவறியவர்களுக்கு அதிக பிரயோஜனமானது. நமது மாணவர்களின் வெற்றி K. சீனிவாசகன் (ஹையர் கிரேட்) IV பாரம் படித்தவர்கடந்த கே. சீனியர் பாஸ் செய்து சக்கண்டரியாக மாற்றப்போகிறார் Dr. H S சுப்பாமணியம் 4 மாதங்களில் படித்து பாசாகி கடைசி 2 வருஷ M. B. B S. படிக்கிறார் மற்ற விபரத்திற்கு உடன் எழுதவும்.

டைரக்டர்,

அல்லைபன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
(தலைமை ஆபிஸ்) ஆறுமுகநேரி S. I. R.



## ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அரிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது. யாவரும் வாங்கி வாசிப்பதற்காக அடக்க விலைக்கு விற்க எற்பாடு செய்திருக்கிறது.

பிரதி 1-க்கு விலை அணா 0—6—0.
6 பிரதிகள் 2—0—0. 12 பிரதிகள் 3—12—0.
தபால் செலவு வேறு.

ஒரு பிரதி வேண்டுவோர் 0—7—6 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு புஸ்தகத்திற்குமேல் வேண்டுவோர் பாதி முன்பணமாக அனுப்பவேண்டும். மிச்சத்தை வி. பி. செய்யப்படும்.

நாஸ்திகன்

C. K. குப்புசாமி, சேலம் பட்டு ஜவுளி, பெரியகாஞ்சீபுரம்.

[6-ம் பக்கத்தொடர்ச்சி]

ளம், மலையாளம், ஆந்திரா முதலான இடங்களில் இருந்து பல ஆதரவுகள் வருகின்றன. இங்கிலாந்தில் லண்டன் நகரில் (Fleet Street]ல் இந்த சுயமரியாதை இயக்கத்திற்கு பலமான ஆதரவு இருக்கின்றது. அது போலவே அமரிக்கா முதலிய இடங்களிலும் இருக்கின்றது. அங்குஜனங்கள் வெகு ஆவலாய் அந்த பிரசாரங்களைக்கேட்டு பயன்படுகிறார்கள்.

துருக்கியைப்பாருங்கள் முஸ்தபா கமால் பாட்சா வைதீகக் குருமார்களின் ஆதிக்கத்தை அடக்கிவிட்டார். அதன் பயனாக அந்நாடு இப்பொழுது முன்னணியில் இருக்கின்றது. இட்டாலி தேசத்திலும் கிறிஸ்து சித்தாக (Pope) ஆதிக்கத்தை முசோலினி குறைத்துக் கொண்டு வருகிறார். சுயமரியாதைக் கொள்கைகள் அங்கேயும் பரவத்துடங்கி விட்டன. இப்படியே ஜர்மனியிலும், பிரான்சு, சைனா, ஜப்பானிலும் என்று உணருங்கள். ஸ்பெயின் (Spain) தேசத்தைப்பாருங்கள். ஏழைகளின் பணத்தைக்கொள்ளையடித்து உல்லாசமாயிருந்த பாதிரிமார்களும் அவர்களுக்கு இணங்கி இருந்த அரசனு (Alfenso)ம் தலையில் பேன் தெரிக்கும்படி நாட்டைவிட்டு ஓடிவிட்டார்கள். அங்குள்ள கோவில்கள் காற்றில் பறக்கின்றன. இன்னும் சொல்லவேண்டுமானால் சுயமரியாதை இயக்கம் எந்த நாட்டில் உன்னத நிலையில் உச்சஸ்தானத்தில் தலை நிமிர்ந்து இருக்கிறதென்றால் அது தான் (Russia) ரஷ்யா. நிற்க இயக்க கொள்கைகளை சிறிதுபாருங்கள்.

1. நீங்கள் எந்தக்காரியத்தை செய்தாலும் ஏதோ முன்னோர்கள் எழுதிவைத்துவிட்டார்கள் என்று குருட்டு நம்பிக்கையோடு இராமல் உங்கள் பகுத்தறிவைக்கொண்டு ஆழ்ந்துயோசித்து முடிவு கட்டுங்கள் என்று சொல்லுகிறது.

2. ஆணுக்குப் பெண் அடிமை என்ற காலம் மலையேறிவிட வேண்டும் என்று சொல்லுகின்றது.

3. பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பனை பண்ணாதே என்று சொல்லுகின்றது.

4. மனிதர்களில் தீண்டாமை என்னும் பேயை இந்த நாட்டை விட்டு விரட்டவேண்டும் என்று சொல்லுகின்றது.

5. கடவுள் பெயரைச்சொல்லி மதத்தின் பெயரைச்சொல்லி பிழைக்கும் பிழைப்பை அழிக்கவேண்டும் என்று சொல்லுகின்றது.

6. கடவுள் ஒருவர் இருந்தால் அவருக்கும் நமக்கும் மத்தியில் தரகர் (Broker) வேண்டாம் என்கின்றது.

7. முதலாளி ஏழை என்ற வித்தியாசம் வேண்டாம் என்கின்றது. அதாவது எல்லா மக்களும் ஏறக்குறைவு இல்லாமல் வேண்டிய அளவு உண்டு உடுத்து இருக்கவேண்டும் "Necessaries for all and Superfluity for None" இந்தக் கொள்கைகள் உங்கள் மனத்திற்கு ஏற்க வில்லையா என்று கேட்கின்றேன்.

கடவுள் உண்டா இல்லையா என்னும் கேள்வியை எடுத்துக்கொண்டு துன்பப்படும் ஜனங்களுக்கு நான் மிகவும் இரங்குகின்றேன். இந்த பிரயாசையும் முயற்சியும் மனித வாழ்க்கையை சீர்படுத்துவதில் உபயோகிக்கக்கூடாதா? சோம்பேரிகள் வேண்டுமானால் காலப்போக்குக்காக இந்த விஷயத்தை எடுத்துக்கொள்ளட்டும் பணக்காரக்கூட்டங்கள் இந்த விஷயத்தில் இரங்கட்டும் உண்ண சரியான உணவில்லாமலும் உடுக்க சரியான உடையில்லாமலும் சந்தோஷ வாழ்க்கை நடத்த முடியாமல் 100-க்கு 99-ஆய் இருக்கும் பாமர மக்களுக்கு இந்த கவலை வேண்டாம் என்றே சொல்லுவேன்.

தோழர்களே! கடவுள் இல்லை என்று யாராவது முடிவுகட்டிச் சொன்னால் அவர்கள் ஆராய்ச்சியற்றவர்கள் என்றே சொல்லுவேன் (கரகோஷம்) கடவுள் உண்டு என்று யாராவது சொல்ல துணிவாரேயானால் அவர்களை பகுத்தறிவு அற்றவர்கள் என்று கூறுவேன் (பெருத்த கரகோஷம்) "பார்க்க முடியாத" ஒன்றை "அறியமுடியாத ஒன்றை" "மனம், காயம், வாக்குக்கு எட்டாத" ஒன்றைப்பற்றி தனக்குதெரிந்ததாக கற்பனை பண்ணுகின்றவன் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் இடம் கொடுத்தவனாகமாட்டான் எனக்குதெரியாதுஎன்று சொல்லுபவன் இவனே உண்மையை உள்ளவாறு கூறுபவன் என்று உணருங்கள்.

அன்பார்ந்த தோழர்களே! அமெரிக்க தேசத்து பெரியாராகிய ஹிங்கர்சால் என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள்.

எந்த மனிதன் பகுத்தறிவைக் கொண்டு யோசிக்கின்றானோ அவனே மனிதன். எவனொருவன் பகுத்தறிவைக்கொண்டு யோசனை செய்யாதிருக்கின்றானோ அவன் மனிதவர்க்கத்தில் ஒருபடி கீழ். எவனொருவன் பகுத்தறிவைக்கொண்டு யோசிக்கமாட்டேனென்று மார்பு தட்டுகின்றானோ அவன் தனக்கே விரோதி. எவன் ஒருவன் எழுதிய ஏடுகளுக்கு தலைவணங்கி பகுத்தறிவைக்கொண்டு யோசிக்க பயப்படுகிறானோ அவன் சாக்கடைக்கு ஒப்பாவான். என்று கூறியிருக்கிறார்.

தோழர்களே! நீங்கள் உங்கள் தினசரி வாழ்க்கையை பகுத்தறிவைக்கொண்டு சரிவர செய்வதில்லை என்பதற்கு சிறிய உதாரணங்கள் கூறுகிறேன். ஒருவன் வீட்டைவிட்டு ஆபீசுக்கு போவதற்கு புறப்பட்டான் அப்பொழுது அவருடைய மனைவி "எங்கே போகிறீர்கள்" என்று கேட்டாள். அவனுக்கு வெளியில் கல் தடுக்கி காலில் சிறிது காயம் ஏற்பட்டு சிறிது தடை ஏற்பட்டது; தன் மனைவியார் எங்கே போகிறீர் என்று கேட்டதுதான் இத்தடங்கலுக்கு காரணம் என உள்ளங்குழைகின்றான். தான் ஜாக்கிரதையாக வழியை பார்த்து செல்லாததை மறந்துவிடுகிறான். பிரியமானவர்களே சிறிது ஜாக்கிரதையாய் இவர் ரஸ்தாவில் நடந்திருந்தால் இந்த காயம் ஏற்பட்டிருக்குமா? அஜாக்கிறதையின் நிமித்தமே இந்தக்காயம் ஏற்பட்டது. ஆனால் பகுத்தறிவில்லாதவன் சொல்வதென்னவெனில் "என் மனைவி நான் புறப்படும்போதே எங்கே போகிறாய் என்று கேட்டாள அதனாலேதான் தடுக்கி காயம் ஏற்பட்டது" என்று பிதற்ற ஆரம்பிக்கின்றான். சிறிது யோசித்துப்பாருங்கள் எங்கே போகிறாய் என்று கேட்பதற்கும் கால் தடுக்கி காயம் ஏற்பட்டதற்கும் சம்பந்தம் என்ன இருக்கின்றது? என்று உங்களை கேட்கின்றேன். இந்த மூடநம்பிக்கையைக் கொண்டு இன்னும் இந்த பகுத்தறிவு இல்லாதவன் என்ன செய்கின்றான் என்று பாருங்கள். கல் தடுக்கினதினால் அபசகுனமென எண்ணி உட்கார்ந்து சிறிது நேரங்கழித்து செல்கின்றான். ஆபீசுக்கு தாமதம் ஆகிவிடுகின்றது. இதே மாதிரி மூடநம்பிக்கையினால் ஜனங்கள் தும்பினாலும், பூனை குறுக்கே போனாலும் இன்னும் இம்மாதிரி பல சந்தர்ப்பங்கொண்டும் அபசகுனமென்று கொண்டிருக்கும் மூடநம்பிக்கையை ஒழியுங்கள் என்று தான் சொல்லுகிறேன்.

கோவிலை எடுத்துக்கொள்ளுங்கள் அங்கே வைத்திருக்கும் கல்சாமிகளுக்கு பட்டாடையும் பொன்வெள்ளி வைர நகைகளும் பால் பஞ்சாமிருத அபிஷேகங்களும் செய்வதினால் உங்கள் வாழ்க்கைக்கேதாவதுஒருசிறிதளவேனும் பயனுண்டா? என்று பாருங்கள். ஒரு வேளை சாப்பாட்டுக்கும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஏழை ஜனங்கள் கோடிக்கணக்காக இருக்கும்போது நல்ல உணவாகிய பாலும் தேனும் கல் சிலைகள் மேல் கொட்டி யாருக்கும் உதவாமல் அழிப்பது நியாயமாக இருக்கிறதா? இது உங்கள்பகுத்தறிவிற்குபொருத்தமாக இருக்கிறதா? என்று உங்களை கேட்கின்றேன். கடவுள் ஒருவர் இருந்தால் உங்கள் நோயை அவர் தீர்த்துவிடுவாரென்று உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் அதற்காக உங்களை கூலிக்கொடுக்கும்படி கேட்கின்றாரா? நீங்கள் உங்கள் அன்பினைஏழைஜனங்களுக்கு உபகாரம் பண்ணுவதில் கருத்தை செலுத்தினால் உங்கள் பேரில் பிரியப்படமாட்டாரா? என்று கேட்கின்றேன். தோழர்களே இன்னும்பாருங்கள் பாமர மக்கள் மழைக்கும் வெய்யலுக்கும் ஒண்டித்கு வதற்கு சரியான வீடு வசதி இல்லாமல் இருக்குங்காலத்தில் ஏராளமான திரவியத்தைக்கொண்டுபோய் கோட்டைபோல்எங்குபார்த்தாலும்ஊரைவளைத்துக்கொண்டு கோவில்கள் கட்டுவது உங்கள்பகுத்தறிவுக்கு ஏற்றதாயிருக்கிறதாஎன்று கேட்கின்றேன். ஆகையினால் தோழர்களே நீங்கள் செய்யும் எந்த காரியத்தையும் பகுத்தறிவு கொண்டு செய்யுங்கள் என்று சொல்கிறேன்.

தோழர்களே நமது நாட்டில் அதிலும் இந்து சமூகத்தில் பெண்களுக்கு சொத்துரிமை இல்லாமலும், விவாக உரிமை இல்லாமலும், விவாகரத்து உரிமை இல்லாமலும், கல்வி உரிமை இல்லாமலும் இருப்பதினால் நமது தேசமானது முற்போக்கு அடையாமல் இருக்கிறதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். இந்த விஷயங்களைப் பற்றி நான் உங்களுக்கு ஹிந்து சோஷியல் கிளப்பில் "பெண் உரிமையும் சுயமரியாதையும்" என்றும் விஷயத்தைப்பற்றி பேசும்பொழுது வெகு விரிவாய் எடுத்து உரைத்திருக்கின்றேன். ஆகையினால் உங்கள் வாழ்க்கையில் பெண்களுக்கு சம உரிமை கொடுத்து உதவினால் சமூக முன்னேற்றமும் தேசமுன்னேற்றமும் இங்கிலாந்து பிரான்சு, துருக்கி முதலியதேசங்களைப்போல் முன்னேறும் என்பது நிச்சயமென்று உங்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

தோழர்களே மூன்றாவதாக உங்களுக்கு நான் சொல்வது என்னவென்றால் பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பனை பண்ணுகிறீர்கள் என்பது தான் இம்மாதிரியான கற்பனை உலகில் எந்த தேசத்திலாவது உண்டா என்று உங்களை நான் கேட்கின்றேன். இம்மாதிரியான வித்தியாசங்கள் நம் நாட்டிடை குடியேறினவர்கள் புகுத்தி விட்டபடியால் நம்மிடையே சகோதரத்துவம் என்பது இல்லாமல் போய்விட்டது என்பதை உணர்ந்தீர்களா? இஸ்லாமியர்களைப் பாருங்கள், சீனர்களை பாருங்கள், ஜப்பானியர்களை பாருங்கள், மேல் நாட்டினரைப்பாருங்கள், இன்னும் சொல்லவேண்டுமானால் உங்களோடு கூடவாழும் பர்மியர்களை பாருங்கள். பிறப்பினால் உயர்வு தாழ்வு அவர்களிடத்திலிருக்கின்றதா? ஜாதி என்பது அவர்களிடத்தில் ஊடாடுகின்றதா? நான் ரயிலில் பிரயாணம் பண்ணிக் கொண்டிருக்கும்போது ஒரு சீன தேசத்தவர் உங்கள் இந்தியா தேசத்தில் உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்று இருக்கின்றதாமே, அதில் உங்களிடத்திலே ஒற்றுமை குறைந்துவிட்டதாமே அது வாஸ்தவம் தானா என்று என்னை கேட்டார். நான் வெட்கத்துடன் ஆம் என்று பதில் கூறவேண்டியதாயிற்று. அவரிடத்தில் நான் அறிந்துகொண்டது என்னவென்றால் சீன நாட்டில் ஜனங்கள் ஜாதிவித்தியாசத்தினால் சீர்கேடு அடையவில்லை என்றும் எல்லாரும் சீனதேசத்தாயின் ஒரே மாதிரியான மக்களென்றும் அவர்கள் நடவடிக்கையில் வித்தியாசம் பாராட்டுவதில்லை என்றும் அறிந்துகொண்டேன். இந்த வித்தியாசங்களெல்லாம் நமது தாய் நாடாகிய இந்தியா

வில், அதிலும் நமது இந்து சமூகத்தில் ஒரு சாரார் கஷ்டப்படாமல் உண்டு உடுத்து எல்லாவைபோகங்களும் அனுபவிப்பதாக கற்பனை பண்ணினது என்பதை உணர்ந்து இனி மேலாகிலும் பகுத்தறிவு உங்களிடை உதயமாகி இந்த அர்த்தமில்லாத அநாகரீகமான வித்தியாசங்களை அடியோடு ஒழியுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தோழர்களே! நான்காவதாக சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய கொள்கை என்னவென்றால் தீண்டாமை, ஜாதிப்பிரிவு என்னும் பேயை நாட்டை விட்டு அறவே ஒழிக்கவேண்டுமென்பதுதான். தற்சமயம் தீண்டாமை விலக்கு என்னும் விஷயமானது நாட்டில் எங்கே பார்த்தாலும் ஒரே கூச்சலாக இருப்பது உங்களுக்கு தெரியமென்று நினைக்கிறேன். இந்தப் பிரச்சினையை சுயமரியாதை இபக்கங்கண்டாராகிய தோழர். ராமசாமி ஏழாண்டுகளுக்கு முன் தீவிரமாய் பிரசாரம் செய்த காலத்தில் அகங்காரங்கொண்ட ஜாதி இந்துக்கள் அறியாமையால் வேறுபட்ட அபிப்பிராயத்தை தெரிவித்து எதிர்க்க ஆரம்பித்தார்கள். இப்பொழுது உலகப்பெரியாராகிய தோழர் காந்தி அந்தப்பிரச்சினையை தீவிரத்தில் கொண்டுவந்த உடன் ஜனங்கள் அப்பெரியாரைப்போற்றி அவருடன் ஒத்துழைப்பதுமல்லாமல் ராமசாமி செய்துவந்த தொண்டை இப்பொழுது பிரியத்துடன் வரவேற்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். தோழர காந்தி கோவில்களை தீண்டாதாருக்கு திறந்துவிடுவதல்லாமல் தீண்டாமை என்பதை வேரோடு களையவேண்டுமென்று சொல்லி ஜாதி இந்துக்கள்இதற்குவிரோதமாய் இருந்தால் நான் மறுமுறை அதற்காகவேண்டி உண்ணுவிரதமிருந்து உயிர் நீக்க தயார் என்றும் எறவாடா ஜெயிலிலிருந்து தனது இரண்டாவது அறிக்கையில் அறிவித்து இருக்கின்றார்.

தோழர்களே! இந்த விஷயத்திலும் கூட உங்கள் பகுத்தறிவை சரியானபடி உபயோகித்து தீண்டாமை என்னும் பேயை பகுத்தறிவு என்னும் வாளால்வெட்டி உலக பெரியாராகிய தோழர் காந்தி உயிரையும்காப்பாற்றி தோழர் ராமசாமியின் கொள்கைகளை நிலை நாட்டுவீரென்று நான் நம்புகின்றேன்.

தோழர்களே! ஐந்தாவதாக சுயமரியாதை கொள்கைகளில் முக்கியமான சாலச்சிறந்ததுமான கொள்கை என்னவென்றால் கடவுள் பேரைச்சொல்லி, மதத்தின் பேரைச்சொல்லி, சாஸ்திர புராணங்களின் பேரைச்சொல்லி ஏழைகளாகிய பாமர மக்களை வஞ்சித்து பிழைக்காதே என்றுதான் ராமலிங்க ஸ்வாமிகள் தன்னுடைய அரிய அருள்பாவில் மதம் வேண்டாம், ஜாதிவேண்டாம் சமயம் வேண்டாம், புராண குப்பைகளும் வேண்டாம் என்று அருளி இருப்பதை நீங்கள் படித்திருப்பீர்கள் என்றே நான் நினைக்கின்றேன். அப்பெரியாரை நீங்கள் போற்றுவதாயிருந்தால் அந்தப்படி நீங்கள் ஏன் நடக்கக்கூடாது என்று கேட்கின்றேன். மதமென்பது மனித வாழ்க்கையின் நலத்திற்காக மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சில கட்டுப்பாடுகள் என்று சொல்லுகிறார்கள். இம்மாதிரியான மதத்தில் சுயமரியாதைக்காரர்களாகிய எங்களுக்கு ஒரு ஆட்சேபணையும் கிடையாது. ஏனென்றால் இந்த கட்டுப்பாடுகள் காலதேச வர்த்தமானத்திற்கு தகுந்தபடி அழிக்கவோ, அல்லது திருத்தி அமைத்துக்கொள்ளவோ முடியும். ஆனால் மதமானது கடவுளால் ஏற்பட்டது, தெய்வத்தன்மை பொருந்தியது, அதைஅழிக்கவோ, திருத்தி மாற்றிக்கொள்ளவோ மனிதவர்க்கத்தால் இயலாது என்று சொல்லும்பொழுதுதான் பகுத்தறிவுக்கு முரண்பட்டதாக இருக்கிறது என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆனதுபற்றியே இம்மாதிரியான மதம், இம்மாதிரியான சாஸ்திரம், மனித வாழ்க்கையை புனிதப்படுத்தாது ஆகையால் மதம் வேண்டாம், சாஸ்திரம் வேண்டாம் என்று ராமலிங்க சாமிகளென்ன, சித்தர்களென்ன, இன்னும் தியாசாபிகல் சொசைடி பெரியாராகிய தோழர் கிருஷ்ண மூர்த்தி என்ன, சுயமரியாதைக்காரரென்ன எல்லோரும்கர்ஜிக்கிறார்கள். ஆகையினால் பழயஎட்டைவைத்துக்கொண்டு ஜனங்களுக்குபயத்தைஉண்டுபண்ணி காணிக்கை முதலானவைகளை வாங்கி ஏழைகளை ஹிம்சிக்கவேண்டாமென்று தான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தோழர்களே! கடவுள் ஒருவரோ பலரோ இருக்குமாயின் அவருக்கும் மனிதனுக்கும் மத்தியில் தரகர் வேண்டாமென்று உங்களுக்கு கூறுகின்றேன். இந்த தரகர்கள் என்ன செய்கின்றார்கள் என்றால்மனிதர்களுடைய மனதில் கடவுளைப்பற்றிய ஒருவித பயத்தை உண்டாக்கி அவர்கள் மூலமாகத்தான் பாபவிமோசனமடையலாமென்றும் கடவுளோடு சாயுச்ய பதவியை அடைந்துவிடலாமென்றும், சொல்லி பாமர மக்களிடமிருந்து அன்னபானாதிகளாகிய சகல சாதனங்களையும் வெள்ளி பொன் போன்ற பொருள்களையும் கடவுளுக்கு காணிக்கைகளென்று சொல்லி பாமர மக்களை ஏமாற்றி வயிறுவளர்க்கின்றனர். அன்பே சிவம், சிவமே அன்பு என்றபடி கடவுள் ஒருவர் இருந்தால் அவர் பக்தகோடி ஜனங்களை அன்பேதான் கேட்கின்றார் சாஸ்திரங்களும், புராணங்களும் புலம்புகின்றன. என்று உங்களில் பலர் சொல்லுகிறார்கள். அப்படிருக்க நீங்கள் புரோகிதத்திலும், பூசையிலும், வணக்கத்திலும், காணிக்கைகளிலும் நம்பிக்கை வைத்து வீண் காலத்தைச் செலவு செய்வதுமல்லாமல் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை ஏன் விரயம் பண்ணுகிறீர்கள் என்று தான் கேட்கின்கிறேன். மேலும் பாருங்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் மோக்ஷலோகமடையலாமென்றும் பாபவிமோசனமாகுமென்றும், நினைத்தக்காரியம்கைகூடுமென்று, நினைத்து வாரி இறைத்த பணங்களெல்லாம் எங்கே இருக்கின்றன வென்று பாருங்கள். புரோகிதர்கள் அவர்கள் பெண்டு பிள்ளைகள் அவர்களது வைப்பாட்டிகள் தின்று உடுத்ததுபோக, மானியம் மானியமாய் அவர்களுக்கு வம்ச பரம்பரையாய் தின்று கொழுப்பதற்கு எழுதி வைத்த நிலங்கள்போக கற்சாமிகளுக்கு பட்டாடையும், தங்கவைர நகைகள் செய்தது போக, வருஷா வருஷம் கடவுளுக்கு புதிது புதிதாக கல்யாண உற்சவம் செய்தது போக, பல காலிகளை திருடர்கள் அருத்துக்கொண்டு போனதுபோக இன்னும் பெட்டி பெட்டிகளாய் வெள்ளி, பொன் காசுகளும், தங்க வைர நகைகளும், ஹிந்து கோவில்களில் உபயோகமில்லாமல் துருப்பிடித்து குவிந்து கிடக்கின்றன என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா இல்லையா? என்று நான் கேட்கின்றேன். பத்திரிகைகளில் படித்தால் திருவனந்தபுரம் பத்பநாப ஸ்வாமி கோவிலில் இம்மாதிரி பூட்டிக்கிடக்கும் சில பெட்டிகளை திறந்து பார்த்ததில் 6 கோடி ரூபாய்கள் மதிப்புள்ள நகைகள் இருந்தனவாம். இன்னும் அதைப்போலே எத்தனையோ பெட்டிகள் திறக்காமல் இருக்கின்றனவாம். இம்மாதிரி ஒவ்வொரு கோவிலிலும், ஊரிலுள்ள திரவியங்களையெல்லாம் அடைத்து போட்டுக்கொண்டு இந்தியா ஏழை நாடு, ஆகையினால் தான் ஏழைகள் வேலையில்லாமல் தவிக்கின்றார்கள் என்று பொய் அழுகை, முட்டாள் அழுகை அழுது கொண்டு இருப்பதில் பயன் என்ன என்று தான் உங்களைக் கேட்கின்றேன். இம்மாதிரியான துருப்பிடித்திருக்கும்படியான பணங்களை எடுத்து ஏழைகள் விடுதிகள் கட்டவும், ஏழைகளுக்காக வைத்தியசாலைகள் கட்டவும், பாடசாலைகள் ஏற்படுத்தவும், சுகாதாரச்சாலை கட்டவும், தொழில் சாலைகள் ஏற்படுத்தவும் உபயோகப்படுத்தினால் பத்துலக்ஷக்கணக்கான ஏழைகளின் வறுமைநீங்கி,நாட்டின்செல்வமும், அதிகரிக்காதா என்று யோசித்துக்கூறுங்கள். இப்படி நாங்கள் சொன்னால் எங்களை உடனே சுயநலமிகள் — சுயமரியாதைக்காரர்கள், நாஸ்திகர்கள், கடவுள் வேண்டாம் என்கிறார்கள், கோவில் வேண்டாமென்கிறார்கள், உற்சவம் வேண்டாமென்கிறார்கள் என்று பாமரமக்களுக்கு கூறி சுயமரியாதைக்காரர்மீது கோபம் உண்டாகும்படி செய்து விடுகிறார்கள். இதற்கெல்லாம் பகுத்தறிவுள்ள நீங்கள் விஷயத்தை அலசிப்பார்த்து யார் சொல்வது உசிதம் என்று ஆலோசித்து காரியங்களை செய்யுங்கள்.

தோழர்களே! கடைசியாகான்உங்களுக்கு எடுத்துச்சொல்லப்போகும் விஷயமானது மிகவும் முக்கியமானதாகக் கருதுகின்றேன். ஏழைகள் உண்ண உணவில்லாமலும், உடுக்க உடையில்லாமலும் இருக்க சரியான இடவசதி இல்லாமலும் கேவலமான வெட்ககரமான நிலையை அடைந்திருக்கும்நாடு நமது இந்தியா. சொல்லவேண்டுமானால் ஒரு மனிதனுடைய தினசரி வரவை சராசரி எடுத்துப்பார்த்ததில் அமரிக்க தேசத்தினருக்கு ரூபா 3-1-0 இங்கிலாந்து தேசத்தினர்க்கு 2-3-0 ரூபாயும் இந்திய தேசத்தினருக்கு 0-2-6 அணுவுமாக கணக்கிடப்பட்டிருக்கின்றது. இன்னும் உங்களுக்கு விபரமாய் எடுத்துக் கூறவேண்டுமானால் வறுமை என்பது பசி என்பது, மற்ற நாடுகளில் இந்த நாட்டிலிருப்பதுபோல் காணமுடியாதென்றே சொல்லலாம். சம்பள விகிதம் பார்ப்போமானால் உயர்ந்த சம்பளக்காரருக்கும், தாழ்ந்த சம்பளக்காரருக்கும் உள்ள வித்தியாசம் ரஷியாவில் மூன்றுக்கு ஒன்றாகவும், போலண்டில் பத்துக்கு ஒன்றாகவும், இங்கிலாந்தில் முப்பதுக்கு ஒன்றாகவும், நமது இந்தியாதேசத்தில் இரண்டாயிரத்திற்கு ஒன்றாகவும் இருப்பதை கவனியுங்கள். அதாவது தெளிவாய்ச் சொல்லுமிடத்து ரஷியாவிலிருக்கும் பெரிய சம்பளக்காரன் முன்னூர் ரூபிலாக இருக்க, கடைப்பிடியான சம்பளக்காரன் நூரு ரூபுல் பெருகிறான். அதே மாதிரியாக போலந்தில் அதிக சம்பளக்காரன் ஐநூறு மார்க் வாங்கினால் தாழ்ந்த சம்பளக்காரன்ஐம்பதுமார்க் வாங்குகின்றான். அதேமாதிரியாக இங்கிலாந்தில் முதல் மந்திரி மூவாயிர ரூபாய் வாங்கினால் தாழ்ந்த சம்பளக்காரன் நூரு ரூபாய்க்குக் குறைவில்லாமல் வாங்குகின்றான். ஆனால் நமது இந்தியாவில் அதிக சம்பளக்காரர் ஆயிரரூபாய் வாங்கினால் தாழ்ந்த சம்பளக்காரன் ரூபா பத்து தான் வாங்குகின்றான். சம்பளத்தில் உயர்வு தாழ்வு அவரவர்கள் சாமர்த்தியத்திற்கும், புத்திக்கும், வேலைத்திறமைக்கும் இருக்கவேண்டியது அவசியமானாலும், இவ்வளவு ஏற்றத்தாழ்வு இருக்க வேண்டியதில்லை என்றே அறிவுள்ள ஒவ்வொருவனும் கருதுவான். நான் சொல்வது என்னவென்றால் வித்தியாசம் வைத்துக் கொண்டாலுங்கூட வறுமை என்பது தெரியாத வண்ணமாய் கீழ் உத்தியோகத்திலிருக்கும் தாழ்ந்த சம்பளக்காரரும் இருத்தல் வேண்டும். மேலும் குடிபடைகள் அல்லும் பகலும் பெண்டு பிள்ளைகளுடன் நிலத்தை உழுதுப்பயிரிட்டு, அதில்வரும்போகத்தை ஜீவனோபாயம் சரியானபடி செய்வதற்கு முடியாமல் இருக்கும் நிலைமையை நினைக்க நினைக்க யார் மனம்தான் துடிக்காது! கஷ்டப்படுவது ஏழைகள், அவர்கள் உழைப்பி

னால் வரும் லாபத்தை எடுத்து வைத்துக்கொண்டு முதலாளிக்கூட்டங்கள் வேண்டிய அளவு சரச உல்லாசமாய் வைபோகங்களை அளவுக்கு மிஞ்சி அனுபவித்துக்கொண்டிருப்பதை யார்தான் பார்த்துக்கொண்டிருப்பார்கள். முதலாளிக்கூட்டங்களில் ஏழைகளுக்கு, வேலை செய்பவருக்கு உழைத்து பெரும் செல்வத்தை தருபவருக்கு தக்க ஊதியங்கொடுத்து அவர்களையும் மனிதப்பிறவிகளென்று நினைப்பார்களே யானால், சமூகவாழ்வில் சச்சரவுகள் ஏற்படாது என்பது திண்ணம். ஆனால் தற்சமயம் இருக்கும் முதலாளிக்கூட்டங்கள் அம்மாதிரி நடந்துகொள்ளாததினால் முதலாளி ஆதிக்கத்தை அடக்கவேண்டியே ஊர்களிலே எல்லாம் ஜனங்களும் துணிந்துவிட்டார்கள் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். ஆகையால் இவ்விஷயத்தில் தக்கதோர் முறையை அதி சீக்கிரத்தில் கையாள வேண்டுமென்று பணக்காரர்களாகிய முதலாளிக்கூட்ட வர்க்கத்தாரை கேட்டுக்கொள்ளுகின்றேன். தோழர்களே!

நான் சிறிது அதிக நேரம் பேசிவிட்டாலுங்கூட நீங்கள் அனைவரும் பொருமையுடன் செவி மடுத்ததற்கு எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நான் பர்மாதேசத்தில் எட்டு பிரசங்கங்கள் செய்தாலுங்கூட இன்று இந்த கட்டிடத்தில் குழுமி இருப்பது போல் திரளான ஜனங்களை நான் அவ்விடங்களில் பார்க்கவில்லை. ஆண்களை விட பெண்கள் அதிகமாய் வந்திருப்பதானது பொத்த தேசத்தில் குடியேறிய இந்திய மக்களும் தங்களுடைய மனைவிகளுக்கும் சகோதரிகளுக்கும் சம உரிமை அளிப்பதில் பின் வாங்குபவர்கள் அல்ல என்று நிரூபித்துக் காட்டியதை நான் மிகவும் போற்றுகின்றேன். நமது தலைவர் மாணிக்கம் செட்டியார் தமது இரு பெண்களுக்கும் சுயமரியாதைத் திருமணம் செய்வித்திருப்பதைக் கேட்க என் மனம் பூரித்தது. அவருக்கு உதவியாக இருந்த தோழர் வக்கீல் சோமசுந்தரம் பிள்ளையை மிகவும் வாழ்த்துகின்றேன். இம்மாதிரியான சுயமரியாதை வீரசிங்கங்கள் இந்த நாட்டிலிருக்குங் காலத்து சுயமரியாதைக் கொள்கைகளை அதிசீக்கிரத்தில் பரப்பி விடலாம் என்றே எதிர்பார்க்கின்றேன். அகில பர்மா மாணவர்களுக்கும், சாரதா நிவேச சபையாருக்கும், என்னை கௌரவித்து வெள்ளிப் பேழையை அளித்த பெண்ரத்தினங்களுக்கும், இங்கு குழுமி இருக்கும் தோழர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைக் கூறி என் உபந்யாசத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விலக்கு பிரசாரம் பண்ண ஆரம்பித்ததால் நமக்கு ஒரு பெரிய நன்மை உடனே கிடைத்தது. அது தான் "பறப்பசங்களின் தனித்தொகுதி ஒழிந்த விஷயம்" காந்தியும் நாங்களும், அவ்வளவு தூரம் தீண்டாமையை ஒழிப்பதாக வேஷம் காட்டி இருக்கா விட்டால் தனித்தொகுதியை ஒழித்திருக்க முடியுமா? நீங்கள் எங்களை நம்பாவிட்டாலும் மாளவியாஜியை நம்புங்கள். அவர் ஏமாந்தவர் என்று கருதுகிறீர்களா அல்லாமலும் இனிமேல் வரப்போகும் அரசியல் சீர்திருத்தங்களில், நாம் வழக்கம் போல் அதிகாரப் பதவியைப் பெற்றாக வேண்டும். நாம் அதிகாரப்பதவிக்குப் போகாமலிருந்து விட்டால், நமக்கு ஆபத்து வருவது நிச்சயம்; சுயமரியாதைக் காரர்களும், அவர்கள் வார்த்தையைக் கேட்கிறவர்களும், அதிகாரத்திற்குப் போகவிடக் கூடாது. அதற்காகத்தான் ஜஸ்டிஸ் கக்ஷியை அழித்தோம், பிறகு சுப்பராயனை மந்திரியாக்கினோம். அவன் சு. ம. உடன் சேர்ந்ததும் அவனை அழித்து ஜஸ்டிசை மந்திரியாக்கினோம். இப்போது அது சு. ம. உடன் சேருகிறது. இனி அதை அழித்து வேறு மந்திரி ஆக்குவோம். இதற்கு பாமர மக்களை ஏய்க்கக் கருதியே உபயோகித்துக் கொள்ள வேண்டும். காந்தி வார்த்தையில் எப்போதும் இரண்டு அருத்தமுண்டு ஆகலால் பயப்படாதீர்கள். நாமும் தீண்டாதாருக்கு மிகவும் பரிந்து பேசுகிறவர்கள் போல நடிக்க வேண்டும். தேசத்திற்கு நன்மை செய்கின்றவர்கள் போலப் பாவனைகள் பண்ண வேண்டும். இல்லா விட்டால் நாம் பாமர மக்களிடம் ஓட்டுப் பெறமுடியாது. சு-ம காரர்கள் பக்கம் ஜனங்கள் திரும்பிவிட்டார்கள். ஆதலால்எலக்ஷனில் இனி எப்படி இருந்தாலும் வெற்றி பெற முடியாது. நீங்களும், காந்தியைப்பற்றி மதத் துரோகியென்றும், தேசத்துரோகி யென்றும் வெளிப்படையாகவும் அந்தரங்கமாகவும் பிரசாரம் பண்ணிக் கொண்டிருங்கள்; நாங்கள் வெளிப்படையாக காந்தியின் கொள்கையை ஆதரிப்பவர்கள் போல் பிரசாரம் பண்ணுகிறோம்; ஆனால், அந்தரங்கமாக அவர் கொள்கைக்கு மாறாக ஆசாமிகளைக் கிளப்பிவிட்டுக் கொண்டிருக்கிறோம். கடைசியில் காந்தியைக் கவிழ்த்து விடலாம்" என்று பேசினார்கள்.

இப்பேச்சைக் கேட்டவுடன், வைதீகர்கள் அனைவரும் உண்மை தெரிந்துகொண்டனர் ராஜியப்பார்ப்பனர்களின் செய்கைகளைச் சரியென்று ஆதரித்தனர். கூட்டமும் முடிந்துவிட்டது. உடனே நானும் ஒருவருக்கும் தெரியாமல் திண்ணையை விட்டு இறங்கி வந்து விட்டேன்.

இம்மாதிரியான பேச்சுகளைக் கும்பகோணத்தில் மாத்திரம் கேட்கவில்லை ஸ்ரீரங்கத்தில் கேட்டேன்; மயிலாப்பூரில் கேட்டேன்; மதுரையில் கேட்டேன்; இன்னும் என்ன வேண்டும்? ஆகவே இப்பொழுது பார்ப்பனர் அனைவரும், காந்தியைக் கவிழ்க்க யோசனை செய்து விட்டார்கள் என்பது உண்மையாயிற்று. மூலைமுடுக்குகளில் எல்லாம் காந்தியை ஒழிக்கும் சதியாலோசனைதான் செய்யப்படுகிறது; அவரை "மகாத்மா" என்றும் "அவதார புருஷர்" என்றும் சொல்லிக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் இப்பொழுது மாறிவிட்டார்கள். துரோகி என்கிறார்கள். பாபி என்கிறார்கள்.

இத்தனைக்கும் தோழர் காந்தியார், மதத்திற்கு ஒன்றும் துரோகம் செய்யவில்லை; அவர் செய்யும் காரியம் இந்து மதத்தைக் காப்பாற்றுவதற்கே யாகும். தீண்டாதார்களுக்குக் கோவில் பிரவேசம் போன்ற போலிச் சமத்துவத்தைப் பாவது அளிக்காவிட்டால், கட்டாயம் அவர்கள் அன்னிய மதங்களைச் சார்ந்து விடுவார்கள்; அதனால் இந்து மதத்தின் உரிமை குறைந்து விடும். இக்குறையை ஒழிப்பதே தோழர் காந்தியின் நோக்கமாகும்.

ஆனால், பார்ப்பனர்கள், மதத்தைக் கூட, மத வளர்ச்சியைக் கூட லட்சியம் பண்ணாமல் காந்தியை எதிர்க்கிறார்கள்; தீண்டாமை ஒழிந்தால் தங்கள் சுயநலம் போய்விடும் என்று கருதுகிறார்கள். ஆகையால் எல்லாப் பார்ப்பனர்களும் இன்னும் கொஞ்சநாட்களில் காந்தியைக் கவிழ்த்து விடுவது நிச்சயம் என்றே நாம் கூறுகிறோம். நாம் கூறுவதை மனத்தில் வைத்திருக்கிறீர்கள்; இன்னும் கொஞ்சம் பொறுத்திருந்து பாருங்கள். இதனால், தோழர் காந்தி வெளியில் பிரபலமாக விளங்கினால் அக்கிரகாரத்தில் அவ்வளவு அந்தரமாகவே இருக்கிறதென்பதை அறிந்து கொள்ளுங்கள், அய்யோ, பரிதாபம்! ஏழைகாந்தி!

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாக செலவு, அதற்கு போட்ட முதல், கடன் வாங்கப்பட்டதாயிருந்தால் அதன் வட்டி, இடவிஸ்தீரணம், சௌகரியம் முதலியவைகளைப் பொருத்ததேயாகும்.

கூட்டுறவு சங்கங்களாலும் சோவியத் ஆக்ஷி நிர்வாகத்தாலும் அதன் சலுகையால் மற்றவர்களாலும் கட்டப்பட்ட எல்லா புது கட்டடங்களிலும் 100க்கு 15ம் நிர்ந்து குறையாத அளவு தொழிலாளிகளின் வசதிக்கு ஆகவே பிரத்தியேகமாய் ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென்பது கட்டட நிர்வாக ஸ்தாபனத்தின் முக்கியமான விதிபாகும்.

தொழில் சாலைகளில் வேலை செய்பவர்களுக்காக கட்டப்படும் கட்டடங்களை அதன் திட்டப்படியும் குறிப்பிட்ட சௌகரியங்களின் படியும் உருதியாயும் அழகாயும் சீக்கிரத்தில் முடித்துக் கொடுப்பவர்களுக்கு சில தனி வெகுமதி அளிப்பது என்கின்ற ஒரு முறை வைத்திருப்பதானது மிகவும் ருசிகரமானதாகும்.

கட்டட கூட்டுறவுசங்கங்கள் புதிய வீடுகள் கட்டுவதோடு மாத்திரம் நின்றுவிடுவதில்லை. இவை சோவியத் ஆக்ஷியால் கட்டடத்திற்கென ஒதுக்கி வைக்கப்பட்ட பணத்தின் உதவியைக் கொண்டு பழயகட்டடங்களை 12 வருஷ வாய்தாவுக்கு குத்தகைக்கு எடுத்துக் கொண்டு வேலை செய்துபயனடைகின்றன. இதற்கு என்று ஒரு பிரிவு கட்டட கூட்டுறவு ஸ்தாபனத்தில் இருக்கிறது.

இந்த கட்டட கூட்டுறவு ஸ்தாபனம் சோவியத் நகர நிர்வாக ஆக்ஷியின் கட்டட பண்டுகளை தணிக்கை செய்வதில் ஆதிக்கம் செலுத்தியும் வருகிறது. மொத்த கட்டட பண்டில் 100க்கு 70முதல் 90வரை இந்த கூட்டுறவு சபைகளே செலவு செய்து கட்டடங்களை பெருக்கி வந்திருக்கின்றன.

---

**ANANGARANGABATIKA.**
*(Enjoyment Pill)*
DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY
and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.
Complete satisfaction guarenteed. Money refunded in case of failure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.
**"SAILASRAM" (K)**
*Chandanpur,*
**(Khulna) E. B. R.**

---

**ஈ. வெ. ராமசாமியின்**
**இலங்கை**
**சொற்பொழிவு**

24. பக்கம் கொண்டது. விலை- 0-0-6 100-புத்தகம் ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ-அனுப்பினால் 100-புத்தகம் தபால் செலவில்லாமல் அனுப்பப்படும்.

மானேஜர்
"குடி அரசு" ஈரோடு.

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

வித ஞாயமான முகாந்தரமும் [Evidence] ஏற்படவில்லை, ஆதலால்யோக்கிய பொறுப்பின்படிதான் அச்சொற்களுக்குறிய பகிர்முகப்பொருள்கள் [Objects] இருப்பதாக நம்ப முடியவில்லை" என்கின்றான். இதனால் அவன் கெட்டவனாய் விடுவானோ என்று நீங்களே யோசியுங்கள்? கடவுள் இருப்புக்கு போதுமான அதாவது திருப்திகரமான (Satisfatcory) சாட்சியம் இல்லையென்றால் என்ன தப்பு? சாட்சியம் (Proof) இல்லையாதலால் கடவுள் இல்லை என்றே நான் எண்ணவேண்டி வருகிறது என்றால் என்ன இழிவு? போதுமான ஆதாரமில்லாமல் கடவுள் இருப்பதாக நான் நம்பமாட்டேன். திருப்திகரமாக கடவுள் இருப்பை ருசுப்படுத்தும்வரை நான் கடவுள் இருப்பதாக நம்பமாட்டேன் என்றால் என்ன தவறு? மனிதன் பேச ஆரம்பித்தது முதல் "கடவுள்" உண்டு என்பதற்கு ஒரு தகுந்த அடையாளம் ஓ! ஞானிகளே! மதஸ்தர்களே! தீர்க்கதரிசிகளே! கொடுங்கள் என்று கேட்டுவந்தும், கொடுக்க முடியாத நீங்களா யோக்கியர்கள்? அல்லது கடவுள் இருப்புக்கு யாதொருஅடையாளமும் கொடுக்க முடியவில்லை என்ற நாஸ்திகனா யோக்கியன் கோடான கோடி மனிதர் உண்ணஉணவு இல்லாமல் வதைய, யாரும்பாராத, கடவுளுக்கு கோடிக்கணக்கான திரவியத்தை செலவு செய்கின்றீர்களே நீங்கள் யோக்கியர்களா? அல்லது "கடவுள்" நமக்கு தோன்றக்காணோம். தோன்றாத பொருளுக்கு ஏன் வியர்த்தமாக கோயிலும், கட்டடங்களும் கட்டவேண்டுமென்னும் நாஸ்திகன் யோக்கியனா? பசியையும், பிணியையும், செய்யானையும், பூரானையும், தேளையும், பாம்பையும், கரடி புலியையும், பஞ்சத்தையும், புயலையும், வெள்ளத்தையும், பூகம்பத்தையும், இடியையும், மின்னலையும் உண்டாக்கிய கடவுளென்ற வஸ்துவுக்கு பொங்கலிட்டு, பலியிட்டு தொடுத்து வர்ணிக்கின்ற நீங்கள் யோக்கியர்களா? அல்லது இத்யாதி கொடிய காரியங்களைச் செய்து வரும் கடவுளை நான் பார்ப்பேனாகில் பினல் கோட் சட்டப்படி அத்தகைய பொருளை தூக்கிவிடுவேன் என்று கூறும் நாஸ்திகவாதி சமயவாதிகளில் யார் யோக்கியதைக்கு அருகன் என்று அறிஞர்களே அறியட்டும்?

நாஸ்திக ஆஸ்திக வாதத்தில், எது நமது அனுபவத்திற்குப் பொருந்தி உளதெனப்பார்ப்போம். ஆஸ்திகம் என்றால் "கடவுள்" உண்டு எனல். நாஸ்திகம், அதனை மறுத்தல். அதாவது கடவுள் இல்லை எனல். இவ்விரண்டு வாதங்களும், புராதனவர் தங்களெனக் குறிததுள்ளோம். இவ்விரண்டு வாதிகளும் காலா காலங்களாக கடவுள் உண்டா, இல்லையா வென வாதமிட்டு வருகின்றனர். கடந்த 5000 வருஷங்களாக, வேத கால முதல் இவ்வாதம் நமது இந்திய நாட்டில் நிகழ்ந்தே வருகின்றது. மேல் நாட்டிலும் இவ்வாதம் உற்சாகத்துடன் நடந்தே வருகின்றது. ஆனால் நாஸ்திகம் மேல் நாட்டில் பலவித காரணங்களால், அதிக விரைவாக பரவிவருவதென்பதற்கு ஆட்சேபணையில்லை. கடந்த 100 வருஷங்களாக விஞ்ஞானத்தின் (Science) அதாவது அனுபவ ஞானத்தின் செல்வாக்கால் ஆஸ்திகம் எங்கும் சிதைந்தேவரும் காட்சியைக்காணலாம். இடிந்து வரும் வீட்டை அங்கும் இங்கும் முட்டு கொடுத்து வருவதைப்போல, ஆஸ்திகம், சில மெஞ்ஞானிகளால், மெஞ்ஞானத்திற்கு வெளியிலிருந்து கொண்டு தங்கள் மதப்பழக்கத்தால், சிற்சில வேதாந்த சொற்களைக்கொண்டு [Philisophical words] ஆதரிக்கப்படுவது போல் தோன்றுகின்றது. இதைத்தவிர, மற்ற எந்த இடத்திலிருந்தும் சிதைந்துவரும் மதங்களுக்கு எந்தவித ஆதரவும் இல்லை. ஆனால், ஆஸ்திகத்திற்குப் பொருளாதார ஆதரவு [Economical advantage] மட்டும் இருந்து வருவதால், இன்னும் சில காலம் மதங்கள் தள்ளாடிக் கொண்டுவரும். பொருளாதார ஆதரவும் நீக்கப்படுமேயாகில் ஆஸ்திகத்தின் செல்வாக்கு பாமர மக்கள்பால் குறைந்துவரும் என்பதற்கு ஐயமில்லை. இங்கு ஆஸ்திகத்தின் பால் ஆதரவாகக்கூறும் வாதத்தினை சற்று கவனித்து, அவ்வாதம் நமது அனுபவத்திற்கு ஒத்து இருக்கின்றதாவெனப்பார்ப்போம்.

ஆஸ்திக வாதம் முக்கியமாக மூன்று வகைத்து. அவையாவன, முதல் வாதம் கடவுளால் உலகம் சிருஷ்டிக்கப்பட்டது. இரண்டாவது உலகிலுள்ள உண்மை [Truth] அழகு [Beauty] அன்பு, [Love] கோரிக்கை [Hope or Ideal] இவ்வெண்ணங்களுக்குக் கர்த்தா ஒருவர் வேண்டும். அவர் உலகிற்கு அதீதப் புருஷராய் இருத்தல் வேண்டும், அல்லது உண்மை, அழகு, அன்பு, கோரிக்கை வடிவமாக இருக்கவேண்டும். மூன்றாவது, நீதி, நெறி, ஒழுக்கங்கள் [Morals and Ethics] கடவுளால் தான் மனிதருக்குள் ஏற்பாடு செய்திருக்கவேண்டும். இம் மூன்று வாதங்களும் நமது அனுபவத்திற்கு ஒத்திருக்கின்றனவா என்பதை விசாரிப்பாம்? இவ்வாதங்களுக்கு நாஸ்திகவாதம் என்ன விடை கூறுகின்ற தென்பதையும் பார்ப்போம்.

சிருஷ்டி வாதம் [Creation] இது வெறுஞ் சொல். ஒரு திருணத்தையாகிலும் சிருஷ்டி செய்ததை உலகம் பார்த்தறியாது. சிருஷ்டிக் கதைகள் குழந்தைகள் மழலைச்சொற்களைப்போன்றவை. ஒன்றுக்கொன்று முரணானதாகவே இருக்கின்றன. இவைகளைப் பார்க்கவேண்டியவர்கள், Life of the universe by Arhenuius, Marvellous Story cf man, என்ற புத்தகங்களை படிக்கவேண்டும். குயவன் பானையைச் செய்வது போல கடவுள் உலகத்தைச் செய்தார் என்று சொல்வதற்கும், ஒரு ஆதாரமும் கிடையாது. சிருஷ்டி என்று பழங்கதை புத்தகங்களாகிய வேதங்கள், புராணங்கள், விவில்ய நூல் [The Bible] குர் ஆன் [Kuran] முதலிய புத்தகங்கள் களில்எழுதிவுள்ளதேயொழிய,வேறு எந்தவித அனுபவ ருசுவும் [Proofs] கிடையாது. சிருஷ்டிக்கதைகளை அழகிய காவியக்கதை என்றாகிலும் (Poetic Fiction) அல்லது பழங்கதைகளாகவாவது (Folk Tales) எண்ணவேண்டும்.

ஆனால் தற்கால உலகம் எப்படி வந்திருக்குமென்பதற்கு நாஸ்திகன் அனுபவத்தைக்கொண்டு வந்த விதத்தை அனுமானிக்கின்றான். இன்றைய உலகம் நேற்றிருந்த உலகத்தினின்று பெறப்பட்டது. நேற்றிருந்த உலகம் அதற்கு முந்திய உலகத்தினின்று உண்டாயது. எது போல்? அன்றாடம் புல், பூண்டு, செடி, மரம், விருட்சம், புழு, பூச்சி, பரவை, மிருகம், மனிதன் வித்திலிருந்து வளர்வதுபோல் என அறிக. நமது குழந்தையும் நாமும் உருவமில்லாத சிறு கிருமியிலிருந்து அதாவது மனிதகருவியிலிருந்து (Human Embryo) வளர்ந்து வருவதை நாம் அன்றாடம் பார்ப்பதைப்போல்தான், இவ்வுலகமும் அதில் அடங்கிய பொருள்கள் யாவும் உண்டாகிக்கொண்டு வருகின்றன. இந்த அனுபவத்தைக்கொண்டே நாஸ்திகன், உலகங்களும் பிரபஞ்சங்களும் சராசரங்களும் அவைகளில் அடங்கிய பொருள்களும் வந்த விதத்தை அனுமானிக்கின்றான். இந்த அனுபவத்தை விஞ்ஞானத்தில் பரிணமம் (Evolution) அதாவது ஒன்றிலிருந்து பெறப்பட்டவிதம் என்று மெஞ்ஞானிகள் கூறுவர். இதனை தெரிந்துகொள்ள விருப்பமுடையவர்கள் (Picture Book of Evolution by Dennis Hird) என்ற புத்தகத்தை வாங்கிப்படிக்கலாம். உலக சிருஷ்டியை யாரும் கண்டதில்லை. ஆனால் உலகம் பரிணமிப்பதை தினம் நாம் காணும் காட்சி. நமது கண்களுக்கு முன்னே நாளைய உலகம் பரிணமிப்பதை இன்றே பார்க்கலாம். ஆதலின் மனித அனுபவம் பரிணமமே. (Evolution) வொழிய சிருஷ்டி (Creation) அல்ல. இந்த அனுபவ ஞாயத்தால்ஆஸ்திகவாதமாகிய சிருஷ்டி உபயோகமற்றதாய்விடுகிறது. நாஸ்திக வாதமாகிய பரிணமம் அனுபவத்திற்கு பொருந்தி நிற்கின்றது. உலக சிருஷ்டி கட்டுக்கதையாயின் கடவுளுக்கு என்னவேலை? இதை சமயவாதிகளே நீங்களே அறிந்து சொல்லுங்கள்.

இரண்டாவது ஆஸ்திகவாதமாகிய உண்மை, அழகு, அன்பு, கோரிக்கைகளாகிய எண்ணங்கள் (Conception) ஓர் கர்த்தா இல்லாமல் நமது மனதில் தோன்றாதென வாதிக்கும் வாதம் (Philosophers, Metaphysicians) என்று ஆங்கிலத்தில் வழங்கும், தத்துவஞானிகளும், வேதாந்த வாதிகளும் கூறும்வாதமாகும். இந்த வாதத்தைப்போல் கேவல வாதம் யாதுமில்லை. உண்மை, அழகு, அன்பு, கோரிக்கை, நமது மனத்தில் தோன்ற ஓர் கர்த்தாவேண்டுமென்றால்' பொய் (Lie) அவலட்சணம் (Ugliniss) பகை (Hatred) சோர்வு [Despair] எண்ணங்களுக்கு ஒரு கர்த்தாவேண்டுமன்றோ? அந்தகர்த்தாயாவன்? பிசாசாய் இருக்கலாமா? இந்த வாதம் சிரிப்பை உண்டாக்காமல் இராது! உண்மை பேசவேண்டுமென்ற கடமை சமூக வாழ்க்கையினின்று மற்ற உதாரகுணங்களைப்போல் எழுகின்றது. ஒருவருக்கொருவர் உள்ளதை மறைத்தால் அந்த ஜனசமூகம் நாசமாய்விடும். அதுபோலவே ஒருவரையொருவர் கொலை செய்யுங் கூட்டம், களவு செய்யுங்கூட்டம், நசித்தேவிடும். ஆனால் ஒருவரை ஒருவர் நேசிக்கும் கூட்டம், அன்பு கொள்ளும் கூட்டம் அபிவிருத்தி அடைந்தே வரும். ஏனென்று கேட்பீர்களாகில் தண்ணீர் விட்ட மரம் தழைத்தும், தண்ணீர் விடாத மரம் நசித்தும் போவது போல் எனஅறிக. மழையால் உயிர் க்ஷேமப் படுவதைப் போல், பஞ்சத்தால் உயிர் அழிவுருவதைப் போல் உயிர்கள் அன்பால் தழைக்கின்றன குரோதத்தால் அழிவுருகின்றன. இது அனுபவ காட்சி. இதுதான் இயற்கை ஒழுங்கு (Nature's order) இந்த இயற்கைகளுக்கு ஏன் ஒரு ஈசன் வேண்டுமென்று விளங்கவில்லை.

---

## "சன்மார்க்கன்"

### இடமாறுதல்.

பழனியில் சுவாமி சிவநேசம் அவர்களால் வெளியிடப் பெற்றுவந்த "சன்மார்க்கன்" என்னும் பத்திரிக்கை சில வசதிகளை முன்னிட்டு திண்டுக்கல் விஜயரங்கம் பிரசுக்கு மாற்றப்பட்டுள்ளது. இடமாறுதலுக்காக அரசாங்கத்தார் அனுமதி கிடைத்ததும், தவறிய இதழ்களுடன் மார்கழித் திங்களிலிருந்து "சன்மார்க்கன்" வெளிவருவான். காலத் தாழ்விற்கு வாசகநேயர்கள் பொருத்தருள்க.

மானேஜர்
"சன்மார்க்கன்"
திண்டுக்கல்.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இயற்கைமதம் | ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் | ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | | 0—4—0 |
| 4. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | | 0—8—0 |
| 5. | ஆராய்ச்சி அணிகலம் | ... | 0—12—0 |
| 6. | சுயமரியாதை தத்துவ கீதங்கள் | ... | 0—4—0 |
| 7. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் | ... | 2—0—0 |
| 8. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) | ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு | ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் | ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. 4—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.


## Goshaye office pillss.
## கோஷாயி ஆபீஸ் மாத்திரை



——::——

Dr. T. K. V. Chalam.

சுகானந்த சடலத்தில் தன், பகுத்தறிவை அறிந்து அறிவாகிய அருள் ஜோதியை தெரிசித்து ஆனந்தமனுபவிக்க, அல்லலற்ற சிவ ராஜயோகம் சாதித்து வருவோர்களுக்கும், முடிவுபெற்ற காரியங்களில் மனதை புகுத்தி சதா சஞ்சலம் அனுபவித்துவரும் இல்லற வாசிகளுக்கும் (ஆனந்த அருள் நீருக்கும் அழுகை கண்ணீருக்கும் உள்ள வித்தியாசம்போல்) மூலாக்கினி தகித்து வருவதினுல் வாத, பித்த, அய்யமென்னும் சிலேத்துமமும், காலாக்கிரம ஆகார தவக்கத்தினுல் முரணுகி, பித்தமதிகரித்த வெட்டையும், வாய்வும், உரவாகியது முதல். மலபந்தம், மலச்சிக்கல், மலம்தீய்தல், அன்னதுவேஷம், அசதி, இடுப்புவலி, மார்நோய், சூலை, கீல் வாய்வு, தாதுநஷ்டம், முதலியவை ஜெனிப்பது மலபந்த முள்ளோர்களின் அனுபவ சித்தி.

மேல்கண்ட உபாதையுளளோர்கள் இரவு போஜனத்துக்குப்பின் ஒரு மாத்திரையை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்து ஒன்றிரண்டாய் மென்று ஜலம்விட்டு கொப்பளித்து (கொப்பளித்து) சாப்பிட்டால் வாய்வுகளை கலைத்து வெளியாக்கி மலம் தாராளமாய் கழிக்கும். சுரவரம், தைலஸ்ஞனம் முதலிய யாவும் வழக்கம்போல் நடத்திக்கொள்ளலாம். ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணம் பெறக் கூடிய கோஷாயி ஆபீஸ் மாத்திரை 51 கொண்ட சீசா 1-க்கு 1—10—0; 101 கொண்ட மாத்திரை சீசா 1-க்கு ரூ. 3—0—0 வி. பி. பேக்கிங் சார்ஜ் வேறு. சிலோன், சிங்கப்பூர் முதலிய வெளி நாட்டார்கள் ஆர்டருடன் ரூ. 1—12—0 சேர்த்து மணியார்டர் செய்யவும்.

*Proprietor.* T. K. வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ethiraj, Cholera Bairi)
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

## பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்ச்சுருக்கு, எரிச்சல், குத்தல், உடனே நிற்கும். நிச்சயமாய் 3 வேளையில் குணம் தரும். தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2—0—0.

### கெர்ப்ப என்ணெய்.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும், கர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீக்கி கெர்ப்பமுண்டாகும். புட்டி 1க்கு விலை ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

எமது கியாட்லாக்

## இனம்!

சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன. விபரத்திற்கு எழுதுங்கள்.

### ஸ்கலித நிவாரணி.

பலஹீனத்தினாலும், உஷ்ணத்தினாலும், தூக்கத்திலும், சொப்பனத்திலும், இந்திரியம் தானாக வெளிப்படுவதை நிற்பாட்டி தேகத்திடத்தைத்தரும். புட்டி ஒன்றுக்கு ரூ. 2—0—0.

## மலையப்பசாமி,
வைத்தியசாலை, பழநி. S. I.


### சுயராஜியம் யாருக்கு?

——:0:——

தோழர் ம. சிங்காரவேலுபி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

மக்கட்பேறினும் சிக்கனம் நன்று.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோதத்யா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணா. 0—2—0

## கடவுளும், பிரபஞ்சமும்.

"கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெளியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரண்ன கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என் எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் ஈ. ரா. கம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.